கல்கி



KALKI ஏப்ரல் 18, 1954 4 அணா

நாளுக்கு நாள் அதிக தெளிவான,

எழிலோங்கும் சருமம்



கேடில் கலந்த ரெக்ஸோனு இந்த அற்புத வேலையைச் செய்யட்டும்.

ரெக்ஸோனுவின் கேடில் கலந்த நுரையை உங்கள் சருமத்தில் மெதுவாகத் தேய்த்து, பிறகு கழுவுங்கள். உங்கள் சருமம் நாளுக்கு நாள் அதிக மழமழப்பும், தெளிவும் பெறுவதைக் காண்பீர்கள். அதனுல் புதுப் பொலிவுடன் விளங்குவீர்கள்.

ரெக்ஸோனு

கேடில்* கலந்த சோப் இதுவொன்றே

*சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.

RP. 117-50 TM

ரெக்ஸோனு ப்ரொப்ரைட்டரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது.

கல்கி

மலர் 13 இதழ் 38

ஜய ௵ சித்திரை 6

1954 ஏப்ரல் 18

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

புயல் வீசுகிறது!



பிரஞ்சிந்தியாவில் பிரஞ்சு ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் சத்தியாக்கிரஹ இயக்கம் நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகிறது.


பாரதத்தின்
பெருமைதரும் பொக்கிஷம்
சிக்கனத்தில்
சிறப்பு
கவர்ச்சியொடு
கண்ணியம்
கோ-ஆப்டெக்ஸ் ஆடைகள்
உயர் மதிப்பு நீடிய உழைப்பு
பார்வைப் பொலிவு விலை மலிவு
எல்லாம் பொருந்தியவை
Co-optex
FABRICS
SOLD THROUGHOUT THE COUNTRY
THE MADRAS STATE HANDLOOM WEAVERS' CO-OP. SOCIETY LTD.
34, PANTHEON ROAD, EGMORE, MADRAS-8

கல்கி

மலர் 13 | தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 38

வருந்தி அழைக்கிறார்கள்!

அகில உலகையும் அல்லோல கல்லோலப் படுத்தக் கூடிய மூன்றாவது மகா பயங்கர யுத்தம் வருமா?—இந்தக் கேள்வி அடிக்கடி உலக மக்களின் செவிகளில் ஓயாமல் ஒலித்து வருகின்றது.

ஆனால் அத்தகைய யுத்தம் தானாக வரும் வரையில் சிலர் காத்திருக்க விரும்பவில்லை என்று தோன்றுகிறது.

அத்தகையோர் மூன்றாவது மகா யுத்தத்தை வருந்தி அழைத்துக் கொண்டு வந்து உலகத்தின் முன்னிலையில் நிறுத்தப் பார்க்கிறார்கள்.

இந்தக் கைங்கர்யத்தில் இப்போது அமெரிக்க சர்க்கார் தலைவர்கள் முனைந்திருக்கிறார்களோ என்று எண்ணவேண்டியிருக்கிறது.

இந்தோ சீனா விஷயமாக இப்போது அமெரிக்கா விடுத்துள்ள எச்சரிக்கை, உலக மகா யுத்தத்தை வெகு சமீபத்தில் இழுத்துக் கொண்டு வருவதாக இருக்கிறது.

*　*　*　*

இந்தோ சீனாவில் ஆதிக்கம் செலுத்தி வந்த பிரஞ்சுக்காரர்கள் சென்ற மகா யுத்தத்தின் போது தங்கள் ஆதிக்கத்தை விட்டு விட்டு அங்கிருந்து ஓட்டம் பிடித்தபின், அங்கு ஜப்பானியர்களின் ஆட்சி ஏற்பட்டது அல்லவா?

அந்த யுத்தத்தில் இறுதியாக வெற்றி பெற்ற வல்லரசுகள், ஜப்பானியர் தோல்வி அடைந்த பின் இந்தோ சீனாவை இந்தோ சீன மக்களிடம் ஒப்புவித்து விட்டு, அதாவது அந்த நாட்டுக்குச் சுதந்திரம் அளித்து விட்டுத் திரும்பியிருக்க வேண்டும். அவ்வாறு செய்திருந்தால் இன்று உலக நாடுகளின் கவனத்தை இழுத்துள்ள, உலகத்தைக் கலங்க வைக்கும் இந்தோ சீனப் பிரச்னையே ஏற்பட்டிராது.

ஜப்பானியரின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட இந்தோ சீன மக்களுக்குச் சுதந்திரம் கிடைத்திருக்குமாயின், அவர்கள் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் முதலிய வல்லரசுகளுக்கு என்றென்றும் நன்றிக் கடன் பட்டிருப்பார்கள்.

ஆனால் அதற்கு மாறாக, பிரான்ஸ் தேசம் இந்தோ சீனாமீது மறுபடியும் தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்த முற்பட்டது.

அதன் விளைவாக இந்தோ சீனர்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் மூண்ட யுத்தம் ஏழு வருஷங்களாகியும் இன்னும் நிற்கவில்லை.

மேற்படி யுத்தத்தில் வெற்றி பெறுவதற்காகப் பிரஞ்சுக்காரர்கள் தங்களுடைய புத்தி, யுக்தி, ஆயுத சக்தி எல்லாவற்றையும் உபயோகித்துப் பார்த்து விட்டார்கள்.

போதாக்குறைக்கு அமெரிக்காவும், பிரான்சுக்கு அபரிமிதமான தொகையும் ஆயுத வகைகளும் கொடுத்து உதவி செய்து வந்தது; இன்றும் செய்து வருகிறது.

அப்படியிருந்தும் பிரஞ்சுக்காரர்கள் வெற்றிபெற முடியவில்லை.

இந்தோ சீனாவைச் சேர்ந்த பல பகுதிகள் பிரஞ்சுக்காரர்களை எதிர்த்துப் போரிட்டு வரும் சுதந்திர வாதிகளான வியட்மின்களின் வசம் இருந்து வருகின்றன.

மிகவும் திறமைசாலிகள் என்று புகழ்பெற்ற தளபதிகளை ஒருவர் பின் ஒருவராகப் பிரஞ்சு சர்க்கார் நியமித்து, இந்தோ சீன யுத்தத்தை நடத்தச் செய்தார்கள்; துருப்புகளையும் போர்த்தளவாடங்களையும் அந்நாட்டுக்குக் கொண்டுபோய்க் குவித்தார்கள்.

எவ்வளவோ முயற்சி செய்தும், எத்தனையோ தந்திரங்களைக் கையாண்டும் அவர்களைப் பிரஞ்சுக்காரர்களால் தோற்கடிக்க முடியவில்லை.

எனவே, ஏழு ஆண்டுகளாகியும் யாதொரு பலனையும் அளிக்காத போரை நிறுத்தி விடவேண்டும் என்ற அபிப்பிராயம் பிரஞ்சு மக்களிடையே பலம் அடைந்து வருவதைக் குறித்து ஆச்சரியப் படுவதற்கில்லை.

இந்தோ சீன மக்களுக்குச் சுதந்திரம் கொடுப்பதாகக் கூறி, கொஞ்ச நஞ்சமுள்ள கௌரவமாவது குலைந்து போகாமல் இந்தோ சீனப் பிரச்னையைத் தீர்க்க வேண்டும்

என்ற எண்ணம் பிரஞ்சு சர்க்கார் தலைவர்களிடையே ஏற்பட்டு வருகிறது.

இந்நிலைமையில் அமெரிக்கா பிரஞ்சு சர்க்காருக்கு நேர்மையான யோசனை கூறியிருக்குமாயின், இந்தோ சீனாவில் நடந்துவரும் கரபலிகள் நின்று அமைதி ஏற்பட வழி பிறந்திருக்கும்.

துரதிர்ஷ்டவசமாக அமெரிக்கா அத்தகைய நல்ல காரியத்தைச் செய்யாததுடன், இந்தோ சீனப் பிரச்னை மேலும் மோசமாகும்படியான விபரீதத்தில் இறங்கியிருக்கிறது.

அதாவது இந்தோ சீனப் போரில் சீனா தலையிடும் பட்சத்தில், சீனாவை முழு பலத்துடன் தாக்க அமெரிக்கா தயங்காது என்று கடும் எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

அமெரிக்காவின் மேற்படி எச்சரிக்கை பிரிட்டனையும் பிரான்சையுமே திகைக்கும்படி செய்திருக்கிறது எனில், உலக அமைதியை நாடும் மற்ற தேசங்களைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை.

அவ்விஷயமாக பிரிட்டன், பிரான்ஸ் இவ்விரு நாடுகளின் திகைப்பைப் போக்குவதற்காக அமெரிக்க உள்நாட்டு மந்திரி ஸ்ரீ டல்லஸ் ஐரோப்பாவுக்கு விரைந்து சென்று திரும்பியுள்ளார்.

•• •• ••

ஜினிவாவிலே ஏப்ரல் மாத இறுதியில் ருஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் முதலிய வல்லரசுகள் அடங்கிய மகாநாட்டை நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

அந்த மகாநாட்டில் விவாதிக்கப்பட வேண்டிய மிக முக்கியமான விஷயங்களில் இந்தோ சீனாவைப் பற்றிய விவகாரமும் ஒன்று.

இந்த நிலைமையில் அமெரிக்கா அவ்விதம் எச்சரிக்கை செய்திருப்பது ஜினிவா மகாநாடு நடப்பதற்கே முட்டுக் கட்டையாக அமைந்திருக்கிறது.

அதாவது ஹைட்ரஜன் குண்டுகளைப் பரிசோதனை செய்து உலகத்தையே நடுக்கிடும்படி செய்துள்ள அமெரிக்கா, எந்தப் பிரச்னையையும் சமரசமாகத் தீர்த்துக் கொள்ள விரும்பவில்லை, சம்பந்தப்பட்ட நாடுகளை மிரட்டிப் பணிய வைக்கவே விரும்புகிறது என்பதையே மேற்படி எச்சரிக்கை சுட்டிக் காட்டுகிறது.

அதனால்தான், அணுகுண்டுகளையும் ஹைட்ரஜன் குண்டுகளையும் சுட்டிக் காட்டி ஒரு தேசத்தை மற்றொரு தேசம் மிரட்டி வரும் விபரீதம் ஒழிய வேண்டும் என்று பண்டித ஜவாஹர்லால் நேரு சென்ற வாரம் உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொரியாவில் போர் நின்றிருப்பது போல் இந்தோ சீனாவிலும் நிற்க வேண்டும். இந்தோ சீனாவில் நடந்து வரும் கரபலியை நீடிக்கவிடக் கூடாது. உலகப் பிரச்னைகளை ஒட்டி விவாதித்து முடிவு காண்பதற்காக ஜினிவாவில் மகாநாடு நடக்கப்போகும் இச் சமயத்தில், சுமுகமான சூழ்நிலை ஏற்படும்படி செய்ய வல்லரசுகள் முயற்சிக்க வேண்டும். ஆத்திர மூட்டவும் ஹைட்ரஜன் குண்டைக் காட்டி மிரட்டவும் இது சமயம் அல்ல என்று நேருஜி கூறியிருக்கிறார்.

இணையற்ற ஆயுத வலிமை வாய்ந்துள்ள அமெரிக்காவுக்கு உலகத்தில் நிரந்தரமான அமைதி ஏற்படும்படி செய்யச் சக்தி இருக்கிறது; உலகம் முழுவதையும் அல்லோல கல்லோலப் படுத்தி மானிட வர்க்கம் அதோகதியாகும்படி செய்யவும் வல்லமை இருக்கிறது.

இவ்விரண்டு பாதைகளின் சந்தியில் நின்று கொண்டிருக்கும் அமெரிக்கா எந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளப் போகிறது என்பது இன்னும் யாருக்கும் தெளிவாகவில்லை.

நல்ல ஆரம்பம்

புத்தாண்டு முதல் தினத்தில் அரசாங்கப் பொறுப்பு ஏற்ற முதன் மந்திரி ஸ்ரீ காமராஜ நாடார் நல்ல முறையில் தமது நிர்வாகத்தைத் தொடங்கியிருக்கிறார்.

பழைய ராஜாஜி மந்திரி சபையில் இருந்தவர்களில் ஐந்து பேரைப் பொறுக்கித் தம்முடைய மந்திரி சபையில் சேர்த்துக் கொண்டிருக்கிறார். புதிய மந்திரி சபையில் பழைய மந்திரிகளே பெரும்பான்மையோரா யிருக்கிறார்கள்.

ராஜாஜியின் நேர்மையான நிர்வாகம் புதிய ஆட்சியில் சீர்குலைந்து விடாது என்பதற்கு இது நல்ல சகுனமாக அமைந்திருக்கிறது.

முக்கியமாக, கனம் எம். பக்தவத்சலம் அவர்களையும் கனம் சி. சுப்பிரமணியம் அவர்களையும் வற்புறுத்தி "நீங்கள் புதிய மந்திரி சபையில் இருக்கத்தான் வேண்டும்" என்று சொல்லிச் சேர்த்துக் கொண்டது பாராட்டுக்குரியது.

ஸ்ரீ சி. சுப்பிரமணியம், ஸ்ரீ காமராஜ நாடாருக்குப் போட்டியாகத் தலைமைப் பதவிக்கு நின்றவர். அவருடைய பெயரைப் பிரேரேபணை செய்தவர் ஸ்ரீ எம். பக்தவத்சலம். ஆயினும் புதிய மந்திரி சபையில் இவ்விருவரும் முக்கியமான பொறுப்புக்களை வகிக்கப் போகிறார்கள்.

கனம் எம். பக்தவத்சலம் அவர்களின் அரசாங்க நிர்வாகத் திறமை அனைவரும் அறிந்தது. ஆறு மாதங்களுக்கு முன் ராஜாஜி மந்திரி சபையில் ஸ்ரீ எம். பக்தவத்ஸலம் விவசாய இலாக்காவை ஒப்புக் கொண்டது முதல் அந்த இலாக்காவுக்கே புத்துயிர் உண்டாகியிருந்தது.

ஸ்ரீ சி. சுப்பிரமணியம் ராஜாஜி மந்திரி சபையில் மிக முக்கியமான பொறுப்புகளை வகித்துத் திறம்பட நடத்தி வந்தார். நிர்வாகத் திறமையைத் தவிர, சட்ட சபையில் வாக்கு வன்மையுடன் பேசவும், நேர்மையான வாதங்களுக்கு நல்ல முறையில் பதில் சொல்லவும், வீண் குதர்க்க வாதங்களைப் பொடிப் பொடியாக்கித் தகர்த்தெறியவும் அவர் ஆற்றல் உள்ளவர் என்பதைக் கண்டோம். ராஜாஜியின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமாகியிருந்து அவருடைய திட்டங்களைத் தம்முடைய சொந்தத் திட்டங்களாகவே கொண்டு நடத்தி வந்ததையும் பார்த்தோம்.

இந்த இரு பழைய மந்திரிகளையும், இன்னும் ஸ்ரீ ஏ. பி. ஷெட்டி, ராமநாதபுரம் ராஜா, ஸ்ரீ மாணிக்கவேலு நாயகர் இவர்களையும், மொத்தம் எட்டுப் பேர் கொண்ட தமது மந்திரி சபையில் சேர்த்துக் கொண்டு ஸ்ரீ காமராஜ நாடார் தமது நிர்வாகத்தைத் தொடங்கியிருப்பது பாராட்டுதற் குரியதாகும்.

இவ்விதம் நல்ல சகுனத்துடன் ஆரம்பமாகியிருக்கும் புதிய நிர்வாகம் இவ்விதமே தொடர்ந்து நல்ல முறையில் நடந்து வெற்றிபெற வேண்டும் என்று விரும்புகிறோம்.

புதிய மந்திரி சபை வெற்றி அடைந்தால், நாட்டில் வீண் அரசியல் குழப்பம் இன்றி மக்க

ளின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தலாம் என்பது ஒருபுறமிருக்க, ஸ்ரீ காமராஜ நாடாரின் நிர்வாக வெற்றி இன்னொரு விதத்தில் பெரும் பயன் அளிக்கக் கூடியதாகும்.

நமது மக்களில் அநேகரை இன்னமும் பிடித்து ஆட்டிக் கொண்டிருக்கும் ஆங்கில பாஷை மோகம் இதன் மூலம் நிவர்த்தியாக இடம் உண்டு.

ஆங்கில மொழியில் நல்ல பயிற்சி உள்ளவர்களும் பி. ஏ. பி. எல். பட்டதாரிகளுந்தான் அரசாங்கத்தை நடத்த முடியும் என்னும் குருட்டு நம்பிக்கை தவிடுபொடி யாகிவிடும்.

தமிழன்னையின் சிறப்புக்கும் தமிழின் உயர்வுக்கும் இது மிக உகந்த காரியமா யிருக்கும் என்பதில் சந்தேகம் என்ன இருக்க முடியும்!

அறிவுக்குத் தடை!

பாகிஸ்தான் சர்க்கார், வியாதி முற்றிய பின் வைத்தியரை நாடிச் சென்ற கதையாகக் காரியங்களைச் செய்ய முற்பட்டார்கள். அவர்களுடைய நிர்வாக ஊழல்கள் பாகிஸ்தான் மக்களுக்கு மிகுந்த அதிருப்தியை உண்டாக்கின. மேற்படி அதிருப்தியை ஓரளவு குறைப்பதற்காக, ஆறு வருஷங்களாகச் சிறைப்பட்டிருந்த எல்லை காந்தி கான் அப்துல் கபார்கானை விடுதலை செய்தார்கள். எனினும் அவருக்கு விதிக்கப்பட்ட தடைகளைப் பாகிஸ்தான் சர்க்கார் அறவே நீக்கவில்லை; செஞ்சட்டைப் படையினர் மீது விதித்திருந்த தடைகளையும் அகற்றவில்லை. இதுபோன்ற பல விஷயங்களை ஒட்டியும் பாகிஸ்தான் சர்க்கார் கையாண்ட முறைகள் பாகிஸ்தான் மக்களுக்கு மிகுந்த ஆத்திரத்தையும் மனக் கொதிப்பையும் உண்டாக்கின. அதற்குப் பதிலாக அவர்கள், கிழக்குப் பாகிஸ்தானில் நடந்த தேர்தலில் பாகிஸ்தான் சர்க்கார் கட்சியான முஸ்லிம் லீக் கட்சியைப் படுதோல்வியுறும்படி செய்து விட்டார்கள்.

கான் அப்துல் கபார்கான் சிறையிலிருந்து விடுதலை அடைந்ததும் ரத்தினச் சுருக்கமாகத் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

"பாகிஸ்தானில் தலைசிறந்த தலைவர்கள், ராஜதந்திரிகள் யாருமே இல்லை" என்று எல்லை காந்தி கான் அப்துல் கபார்கான் கூறினார்.

ஆம், அத்தகைய தலைவர்கள் பாகிஸ்தானில் இருந்திருந்தால், பாகிஸ்தான் சர்க்கார் அமெரிக்காவுடன் இராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டிருக்க மாட்டார்கள். குறிப்பாக, சகல ஆசியா நாடுகளும் எதிர்க்கும் அந்த விபரீதத்துக்கு அவர்கள் இடம் கொடுத்திருக்க மாட்டார்கள்.

* * *

பாகிஸ்தானில் தற்போதுள்ள அரசியல் நிர்ணய சபை உண்மையான பிரதிநிதித்துவம் வாய்ந்த ஸ்தாபனம் அல்ல என்று கான் அப்துல் கபார்கான் சில தினங்களுக்கு முன் மேற்படி சபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்.

கிழக்குப் பாகிஸ்தானில் நடந்த தேர்தலில் தொண்ணூறு சத விகிதத்துக்கு மேற்பட்ட ஸ்தானங்களைப் பெற்றுள்ள ஐக்கிய முன்னணிக் கட்சியும் இதே அபிப்பிராயத்தை வற்புறுத்தி வருகிறது. இதனால் பாகிஸ்தான் அரசியலிலே பெரும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

கிழக்குப் பாகிஸ்தானில் பத்து ஸ்தானங்கள் கூடப் பெற முடியாத முஸ்லிம் லீகர்கள் நிறைந்த அரசியல் நிர்ணய சபையில், அப்துல் கபார்கானின் தீர்மானம் நிறைவேறாததைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை. எனினும், இணையற்ற அந்தத் தலைவரின் கருத்தை அரசியல் நேர்மையும் ஜனநாயக தர்மத்தில் பற்றுதலும் உள்ள எவரும் ஆட்சேபிக்க மாட்டார்கள்.

"பாகிஸ்தானின் மூத்த சகோதரன் போன்ற கிழக்குப் பாகிஸ்தானில் பெரும்பாலான மக்கள் இருக்கின்றனர். அவர்கள், முஸ்லிம் லீகர்கள் அதிகாரத்தில் இருக்க லாயக்கற்றவர்கள் என்று தீர்ப்புக் கூறி விட்டார்கள். இந்நிலைமையில் முஸ்லிம் லீகர்கள் நிறைந்த இந்த அரசியல் நிர்ணய சபை அரசியல் திட்டத்தை உருவாக்கும் முயற்சியை இத்துடன் நிறுத்திவிட வேண்டும். இந்தச் சபை அமைக்கப்பட்டு ஏழு வருஷங்களாகியும் இன்னும் அரசியல் திட்டம் தயாராகவில்லை. பாகிஸ்தான் மந்திரி சபைக்கு உள்ளேயே அபிப்பிராய பேதமும் பரஸ்பர சந்தேகமும் ஒற்றுமை யின்மையும் தாண்டவ மாடுகின்றன. இந் நிலைமையில் இந்தச் சபை அரசியல் திட்டத்தை உருவாக்க முற்படுவது ஜனநாயக விதிகளுக்கு முற்றிலும் முரணானது" என்று கான் அப்துல் கபார்கான் சுட்டிக் காட்டி யுள்ளார்.

இன்று உலகம் பின்பற்ற வேண்டியது அஹிம்சையே; எக்காலத்திலும் பலாத்காரத்தினால் உலகப் பிரச்னைகள் தீர்க்கப்பட்டதில்லை என்றும் எல்லை காந்தி கராச்சியில் நிகழ்த்திய பிரசங்கத்தில் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

தனிச் சிறப்பு வாய்ந்த இப்பேர்ப்பட்ட உயர்ந்த தலைவரின் அறிவுரைகளால் பலன் அடையாமல், அறிவுக்குத் தடை விதிப்பதுபோல் அந்த உத்தமத் தலைவருக்குப் பலவித தடைகள் விதித்திருக்கும் பாகிஸ்தான் சர்க்காரின் விபரீதமான போக்கு மிகவும் வருந்தத் தக்க தல்லவா!

வாழ்த்துக் கூறுகிறோம்

சென்னை உபாத்தியாயர்கள் தொகுதிக்கு அபேட்சகர்களாக நின்ற ஆறு பேர்களில் ஸ்ரீ ஈ. எச். பரமேசுவரனும், ஸ்ரீ ஜி. கிருஷ்ணமூர்த்தியும் சென்னை மேல் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்விருவரும் ஏற்கெனவே மேல் சபையில் அங்கத்தினர்களாக இருந்து உபாத்தியாயர்களுக்காகப் பெரிதும் தொண்டாற்றி யிருக்கிறார்கள். உபாத்தியாயர்களின் நலன்களுக்காகவும் கல்விச் சீர்திருத்தத்துக்காகவும் பாடுபட்டிருக்கிறார்கள். மறுபடியும் அவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதன் மூலம் அவர்கள் உபாத்தியாயர்களின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் என்பது வெளியாகிறது. குழந்தைக் குலத்தை உய்விக்கப் பாடுபடும் உபாத்தியாயர்களின் தொண்டு புனிதமானது. அந்தத் தொண்டில் ஈடுபட்டுள்ள உபாத்தியாயர் சமூகத்துக்குச் சேவை செய்வது மிகவும் போற்றத் தக்கது அல்லவா! உபாத்தியாயர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரராகி, தேர்தலில் வெற்றிபெற்றுள்ள ஸ்ரீ பரமேசுவரனுக்கும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்கும் நமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடல் தாண்டிப் புகழ் பெற்றார்

திரை கடலோடியும் திரவியம் தேடு என்பது முதுமொழி. ஆனால் வீரத் தமிழரும் யாழ்ப்பாண வாசியுமான ஸ்ரீ மூ. நவரத்னசாமி இன்னும் ஒருபடி மேலே சென்று விட்டார். திரை கடலைத் தாண்டி, திரவியத்தைக் காட்டிலும் மேன்மையான அழியாப் புகழைத் தேடிக் கொண்டுள்ளார்.

நீச்சு வீரர் ஸ்ரீ நவரத்னசாமி இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள பாக் ஜலசந்தியை நீந்திக் கடப்பதென்று உறுதி கொண்டார். அது முப்பத்துநாலு மைல் தூரம் உள்ளது. சாதாரணமாக அலைகடலைப் பார்ப்பதற்கே பயமாக இருக்கும். அதிலும் மலைபோல எழும்பி மோதும் அலைகளில் இறங்கி எதிர் நீச்சல் போடத் துணிவது என்பது நினைத்துப் பார்க்கும் காரியமல்ல. கடலில் ஆளை விழுங்கும் திமிங்கிலங்களும் இன்னும் எத்தனையோ பயங்கர ஜந்துக்களும் வாழ்ந்து வருகின்றன. இவைகளுக்கெல்லாம் சிறிதும் அஞ்சாமல் உப்பு நீரில் குதித்து முப்பத்திநாலு மைல் தூரத்தைக் கடக்கத் துணிந்ததே வியப்பளிக்கும் செயலாகும். தண்ணீரில் ஒரு சில நிமிஷங்கள் அதிகமாகத் தங்கி விட்டாலே தோல் சுருங்கி உடல் மரத்துப் போய்விடும். ஸ்ரீ நவரத்தினசாமி கடலில் பல மணி நேரங்கள் ஓயாது கையையும் காலையும் மாற்றி மாற்றிப் போட்டு நீந்துவதற்குத் துணிந்து கடலில் இறங்கி விட்டார்.

முதல் தடவையாக அவர் சென்ற மாதம் அந்த முயற்சியில் ஈடுபட்டபொழுது இருபத்திரண்டு மைல்கள் தூரம் நீந்திச் சென்ற பின் முயற்சியைக் கைவிட வேண்டியதாயிற்று. சுழற்காற்று அடித்ததே அதற்குக் காரணம் ஆகும். அவர் அத்துடன் சோர்வு அடைந்து விடாமல், இரண்டாவது தடவையும் முயற்சி செய்து, இருபத்தேழு மணி நேரத்தில் பாக் ஜலசந்தியைக் கடந்து கோடிக் கரை வந்து சேர்ந்தார்.

உலகத்திலே இதற்கு முன் எவரும் இவ்வளவு அதிக தூரம் நீந்திச் சென்றதில்லை. எனவே, உலகத்திலேயே எவரும் செய்திராத காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்த ஸ்ரீ நவரத்னசாமி உலக நாடுகளின் பாராட்டுதலுக்கு உரியவராகி யிருப்பதைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை. தற்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ள எலிஸபெத் மகாராணி உலகப் புகழ் பெற்றுத் திகழும் நீச்சல் நிபுணரான ஸ்ரீ மூ. நவரத்னசாமியின் வீரத்தையும் செயற்கரிய சாகசத்தையும் நேரில் பாராட்டினர்.

எடுத்த காரியத்தில் விடாமுயற்சியும் நெஞ்சுறுதியும் உள்ளவர்கள் உலகத்திலேயே எவரும் சாதித்திராத காரியத்தைச் சாதித்துப் புகழ்பெற முடியும் என்பதற்கு ஸ்ரீ நவரத்னசாமியின் வெற்றி எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

புத்தாண்டுப் பரிசு

ஆறு ஆண்டுகளுக்கு முன்னால் திரு. டி. எஸ். அவிநாசிலிங்கம் கல்வி மந்திரியா யிருந்தபோது அவருடைய பெருமுயற்சியினால் "தமிழ் வளர்ச்சிக் கழகம்" ஆரம்பிக்கப்பட்டது. "தமிழ் இதுகாறும் வளராமலா இருந்து வருகிறது! இவர்கள் என்ன புதிதாகத் தமிழை வளர்த்து விடப் போகிறார்கள்!" என்றும் "தமிழ்த்தாய் ஏற்கெனவே கிழவியாகி விட்டாள். அவளை இன்னும் வளர்ப்பது எப்படி!" என்றும் அக்காலத்தில் சிலர் கேலி செய்ததுண்டு. இவற்றைப் பொருட்படுத்தாமல் தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் தங்கள் முயற்சிகளைச் செய்து வந்தார்கள். ஆண்டுதோறும் தமிழ் விழா நடத்தினார்கள். பல துறைகளிலும் வெளியான புதிய தமிழ்ப் புத்தகங்களுக்குப் பரிசுகள் வழங்கினார்கள்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பணிகளுக்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல் ஜயவருஷப் பிறப்பு தினத்தில் தமிழர்களுக்குப் புத்தாண்டுப் பரிசாகக் "கலைக் களஞ்சியம்" முதல் புத்தகம் வெளியாகி யிருக்கிறது.

கல்கி தீபாவளி மலர் அளவில் 742 பக்கம் கொண்ட இந்த அரும் பெரும் நூலை ஓர் அறிவுக் கருவூலம் என்றும் கலைப் பொக்கிஷம் என்றும் கூறுவது உயர்வு நவிற்சி ஆகாது. இந்நூல் 'அ' எழுத்துடன் ஆரம்பித்து, 'இ' எழுத்தை முதல் வார்த்தையாகக் கொண்டு தொடங்கும் சொற்களில் பாதியுடன் முடிகின்றது. அப்படியென்றால், இதை ஓர் அகராதி நூல் என்று கருதலாகாது. ஆங்கிலம் அறிந்தவர்களுக்கு 'Encyclopedia' என்று சொன்னால் எளிதில் விளங்கி விடும். மற்றவர்கள் புத்தகத்தைப் பார்த்தால்தான் இதன் சிறப்பை நன்கு அறிந்து கொள்ள முடியும். இந்த முதல் புத்தகத்தைத் தொடர்ந்து வெளியாகப் போகும் இன்னும் ஒன்பது புத்தகங்களுடன் பத்து புத்தகங்களும் ஒருவரிடம் இருந்து விட்டால், வானுலகத்திலோ மண்ணுலகத்திலோ உள்ள எந்தப் பொருளைப் பற்றியும் தத்துவத்தைப் பற்றியும் 'எனக்குத் தெரியாது' என்று அவர் சொல்ல வேண்டிய அவசியம் நேராது. அகஸ்தியரைப் பற்றித் தெரிய வேண்டுமா! அனுகுண்டைப் பற்றி அறிய வேண்டுமா! அஜந்தாவைப் பற்றியோ, அல்லி மலர்க் குலத்தைப் பற்றியோ விவரம் வேண்டுமா!

அவயவச் சீரியல் (Orthopaedics) என்றால் என்ன, அவதூறுச் சட்டத்தின் நுட்பங்கள் என்ன, அசோகரும் அக்பரும் எத்தகைய ஆட்சி முறைகளைக் கையாண்டார்கள், ஆழ்கடல் விலங்குகள் எவ்வாறு உயிர் வாழ்கின்றன, அனோபிலீஸ் என்னும் கொசு சாதியில் எத்தனை இனங்கள் உண்டு, உலகில் பெரிய அணைக்கட்டுகள் எங்கெங்கு உள்ளன, அத்வைதத்தின் முக்கிய தத்துவங்கள் யாவை, ஆகாசக் கப்பல்கள் எப்படி வானத்தில் பறக்கின்றன, அம்பெலி பெரிகுடும்பத்தில் என்னென்ன செடிகள் சேர்ந்தவை, இந்துஸ்தானி சங்கீதத்தின் வரலாறு யாது! இந்தோ—சீனவிலுள்ள சிற்பங்கள் எந்த நாட்டுக் கலைப் பாணியைச் சேர்ந்தவை!

இம்மாதிரி ஆயிரமாயிரம் விஷயங்களைப் பற்றிய விவரங்கள் அறிந்து தெளிவதற்கு ஏற்ற முறையில் எளிய பிழையற்ற தமிழ் நடையில் இந்நூலில் தரப்பட்டிருக்கின்றன.

அந்தந்தப் பொருள் பற்றித் தரப்பட்டிருக்கும் விவரங்களை விளக்கும் முறையில் நூற்றுக் கணக்கான படங்கள் இந் நூலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வர்ணச் சித்திரப் படங்கள், புகைப்

படங்கள், ரேகைப் படங்கள், பூகோளப் படங்கள்—இவ்வாறு எல்லாவிதப் படங்களும் இருக்கின்றன.

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் சில அரிய சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. அப்படிக் கிடைக்கும் சந்தர்ப்பங்களைத் தக்கபடி உபயோகப் படுத்திக் கொள்வதிலேதான் மனிதனுடைய ஆற்றல் வெளியாகிறது. ஸ்ரீ டி. எஸ். அவிநாசிலிங்கம் அவர்களுக்கு ஆறு ஆண்டுகளுக்கு முன்பு அத்தகைய சந்தர்ப்பம் ஒன்று வாய்த்தது. அதை அவர் நன்கு உபயோகப் படுத்திக் கொண்டு தமிழ்த் தாய்க்கு இந்த அரும் பெரும் பணியைத் தொடங்கினார். தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் அங்கத்தினர்கள் பலர் அவருடன் ஒத்துழைத்து உதவிய போதிலும், ஸ்ரீ டி. எஸ். அவிநாசிலிங்கம் அவர்களே அக் கழகத்தின் பாரம் முழுவதையும் தனிப் பொறுப்பாகத் தாங்கி வந்தார். ஆனால் "கலைக் களஞ்சியம்" வெளியிட்ட பெருமையை அவருடன் பகிர்ந்து கொள்ளக் கூடியவர் ஒருவர் உண்டு. அவர் ஸ்ரீ பெரியசாமித் தூரன். உயர்தரப் பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்து பணி ஆற்றியவர் ஸ்ரீ பெரியசாமித் தூரன். அதை விட்டுக் "கலைக் களஞ்சிய"த் திருப்பணியை ஒப்புக் கொண்டார். அல்லும் பகலும் பொறுமையுடனும் இடை விடா ஊக்கத்துடனும் உழைத்தார். நாடெங்கும் உள்ள நூற்றுக் கணக்கான அறிஞர்களின் கூட்டுறவைப் பெற்றார். ஒவ்வொரு அறிவியல் துறையில் நிபுணர்களாக உள்ளவர்களிடமிருந்து அந்தந்தத் துறைக்குரிய பொருள்களைப் பற்றிக் கட்டுரை வாங்கிச் சேர்த்தார். அவருடைய இணையற்ற உழைப்பின் பயனாகவே இப்போது "கலைக் களஞ்சியம்" முதற் பகுதி வெளியாகியிருக்கிறது.

இந்தியா தேசத்துப் பிரதேச மொழிகளில் முதன் முதலில் இவ்வளவு பெரிய அளவில் "கலைக் களஞ்சியம்" வெளியாவது தமிழ் மொழியிலே தான் என்பதை எண்ணி நாம் பெருமை கொள்ளலாம்.

இந்தப் பெரும் பணிக்கு ஆகும் மொத்தச் செலவை விகிதாசாரப்படி பகிர்ந்து புத்தகத்துக்கு விலை வைத்தால், பத்து புத்தகங்களுக்கும் ரூ. 750 வைக்க வேண்டியதாயிருக்கும். இவ்வளவு அதிக விலைக்குப் புத்தகங்களை விற்பது அசாத்தியமாயிருக்குமாதலால், குறைந்த விலைக்குக் கொடுக்க இயலும் பொருட்டு வேறு சாதனங்களைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் தேடினார்கள். பாரத அரசாங்கத்தாரும் மாகாண அரசாங்கத்தாரும் இந்தப் பெரும் பணிக்குப் பண உதவி புரிந்துள்ளார்கள். தனிப்பட்டவர்கள் பலரும் நன்கொடைகள் அளித்திருக்கிறார்கள். இந்த உதவிகளின் காரணமாக ரூ. 750 விலை வைக்க வேண்டிய பத்து புத்தகங்களுக்கு ரூ. 250 மட்டுமே விலை வைத்திருக்கிறது. பத்து புத்தகங்கள் ரூ. 250 கொடுத்து வாங்குகிறவர்கள் ரூ. 500 லாபம் சம்பாதித்ததாக எண்ணிக் கொள்ளலாம். அவ்வாறே ஒரு புத்தகம் ரூ. 25க்கு இப்போது வாங்குகிறவர் ரூ. 50 ஆதாயம் அடைவதாகக் கருதலாம்.

ஸ்ரீ டி. எஸ். அவிநாசிலிங்கத்துக்கும் ஸ்ரீ பெரியசாமி தூரனுக்கும் இந்த அரும் பெரும் திருப்பணியைச் சாத்தியமானதாகச் செய்த தமிழ் மக்கள் அனைவருக்கும் நமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

முதுபெரும் நாதோபாசகர்கள்

சென்ற மூன்று ஆண்டுகளாக இந்தியக் குடியரசு சர்க்கார் இந்திய சங்கீதக் கலையைக் கௌரவிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். கர்நாடக சங்கீதக் கலைக்கு மரியாதை செய்யும் நோக்கத்துடன் பிரதி வருஷமும் வாய்ப்பாட்டு வித்வான் ஒருவரையும் இசைக் கருவி வித்வான் ஒருவரையும் தேர்ந்தெடுத்துச் சிறப்பித்து வருகிறார்கள். மேற்படி சம்பிரதாயத்துக்கு இணங்க இந்த வருஷம் மைசூர் ஸ்ரீ கே. வாசுதேவாச்சாரும் பல்லடம் ஸ்ரீ சஞ்சீவி ராவும் பாரத சர்க்காரால் கௌரவிக்கப்பட்டார்கள்.

ஸ்ரீ வாசுதேவாச்சார் புது டில்லிக்கு நேரில் செல்ல முடியாததால், அது சம்பந்தமாக சென்னை ராஜ பவனத்திலே கவர்னரின் தலைமையில் வைபவம் நிகழ்ந்தது. அப்போது பிரதம நீதிபதியும் சங்கீத நாடக அகாடமி அக்ராசனருமான ஸ்ரீ பி. வி. ராஜமன்னார் ஜனாதிபதியின் சார்பில் ஸ்ரீ வாசுதேவாச்சாருக்குக் கங்கணமும் சால்வையும் அளித்துக் கௌரவித்தார்கள்.

எண்பத்தொன்பது வயதான ஸ்ரீ வாசுதேவாச்சார் சங்கீதவானில் மங்காத ஒளியுடன் விளங்கி வரும் பட்டணம் சுப்பிரமணிய ஐயரிடம் குருகுல வாசமிருந்து சங்கீதக் கலையில் தேர்ச்சி பெற்றவர்; ஏராளமான கீர்த்தனங்கள், ஸ்வரஜதிகள், பல்லவிகள் இயற்றியவர். இப்போது அவர் சென்னை கலாக்ஷேத்திரத்தில் இருந்து சங்கீதக் கலைக்குத் தொண்டு புரிந்து வருகிறார்.

எழுபத்திரண்டு வயதான பல்லடம் ஸ்ரீ சஞ்சீவி ராவ் வேணுகான சக்கரவர்த்தியாக விளங்கிய சரப சாஸ்திரிகளிடம் குருகுல வாசம் செய்து தேர்ச்சி அடைந்தவர்; வேணு கானத்தில் தமக்கென்று தனிப்பெரும் புகழை நிலை நாட்டியவர்.

வாழ்நாள் முழுதும் இடைவிடாமல் நாதோபாசனை செய்து, நாதப் பிரம்மத்தின் திருவருள் பெற்ற இவ்விரு முதுபெரும் மகா வித்துவான்களும் கௌரவிக்கப்பட்டதைக் கண்டு கலைஞர்கள் பெருமிதம் அடைவார்கள்; சங்கீத ரசிகர்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைவார்கள்.

அட்டைப்படக் கதைப் பரிசு!

பள்ளியில் இருந்து குதித்துக் கும்மாளி போட்டுக் கொண்டு வந்த குமாரி ஆழ்ந்த நித்திரையில் இருக்கிறாள். தூக்கத்தில் ஒரு இனிய கற்பனைக் கனவு காண்கிறாள். இந்த வாரத்துக் "கல்கி" அட்டைச் சித்திரம் மேற்படி காட்சியைத் தாங்கித் திகழ்கிறது. இந்தச் சித்திரத்தை அடிப்படையாகக் கொண்டு நேயர்களால் புனைந்து அனுப்பப்படும் கற்பனைக் கதைகளில் சிறந்த கதைக்கு இருபது ரூபாய் பரிசு வழங்கப்படும். இந்த அட்டைப்படக் கதைப் போட்டிக்கு அனுப்பப்படும் கதைகள் மே மாதம் பதினெட்டாம் தேதிக்குள் நமது காரியாலயத்துக்கு வந்து சேர வேண்டும்.



அத்தியாயம் 87

புலவரின் திகைப்பு

அருள்மொழி வர்மருக்குத் திருமுடி சூட்டு விழா நெருங்க நெருங்க, சோழ நாடு முழுவதும் ஒரே கோலாகலமாகி வந்தது. பொன்னியின் செல்வருக்குப் பொன் முடிசூடுவது குறித்து மக்களிடையில் மாறுபட்ட அபிப்பிராயமே காணப்படவில்லை. சோழ நாட்டு ஆண்கள், பெண்கள், வயோதிகர்கள், குழந்தைகள், நகர மாந்தர், கிராமவாசிகள், வர்த்தகர்கள், உழவர்கள் அனைவரும் ஒருமுகமாகப் பொன்னியின் செல்வருக்கு முடி சூட்டுவதைக் குதூகலமாக வரவேற்றார்கள். அவர் பிறந்த வேளையைப் பற்றியும், அவர் முகத்தின் களையைப் பற்றியும், அவருடைய இனிய குண நலன்களைப் பற்றியும், குடிமக்களிடம் அவர் கலந்து பழகும் அருமைப் பண்பைப் பற்றியும் அனைவரும் சொல்லிச் சொல்லி வியந்து மகிழ்ந்தார்கள்.

இராமருக்குப் பட்டாபிஷேகம் செய்து வைக்கத் தசரதர் முடிவு செய்து விட்டார் என்று அறிந்ததும் அயோத்தி மக்கள் எல்லாரும் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தார்கள் என்பதை இராம காதை நன்கு வர்ணிக்கிறது.

வயது முதிர்ந்த பெண்மணிகள் எல்லாரும் கோசலையைப் போல் ஆகிவிட்டார்களாம். தத்தம் புதல்வர்களுக்கே மகுடாபிஷேகம் ஆகப் போவதாக எண்ணி மகிழ்ந்தார்களாம். இளம் பெண்கள் எல்லாரும் சீதா தேவி அடைந்த ஆனந்தத்தைத் தாங்களும் அடைந்து, தத்தம் கணவன்மார்களுக்கே முடி சூட்டப் போவதாகக் கருதித் தங்களை ஆடை ஆபரணங்களால் அலங்கரித்துக் கொண்டார்களாம். அயோத்திமா நகரத்தில் வாழ்ந்த முதிய பிராயத்து ஆண்மக்கள் எல்லாரும் தசரதனைப் போல் ஆகி விட்டார்களாம்.

மாதர்கள் வயதின்மிக் கார்
    கோசலை மனத்தைஒத் தார்;
வேதியர் வசிட்டன்ஒத் தார்;
    வேறுள மகளிர்எல் லாம்
சீதையை ஒத்தார்;அன் னாள்
    திருவினை ஒத்தாள்;அவ் வூர்
சாதன மாந்தர்எல் லாம்
    தயரதன் தன்னைஒத் தார்.

என்று அயோத்தி மக்களின் மனோநிலையைக் கம்ப நாடர் அற்புதமாகச் சித்திரித்திருக்கிறார்.

அவ்வாறு அயோத்தி மக்களின் உள்ளன்பையும் நன்மதிப்பையும் அடைவதற்கு இராமர் என்ன அருஞ் செயல் புரிந்திருந்தார்? அவருடைய கோதண்டத்தின் மகிமையெல்லாம் பிற்காலத்தில் அல்லவா வெளியாவதற்கு இருந்தது? இராவணன் முதலிய ராட்சதர்களை வதம் செய்து மூன்று உலகங்களுக்கும் பயத்திலிருந்து விடுதலை அளித்த பெருமை பின்னால் அல்லவா அவரைச் சேர்வதாக இருந்தது? விசுவாமித்திர முனிவரோடு சென்று அவருடைய யாகத்தைப் பூர்த்தி செய்வித்து விட்டு வந்தார் என்பது அயோத்தி மக்களுக்கு அவ்வளவாக இராமருடைய பெருமையை உயர்த்திக் காட்டியிராதல்லவா? ஏன்? விசுவா

மித்திரர் திரும்பி அயோத்திக்கு வந்து அதைச் சொல்லக்கூட இல்லையே?

இந்த உலகில் சிலர் செயற்கரிய வீரச் செயல்களும், பரோபகாரச் செயல்களும் புரிந்து மக்களின் உள்ளத்தைக் கவர்கிறார்கள். இன்னும் சிலர் இசை பாடியும், நடனம் ஆடியும், கவிதை புனைந்தும், சித்திர சிற்பக் கலைகளில் அற்புதங்களை அளித்தும் பிறருடைய போற்றுதலுக்கு உள்ளாகிறார்கள். வேறு சிலர் கருவிலேயே திருவுடையோராய், பிறக்கும்போதே சிறப்புடையோராய்ப் பிறந்து விடுகிறார்கள். குறிப்பிடக் கூடிய காரணம் எதுவும் இன்றிப் பார்ப்பவர்களுடைய உள்ளங்களை யெல்லாம் கவர்ந்து வசீகரிக்கக் கூடிய சக்தியை இயற்கை அன்னை அவர்களுக்கு அளித்து விடுகிறாள். ஆகா! இயற்கை அன்னை மிக்க பாரபட்சம் உடையவள் போலும்! ஆனாலும் நாம் என்ன கண்டோம்? இயற்கை அன்னை அத்தகைய வசீகர சக்தியை அவர்களுக்கு அளிக்கும்போது அதற்கு இணையாக வேறு என்ன பிரதிகூலமான அம்சங்களையும் அளித்திருக்கிறாளோ, நமக்கு என்ன தெரியும்?

அவ்வளவு தூரம் அயோத்தி மாந்தரின் உள்ளன்பைக் கவர்ந்து அவர்களுடைய போற்றுதலுக்கு உரியவரா யிருந்த இராமர், உலகில் சாதாரண மனிதர் யாரும் அடையாத துன்பங்களை யெல்லாம் அடைய வேண்டி யிருந்ததல்லவா? நாட்டைத் துறந்து, காட்டுக்குச் சென்று, காதல் மனைவியைப் பறி கொடுத்து, சொல்லுவதற்கு இயலாத மனவேதனைப் பட வேண்டி நேர்ந்ததல்லவா?

** ** **

அருள்மொழி வர்மர் இயற்கை அன்னையின் பட்சபாதமான சலுகைக்குப் பாத்திரமானவர். அவருடைய தோற்றமே அவரைப் பார்த்தவர்கள் அனைவர் மனத்தையும் வசீகரித்தது. அவருடைய இனிய பேச்சும் பண்புகளும் அவருடன் பழக நேர்ந்தவர்கள் எல்லாருடைய அன்பையும் கவர்ந்தன. ஈழ நாட்டுப் போர்க்களத்துக்கு அவர் சென்றிருந்தபோது அவ்வளவாக வீர தீரச் செயல்கள் புரிவதற்குச் சந்தர்ப்பங்கள் கிட்டவில்லை. ஆயினும் அவருடைய வீரப் பிரதாபங்களைப் பற்றிய கற்பனைச் செய்திகள் பல சோழ நாடெங்கும் பரவி வந்தன. ஒருவரிடம் நாம் அன்பு கொண்டு விட்டால், அவரைப் பற்றிய எவ்வளவு மிகைப் படுத்தப்பட்ட புகழுரைகளையும் எளிதில் நம்புவதற்கு ஆயத்தமாகி விடுகிறோம் அல்லவா?

சுந்தர சோழர் நோய்வாய்ப்பட்டு நடமாடவும் சக்தியில்லாமல் போன காலத்திலிருந்து, அரசுரிமை சம்பந்தமான குழப்பங்கள் சோழ நாட்டில் ஏற்படக் கூடுமோ என்று மக்கள் கவலைப் பட்டு வந்தார்கள். பழுவேட்டரையர், சம்புவரையர் முதலிய குறுநில மன்னர்களும், பெருந் தரத்து அதிகாரிகளும் சுந்தர சோழரின் புதல்வர்களுக்கு விரோதமாகக் கண்டராதித்தருடைய மகனுக்குப் பட்டம் கட்டச் சதி செய்கிறார்கள் என்னும் வதந்தியும் பரவி யிருந்தது.

கண்டராதித்தருடைய குமாரன் மதுராந்தகனுக்கு விரோதமாகச் சொல்லக் கூடியது எதுவும் மக்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆனால் மதுராந்தகன் மக்களிடையில் வந்து கலந்து பழகியதுமில்லை. தந்தையைப்போல் உலக வாழ்க்கையில் வெறுப்புற்றுச் சிவ பக்தியில் ஆழ்ந்திருக்கிறான் என்பது மட்டும் தெரிந்திருந்தது. விஜயாலய சோழர் காலத்திலிருந்து சோழ ராஜ்யம் விரிந்து பரந்து வந்ததையும், வர்த்தகம் செழித்து மக்களின் வாழ்க்கை உயர்ந்து வந்ததையும், சோழ சைன்யங்கள் வெற்றி கொண்ட நாடுகளிலிருந்து பலவிதச் செல்வங்கள் சோழ நாட்டில் வந்து குவிந்து கொண்டிருந்ததையும் பார்த்துக் களித்துப் பெருமிதம் அடைந்திருந்த மக்கள், சோழப் பேரரசு மேலும் மேலும் பல்கிப் பரவித் தழைக்க வேண்டுமென்று விரும்பினார்கள். சிவ பக்தியில் முழுக்க முழுக்க ஈடு பட்ட மதுராந்தகர் சிங்காதனம் ஏறினால், சோழ ராஜ்யத்தின் முன்னேற்றம் தொடர்ந்து நடைபெற முடியுமா என்று ஐயுற்றார்கள். அதுமட்டுமன்றி, மதுராந்தகர் பட்டத்துக்கு வந்தால் சிற்றரசர்கள் வைத்ததே சட்டமா யிருக்கும் என்று மக்கள் அஞ்சினார்கள்.

ஆதித்த கரிகாலரைப் பற்றி வீராதி வீரர் என்ற பெருமதிப்பு மக்களுக்கு இருந்தாலும், அவர் சிங்காதனம் ஏறுவது பற்றியும் அவ்வளவாக உற்சாகம் கொள்ள இடமில்லாமலிருந்தது. ஆதித்த கரிகாலரிடம் மக்களை வசீகரிக்கும் இனிய சுபாவம் இல்லை; எல்லாருடனும் அவர் சரளமாகக் கலந்து பழகுவதில்லை. இதையன்றி, கரிகாலரைப் பற்றி மர்மமான பல வதந்திகள் உலாவி வந்தன. அவர் ஏதோ பெரிய குற்றம் செய்து விட்டார் என்றும், அவருடைய மனச்

சாட்சியே அதற்காக அவரை வருத்திக் கொண்டிருக்கிறதென்றும், அதனாலே தந்தை சுந்தர சோழரின் அபிமானத்தை இழந்து விட்டார் என்றும் வதந்திகள் பரவியிருந்தன. இன்னும் பலவிதமான கற்பனைக் கதைகளும் கட்டி விடப்பட்டிருந்தன. ஆகையால் அவர் அகால மரணமடைந்த போது ஒரு மகா வீரனுக்குரிய மரியாதையை மக்கள் செலுத்தினாலும் அதிகமாக துக்கப்பட்டுக் கொண்டிருக்கவில்லை. வால் நட்சத்திரத்தின் பேரில் பழியைப் போட்டு விட்டு ஒருவாறு மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டார்கள்.

பெரிய பழுவேட்டரையரின் மரணமும், அது நேர்ந்த விதமும் மக்களுடைய உள்ளத்தில் அவர் பேரில் புதியதொரு அபிமானத்தையும் மரியாதையையும் உண்டாக்கியிருந்தது. அந்த வீரக் கிழவர் முதுமைப் பிராயத்தில் மணந்து கொண்ட மாய மோகினி உண்மையில் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளைச் சேர்ந்தவள் என்றும், அவளுடைய தூண்டுதலினாலே தான் பெரிய பழுவேட்டரையரின் மனம் கெட்டுப் போயிருந்ததென்றும், ஆதித்த கரிகாலரின் அகால மரணத்துக்குப் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளே காரணம் என்றும், உண்மையை அறிந்து கொண்டதும் பெரிய பழுவேட்டரையர் செய்த குற்றத்துக்குப் பிராயச் சித்தமாகத் தம்மைத் தாமே மாய்த்துக் கொண்டார் என்றும் வதந்திகள் பரவி விட்ட பிறகு, ஜனங்கள் பெரிய பழுவேட்டரையரைக் குறித்து, "ஐயோ! பாவம்!" என்று அநுதாபப் பட்டார்கள். அவர் இறப்பதற்கு முன்னால், "மதுராந்தகருக்குப் பட்டம் கட்டும் எண்ணத்தை விட்டு விடுங்கள். பொன்னியின் செல்வருக்கே முடி சூட்டுங்கள்!" என்று மற்ற குறுநில மன்னர்களுக்குக் கட்டளையிட்டு விட்டுச் சென்றார் என்பதும் அவரிடம் மக்களின் மரியாதையை அதிகப்படுத்தியது. மக்களின் மனத்தில் உள்ள விருப்பம் நிறைவேறுவதற்கு ஒரு பெரிய தடங்கலை நிவர்த்தி செய்து விட்டல்லவா அந்த மாபெரும் வீரக் கிழவர் உயிரை நீத்தார்? அவருடைய நினைவு வாழ்க! அவருடைய குலம் வாழ்க!— இவ்வாறு ஜனங்கள் நன்றி உணர்ச்சியுடன் அவரைப் பற்றிப் புகழ்ந்து பேசினார்கள்.

மதுராந்தகத்தேவர் விஷயத்தில் ஆள் மாறாட்டம் நடந்திருக்கிறது என்னும் விவரம் பொது மக்களில் யாருக்குமே தெரிந்திருக்கவில்லை. அரச குடும்பத்தினரையும், அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களையுந் தவிர வேறு யாருக்கும் அந்தச் செய்தி தெரியாது. பழைய மதுராந்தகர் பெரும்பாலும் அரண்மனைக்குள்ளேயே கழித்தார். மிக அபூர்வமாகவே வெளிப் புறப்பட்டார். அந்தச் சந்தர்ப்பங்களிலும் அவர் பொது மக்களுடன் கலந்து பழகுவதில்லை. அவருக்கு முடிசூட்டும் பேச்சு நடந்து கொண்டிருந்தபோது மூடுபல்லக்கில் வைத்து அவரை அழைத்துக் கொண்டு போவது வழக்கமாயிருந்தது. அவருடைய அங்க அடையாளங்களைக் கூர்ந்து கவனிக்கப் பொது ஜனங்களுக்குச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. ஆகையால் பழைய மதுராந்தகர் போய்ப் புதிய மதுராந்தகர் வந்துள்ள விவரமே மிகப் பெரும்பாலான மக்களுக்குத் தெரியாமலிருந்தது.

ஆதலின் திருவையாற்றில் நடந்த திருவாதிரைத் திருவிழாவில் புதிய மதுராந்தகரைப் பார்த்தவர்கள் எவரும் ஆள் வேற்றுமை எதுவும் இருப்பதாக அறியவில்லை. அவர் மனைவி பூங்குழலி மட்டும் சிலருடைய கவனத்தைக் கவர்ந்தாள். அந்தப் பெண் 'சின்னப் பழுவேட்டரையருடைய மகள்' என்று சிலர் கூறியதை மற்றும் சிலர் மறுத்துரைத்தார்கள். கடலில் படகு செலுத்தி வந்த ஓடக்காரப் பெண் இவள் என்றும், மதுராந்தகர் சமீபத்தில் இவளை மணந்து கொண்டார் என்றும் சொன்னார்கள்.

அரச குடும்பத்தினரும் குறுநில மன்னர்களும் பலதார மணம் செய்து கொள்வது அந்நாளில் சாதாரணமாக இருந்தபடியால் யாரும் அதைப் பற்றி வியப்பு அடையவில்லை. சிற்றரசர்கள் பலர் தூண்டியும் மதுராந்தகத் தேவர் தமக்குப் பட்டம் வேண்டாம் என்று சொல்லி விட்டார் என்னும் வதந்தி மக்களுக்குப் பொதுவாகவே அவரிடம் மரியாதையை உண்டு பண்ணியிருந்தது. சிவ பக்தியில் திளைத்துப் பரவச நிலையை அடைந்திருந்த அவருடைய தோற்றமும் அந்த மரியாதையை வளர்த்தது. "ஓடக்காரப் பெண்ணாகிய பூங்குழலியை முன்னிட்டே மதுராந்தகர் சோழ சிங்காதனத்தை விரும்பவில்லை" என்ற பேச்சு இன்னும் பலருடைய அபிமானத்தை அவர் கவர்ந்து கொள்ளக் காரணமாயிருந்தது. பொன்னியின் செல்வருக்குப் பட்டாபிஷேகம் நடந்ததும் மதுராந்தகத் தேவருக்கு ஏதேனும் பெரிய பதவி அளிப்பார் என்றும் பேசிக் கொண்டார்கள்.

முடி சூட்டு விழாவுக்கு இரண்டு தினங்களுக்கு முன்னாலிருந்து சோழ நாட்டின் நாலு திசைகளி லிருந்தும் ஜனங்கள் தஞ்சையை நோக்கி வரத் தொடங்கி விட்டார்கள். தஞ்சைக் கோட்டைக்கு வெளியே ஒரே ஜன சமுத்திரமாகக் காட்சி அளித்தது. கோட்டையின் வாசற் கதவுகள் திறந்து விடப்பட்டன. கோட்டைக்குள் போவதற்கும் வெளியே வருவதற்கும் முன்னம் இருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன.

முடி சூட்டு நாளைத் தள்ளி வைத்துக் கொண்டால் சமாளிக்க முடியாத கூட்டம் சேர்ந்து விடும் என்றுதான் தை பிறந்தவுடனே நாள் குறிப்பிட்டிருந்தார்கள். இன்னும் ஜனங்களுடைய சௌகரியத்துக்காக வேறு பல ஏற்பாடுகளும் செய்திருந்தார்கள்.

கொடும்பாளூர் வேளார் தம்முடன் அழைத்துக் கொண்டு வந்திருந்த மாபெரும் தென் திசைப் படையில் மிகப் பெரிய பகுதியைப் பொன்னியின்செல்வர் கட்டளையின் பேரில் திருப்பி அனுப்பி விட்டார். தம்முடன் ஆயிரம் வீரர்களை மட்டுமே வைத்துக்கொண் டிருந்தார். அவ்விதமே பழுவேட்டரையர் கட்சியைச் சேர்ந்த சிற்றரசர்கள் குடந்தைக்கு அருகில் கொண்டு வந்து நிறுத்தி யிருந்த வீரர்களும் திருப்பி அவரவர்களுடைய இடத்துக்கு அனுப்பப் பட்டார்கள்.

சின்னப் பழுவேட்டரையர் கோட்டைப் பாதுகாப்புக்காக வழக்கமாக வைத்திருந்த வீரர்கள் மட்டுமே இப்பொழுது இருந்தார்கள்.

பழுவூர் வீரர்களும் கொடும்பாளூர் வீரர்களும் வேளக்காரப் படை வீரர்களும் தங்களுடைய பகை மாற்சரியங்களை யெல்லாம் மறந்து ஒருவரை யொருவர் கட்டித் தழுவிக் கொள்வதும் கேலி செய்வதும் கூத்தாடிக் குதூகலிப்பதுமாக இருந்தார்கள். முடி சூட்டு விழாவைப் பார்ப்பதற்குத் திரள் திரளாக வந்து குவிந்தவண்ண மிருந்த மக்களுக்கு அவர்கள் கூடிய வரையில் உதவியாக இருந்தார்கள். சில சமயம் வேடிக்கைக்காக வானர சேஷ்டைகளில் அவ்வீரர்கள் ஈடுபட்ட போதிலும் ஜனங்கள் அவற்றைப் பொருட்படுத்த வில்லை.

தஞ்சைக் கோட்டைக்கு உட் புறமும் புறநகரமும் தேவேந்திரனின் அமராவதி நகரத்தைப் போல் அலங்கரிக்கப்பட்டு விளங்கின. நகரில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் வெளியூரிலிருந்து விருந்தாளிகள் வந்து குவிந்த வண்ண மிருந்தார்கள்.

கடைசியாக, மகுடா பிஷேகத்துக்குக் குறிப்பிட்ட தினத்தன்று சூரியன் உதயமாயிற்று. உதிக்கும் போதே பனித் திரளைப் போக்கிக் கொண்டு பொற் கிரணங்களைப் பரப்பிக் கொண்டு தேஜோ மயமாக உதித்த சூரியனைப் பார்த்த மாந்தர் அனைவரும், ''இன்றைக்குப் பொன்னியின் செல்வருக்கு மகுடாபிஷேகம் அல்லவா? ஆகையால் சூரியனும் பொன்னொளி வீசித் திகழ்கிறான்!'' என்று கூறி மகிழ்ந்தார்கள்.

மகுடாபிஷேகத்துக் குரிய வேளை வருவதற்கு வெகு நேரம் முன்னதாகவே, பட்டாபிஷேக மண்டபத்தின் வாசலில் ஜனத் திரள் சேர ஆரம்பித்து விட்டது. மண்டபத்துக்குள்ளே பொது மக்கள் அனைவரும் இடம் பெறுதல் இயலாத காரியம் அல்லவா? முடிசூட்டு வைபவம் நடந்த பிறகு, பொன்னியின் செல்வர் மண்டபத்திலிருந்து வெளியில் வந்து பட்டத்து யானை மீதேறி வீதி வலம் தொடங்கும் போதுதான் மக்கள் அனைவரும் அவரைக் கண்டு மகிழ முடியும். அதற்காக நேரங்கழித்து வர முடியுமா, என்ன? முன்னதாக வந்தால், பொன்னியின் செல்வர் பொன்மகுடம் சூடிக் கொண்டு வெளி வரும் போதே அவரைப் பார்க்கலாமே!

மகுடாபி ஷேக மண்டபத்துக்குள் அரண்மனையைச் சேர்ந்தவர்கள் வருவதற்குத் தனியான பின்புறப் பாதை இருந்தது. அதன் வழியாகச் சுந்தர சோழரும் வானமா தேவியும் அவர்களைத் தொடர்ந்து செம்பியன் மாதேவி, மதுராந்தகர், பூங்குழலி, குந்தவைப் பிராட்டி, வானதி ஆகியவர்களும் வந்து சேர்ந்தார்கள். முதன் மந்திரி அநிருத்தர், சின்னப் பழுவேட்டரையர், சம்புவரையர், சேநாதிபதி பூதி விக்கிரம கேசரி, மலையமான் மிலாடுடையார், மற்றும் சிற்றரசர்கள், சாமந்தர்கள், வர்த்தக கணத் தலைவர்கள், கோட்டத் தலைவர்கள், பெருந்தர அதிகாரிகள், சிவாச்சாரியார்கள், விண்ணகர பட்டர்கள், தமிழ்ப் பெரும் புலவர்கள் ஆகியோர் வாசலில் கூடியிருந்த பெரும் ஜனக் கூட்டத்தில் புகுந்து முண்டியடித்துக் கொண்டு உள்ளே வந்து சேர்ந்தார்கள். கடைசியில், பொன்னியின் செல்வரும் வல்லவரையன் வந்தியத் தேவனும் தாமரை மலர் போல் அமைந்த சிறந்த தங்க ரதத்தில் அமர்ந்து மகுடாபிஷேக மண்டபத்தின் வாசலை அடைந்தபோது, பூரண சந்திரனைக் கண்ட அலைகடலைப்





போல் அந்த ஜன சமுத்திரம் ஜேகோஷம் முழக்கி ஆரவாரம் செய்தது.

** ** **

மகுடாபிஷேகத்துக் குரிய வைதிகச் சடங்குகள் எல்லாம் நடந்தேறின. சோழ குலத்து மன்னர்கள் வழி வழியாகப் பட்டாபிஷேக தினத்தன்று சிரஸில் சூட்டிக் கொள்ளும் மணி மகுடம், மார்பில் அணியும் நவரத்ன மாலை, இடையில் தரிக்கும் உடைவாள், கையில் ஏந்தும் செங்கோல் ஆகியவற்றை ஒரு பெரிய சித்திரத் தாம்பாளத்தில் வைத்துச் சபையில் பெரியவர்கள் முன்னாலெல்லாம் கொண்டு போனார்கள். அவர்க்ள் அத் தாம்பாளத்தைத் தொட்டு ஆசி கூறினார்கள். பின்னர், ஆஸ்தானப் புலவராகிய நல்லன். சாத்தனார் எழுந்து நின்றார். அவருக்குப் பின்னால் கையில் யாழ் பிடித்த மங்கை ஒருத்தி நின்று, யாழின் நரம்புகளை மீட்டி இனிய சுருதியை எழுப்பினாள்.

புலவர் நல்லன் சாத்தனார் சோழகுலத்தின் தொல் பெருமையையும், அக் குலத்தில் பரம்பரையாக வந்து புகழ் பெற்ற வீர மன்னர்களின் வரலாற்றையும் இசையுடன் கலந்த சந்தப் பாடலாகப் பாடலுற்றார். அந்தப் பாடல் மிக நீண்டதாகவும் இந்தக் காலத்தவர் எளிதில்




மணியம்

அறிந்து கொள்ள முடியாத அரிய நடையிலும் அமைந்திருந்த படியால், அதன் சாராம்சத்தை மட்டும் சுருக்கமாக இங்கே குறிப்பிடுகிறோம்:—

''சூரிய வம்சத்திலே தோன்றிய மனு மாந்தாவின் குலத்தில் சிபி என்னும் மன்னர் மன்னன் இருந்தான். அவன் ஒரு புறவுக்குத் தான் அளித்த வாக்கை நிறைவேற்றி அதன் உயிரைக் காப்பதற்காகத் தன் உடலின் சதையை அறுத்துக் கொடுத்தான். அத்தகைய சிபியின் வம்சத்தில் அவனுக்குப் பின் தோன்றியவர்கள் 'செம்பியன்' என்று குலப் பெயர் சூட்டிக் கொண்டு பெருமையடைந்தார்கள். செம்பியர் குலத்தில் இராஜ கேசரி என்று ஒரு பேரரசன் தோன்றினன். அவன் மகன் பரகேசரி என்று புகழ் பெற்றான். இவர்களுக்குப் பின் தோன்றிய மன்னர்கள் கோ இராஜ கேசரி என்றும், கோப் பரகேசரி என்றும் மாற்றி மாற்றிப் பட்டம் சூட்டிக் கொண்டு வந்தார்கள். பசுவுக்கு நீதி வழங்குவதற்குத் தன் அருமைப் புதல்வனைப் பலி கொடுத்த சோழ மன்னன் மனு நீதிச் சோழன் என்று பெயர் பெற்றான். இவனுக்குப் பிற்காலத்தில் பூம்புகார் நகரில் கரிகால் பெருவளத்தான் என்னும் மன்னன் மூவுலகங்களிலும் தன் புகழைப் பரப்பி விளங்கினன். அவன் சோழ நாட்டுப் பெரும் படையுடன் வடக்கே இமயமலை வரையில் படையெடுத்துச் சென்று, அம் மலையின் பனி மூடிய சிகரத்தில் சோழ குலத்துப் புலி இலச்சினையைப் பொறித்தான். இவன் வழியில் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, பெருங்கிள்ளி, குராப்பள்ளி துஞ்சியகிள்ளி வளவன், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், சிவபெருமானுடைய பரம பக்தனாகிய கோப்பெருஞ் சோழன் ஆகியவர்கள் இப் புராதன குலத்துக்குப் பெயரும் புகழும் அளித்துச் சிவபதம் அடைந்தார்கள்.

உலகத்துக் கெல்லாம் ஒளி அளிக்கும் சூரிய பகவானைக் கூட மாரி காலத்து மேகங்கள் மறைத்து விடுவது போல், சூரியனுடைய பரம்பரையில் வந்த சோழர் குலத்தைச் சிலகாலம் பல்லவ—பாண்டியப் பகை மேகங்கள் மறைத்திருந்தன. அந்த மேகங்களைச் சிதற அடிக்கும் வஜ்ராயுதம் ஏந்திய தேவேந்திரனுக்கு இணையாக விஜயாலயச் சோழர் தோன்றினார். அந்தச் சோழர் குலப் புலியைக் கண்டதும் பெரும்பிடுகு முத்தரையன் என்னும் எலி பீதி கொண்டு மாண்டு மறைந்தது. பின்னர் அந்த மகாவீரர் தஞ்சை நகரைக் கைப்பற்றித் துர்க்கா பரமேசுவரிக்குக் கோயில் எடுப்பித்தார். பல்லவர்களும் பாண்டியர்களும் மற்றும் பல அரசர்களும் விஜயாலயச் சோழரின் நட்பைக் கோரி அனுப்பிய தூதுவர்கள் சதா காலமும் அந்த மன்னரின் அரண்மனை முற்றத்தில் காத்திருந்தார்கள். அவ்விதம் உதவி கோரி வந்த அரசர்களுக்கு அபயம் அளித்து உதவி செய்யும் பொருட்டு விஜயாலய சோழர் பற்பல போர்க்களங்களுக்குச் சென்று போர் புரிந்து தமது திருமேனியில் தொண்ணூற்றாறு விழுப்புண்களைப் பெற்றவரானார். விஜயாலய சோழரின் திருக்குமாரர் ஆதித்த சோழர் மாற்றார்களுடைய சேனை மேகங்களைச் சிதறி ஓடச் செய்யும் மற்றொரு கதிரவனாகவே விளங்கினார். திருப்புறம்பயம் போர்க்களத்தில் பல்லவன் அபராஜிதன் பாண்டியனால் முறியடிக்கப்படும் தறுவாயில் இருந்த போது, ஆதித்த சோழர் மூயற் கூட்டத்தில் புலி புகுவதைப் போல் புகுந்து பாண்டிய சைன்யத்தைச் சின்ன பின்னம் செய்தார். பின்னர், தாம் செய்த உதவியை மதிக்காமல் சிநேகத் துரோகம் செய்த பல்லவனுக்குப் புத்தி புகட்டும் பொருட்டுத் தொண்டை நாட்டுக்குப் படை யெடுத்துச் சென்று அபராஜிதனை அவன் இருந்த யானைமேல் பாய்ந்து வீர சொர்க்கத்துக்கு அனுப்பினார். தமது முன்னோனாகிய கோச் செங்கணானைப் பின்பற்றி, காவேரி நதி உற்பத்தியாகும் ஸையப் பர்வதத்திலிருந்து பூம்புகார் நகரம் வரையில் எண்பத்திரண்டு சிவாலயங்களை எடுப்பித்தார். ஆதித்த சோழரின் புதல்வராகிய பராந்தக சோழர் பிறக்கும் போதே தம்முடைய இரு தோள்களிலும் வீர லக்ஷ்மியையும் விஜய லக்ஷ்மியையும் சுமந்து கொண்டு பிறந்தார். வெள்ளூரில் பாண்டியனைப் புறங்கண்ட அம்மன்னர், மதுரையும் ஈழமும் கொண்டதுடன், சேர நாட்டு வேழப்படைக்கு ஒரு சிங்கமாக விளங்கினார். வடக்கே துங்கபத்திரை நதிக்கு அப்பால் இருந்த சளுக்கர்களும் வேங்கி மண்டலத்தாரும் பராந்தக சோழருடைய பெயரைக் கேட்டுச் சிம்ம சொப்பனம் கண்டவர்கள் போல் நடுநடுங்கினார்கள். அவருடைய புகழைக் கேட்டுப் பொறுக்காமல் பொறாமை கொண்ட இரட்டை மண்டலத்துக் கன்னர தேவன் ஏழு சமுத்திரமும் சேர்ந்தது போன்ற மாபெரும் படையைத் திரட்டிக் கொண்டு பராந்தக சக்கரவர்த்தியைப் போரில் புறங்காண வந்தான். பராந்தகரின் மூத்த புதல்வ

ராகிய இராஜாதித்த தேவர் குருக்ஷேத்திரத்தை யொத்திருந்த தக்கோலப் போர்க் களத்தில் கன்னர தேவனையும் அவனுடைய மாபெருங் கடல் போன்ற சேனையையும் முறியடித்துச் சின்னாபின்னம் செய்த பிறகு ஆனை மேல் துஞ்சி வீர சொர்க்கம் எய்தினார். பராந்தக சோழர் தில்லைச் சிதம்பரத்து நடராஜப் பெருமான் ஆலயத்தில் பொன் மண்டபம் கட்டிய பின்னர் அப்பெருமானுடைய இணையடிகளை அடைந்தார்! அவருடைய புதல்வர் சிவஞான கண்டராதித்த தேவர் சிவாலயப் பணிகள் செய்வதில் ஈடுபட்டிருந்து சிவ பதத்தை அடைந்தார். அவருடைய காலத்தில் தொண்டை மண்டலத்தைப் பகைவர்களுடைய ஆதிக்கத்திலிருந்து விடுதலை செய்து சீட்புலி நாடு வரையில் புலிக் கொடியை நிலைநாட்டியவரான அரிஞ்சய தேவரும் தமது தமையனைப் பிரிந்து அதிக காலம் இருக்க மனமின்றி விண்ணுலகம் எய்தினார். அவருடைய திருப் புதல்வர் சுந்தர சோழ சக்கரவர்த்தி பின்னர் சோழ சிங்காதனம் ஏறினார். தான் ஒளிந்திருந்த பொங்திலிருந்து வெளியில் தலை காட்டிய பாண்டிய நரியின் மீது பாய்ந்து அதை மீண்டும் பொந்துக்குள் ஒளிந்து கொள்ளும்படி செய்தார்! சுந்தர சோழ சக்கரவர்த்தியின் வெண் கொற்றக் குடை நிழலில் மூன்று உலகமும் சிறிதும் கவலையின்றி நிர்ப்பயமாக வாழ்ந்து வருகின்றன.

இவ்வாறு ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வீரப் புகழ் பெற்று விளங்கும் குலத்தில் வந்த பொன்னியின் செல்வரை எம் மொழிகளால் யாம் போற்ற முடியும்? அவருடைய புகழைச் சொல்வதற்குக் கலை மகளே பிறந்து வந்தால் ஒரு வேளை சாத்தியமாகக் கூடும். எம்மைப் போன்ற மிகச் சாதாரண புலவர்களால் இயம்பத் தரமன்று......"

இவ்விதம் நல்லன் சாத்தனார் சோழர் குலப் பெருமையைப் பாடி முடித்தார். அவருக்குப் பிறகு வடமொழிப் புலவர்களும் புத்தபிக்ஷுக்களும் சிவாச்சாரியர்களும் வைஷ்ணவ ஆச்சாரியார்களும் வாழ்த்துக் கூறுவதற்குக் காத்திருந்தார்கள். இவர்களை எப்படிச் சுருக்கமாக முடிக்கச் செய்வது என்பது பட்டாபிஷேக முகூர்த்தம் வைத்திருந்தவர்களுக்குப் பெருங் கவலையாகப் போய் விட்டது. அப்படிக் கவலைப் பட்டவர்களில் சின்னப் பழுவேட்டரையரும் ஒருவர். அவர் தமது கரத்தினால் சோழர் குலத்துப் புராதன கிரீடத்தை எடுத்துப் பொன்னியின் செல்வரின் சிரஸில் சூடுவதற்கு ஆயத்தமாயிருந்தார். புலவர்களையும் பண்டிதர்களையும் எப்படி விரைவில் பாடி முடிக்கச் செய்வது என்று எண்ணிச் சுற்று முற்றும் பார்த்த சின்னப் பழுவேட்டரையரின் சமீபத்தில் புதிய ஆள் ஒருவன் திடுதிப்பென்று வந்தான். தெருவீதியில் மொய்த்து நின்று கொண்டிருந்த அவ்வளவு ஜனக் கூட்டத்தையும் தாண்டி அவன் எப்படி ஆஸ்தான மண்டபத்துக்குள் வந்தான் என்பது பலருக்கும் வியப்பு அளித்தது. ஆனால் வந்தியத் தேவனுக்கு அது வியப்பு அளிக்கவில்லை. மாறு வேடம் பூண்டிருந்தவன் ஆழ்வார்க்கடியான் தான் என்பதை அறிந்திருந்த வந்தியத் தேவன் பொன்னியின் செல்வரை நோக்கினான். அவரும் அந்த சமிக்ஞையைத் தெரிந்து கொண்டவராகத் தோன்றினார்.

சின்னப் பழுவேட்டரையரின் காதில் ஆழ்வார்க்கடியான் என்ன இரகசியச் செய்தியைச் சொன்னானோ, தெரியாது. உடனே அவருடைய முகத்தில் பெருங் கவலையும் கலக்கமும் குடிகொண்டன. ஒரு கணம் தயங்கி நின்றுவிட்டு அவனை அழைத்துக் கொண்டு அச்சபா மண்டபத்தில் அதிக கூட்டமில்லாத ஒரு பக்கத்துக்குச் சென்றார்.

இதைக் கவனித்தார் பொன்னியின் செல்வர். நல்லன் சாத்தனார் சோழர் குலப் பெருமையைக் கூறி வந்த போதெல்லாம் கைகூப்பி நின்று வணக்கத்துடன் கேட்டுக் கொண்டு வந்தவர், இப்போது அந்தப் புலவரை நோக்கி, "ஐயா! புலவரே! இத்தனை நேரமும் தாங்கள் கூறிவந்த புகழெல்லாம் என் முன்னோரைப் பற்றியவை அல்லவோ? இந்தப் புராதனப் பெருமை வாய்ந்த சிங்காதனத்தில் அமர்ந்து மணி மகுடம் சூட்டிக் கொள்வதற்குத் தகுதியுள்ளவனாக நான் என்ன காரியம் செய்திருக்கிறேன்? அதைப் பற்றிக் கூறுவதற்குக் கலைமகள் இங்கே இப்போது பிரசன்னமாவது சாத்தியமில்லையாதலால் தங்களால் இயன்ற வரையில் சற்று எடுத்து இயம்பலாமே?" என்றார்.

புலவர் திகைத்து நின்றதைப் பார்த்த பொன்னியின் செல்வர், "ஐயா! தாங்கள் திகைத்து நிற்பது இயல்பே. தங்கள் பேரில் குற்றம் இல்லை. அவ்வாறு என்னுடைய புகழைப் பாட்டில் அமைத்துப் பாடும்படியாக நான் இன்னமும் ஒரு காரியமும் செய்யவில்லை. இன்றுதான் தொடங்கப் போகிறேன்!" என்றார்.

சோதிட அனுபவங்கள்

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் புத்தர் பிறந்தவுடன் அசித முனிவர், "குழந்தை, உலகோர் மெச்சும் புகழுடன் துறவியாவார்" என்றார். சுத்தோதனர் இன்பமாகக் குழந்தையை வளர்த்தார். எனினும் மனைவி, மகன், நாடு முதலியன துறந்து புத்தர் துறவியானார்.

முகம்மது நபி சில காலம் தலைமறைவாக வாழ நேர்ந்தது. அவர் வனத்தில் வழி நடக்கும்போது ஆடு மேய்ப்பவன் ஒருவன் சில சிறுவர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு குறி சொல்லிக் கொண்டிருந்தான். ஹஸரத் முகம்மது (நபி) அவனிடம் 'தலைமறைவில் இருக்கும் நபி எங்கிருக்கிறார் என்று சொல்ல முடியுமா!' என்று கேட்டார். ஆடு மேய்ப்பவன் நிலத்தில் சில கணக்குகளை எழுதிப் பார்த்துவிட்டு 'நீர்தாம் நபி' என்றான். உடனே நபி அல்லாவை வணங்கி 'அல்லாவே! மக்களின் சக்தி அளவிடற்கரியது. முக்காலமும் உணர வல்லவர்களும் இருக்கிறார்கள். உலகம் சரியாக நடைபெற வேண்டுமெனில் சோதிடம் நேர்பாதியளவு குறைய வேண்டும்' என்று வேண்டிக் கொண்டார்.—இங்ஙனம் குரான் கூறுகிறது.

1720-ல் சிம்ம ராசியில் பிறந்ததால் குழந்தைக்கு 'ஹைதர்' எனப் பெயரிடக் கூறினர். மேலும் குழந்தை சிம்மாசனத்தில் அமர்ந்து அரசாள்வான் என்றும் சோதிடர் ஹைதராலியின் தந்தை பதேஹ் முகம்மது என்ற சாதாரணச் சிப்பாயிடம் கூறினர்.

ஜான்ஸி ராணி லட்சுமிபாய் குழந்தையாக இருக்கும்போது சோதிடர் அவள் பிற்காலத்தில் அரசியாவாள் என்று கூறினர்.

இவற்றிலிருந்து பண்டை நாளில் சோதிட நிபுணர் பலர் நம் நாட்டிலிருந்தனர் என அறிகிறோம். தற்காலத்திலும் நிபுணர்கள் இருக்கிறார்கள். கணிதத் தவறாலும், சரியான நேரத்தைக் கூறாததாலும், கலையில் போதிய தேர்ச்சி யில்லாமையாலும் சில பொய்க்கின்றன; சில பலிக்கின்றன. இதிலிருந்து சோதிடம் பலிக்கும் என்றோ பலிக்காது என்றோ ஒரு முடிவுக்கு வர முடியாது.

கொட்டாரம்
15—2—54

சு. அரிகரன்

✶

முப்பது வருஷங்களுக்கு முன் எனது கணவர் திருநெல்வேலியில் டாக்டராக இருந்து வரும் பொழுது ஒருநாள் பக்கத்துக் கிராமத்துக்கு அவசரப் பிரசவ கேஸுக்காக அவரை அழைத்துச் சென்றார்கள். கர்ப்பிணியின் நாடியும் சிசுவின் இருதய ஓட்டமும் அபாயச் சின்னங்களைத் தெளிவுறுத்தின. ஆயுதப் பிரயோகம் செய்ய வேண்டியதாயிற்று கர்ப்பிணியின் கணவர் பிரபல ஜோஸியர். அவர் டாக்டரிடம் 'இன்னும் ஒரு மணி கழித்து ஆயுதப் பிரயோகம் செய்யலாம். சுகப் பிரசவம் நடைபெறும். இப்பொழுதே பிரசவம் நேரிட்டால் பெண்தான் பிறக்கும். ஏற்கெனவே குடும்பத்தில் ஆறு பெண்கள் இருக்கிறார்கள். ஆதலால் தயவு செய்து இந்த லக்னம் கழிந்ததும் ஆயுதப்பிரயோகத்தை நடத்தலாம்' என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டார்.

'என்ன சாஸ்திரிகளே! ஆயுதப் பிரயோகத்தால் ஆண் குழந்தை பெண்ணாக மாறி விடுமா! அவசர காரியத்தைத் தடுக்காதீர்கள். அபாயத்துக்கு உட்படுவீர்கள். நானும் என் பொறுப்பை நழுவ விடக் கூடாது' என்று டாக்டர் பதில் அளித்துத் தமது வேலையில் ஈடுபட்டார். எட்டு பவுண்டு நிறை கொண்ட பெண் குழந்தை பிறந்தது. இரண்டு நாட்களாகப் பிரசவ வேதனையால் பாதிக்கப்பட்ட தாயும் சிறிது நித்திரைக்கு ஆளானாள். சாஸ்திரிகள் டாக்டருக்குப் பேசிய தொகையில் பத்து ரூபாய் குறைத்துக் கொடுத்து 'ஒரு மணி நேரம் கழித்துப் பிரசவம் நடைபெற்றிருந்தால் தவறாமல் பிள்ளையே பிறந்திருக்கும். எப்படியாவது கடன் வாங்கிப் பேசிய தொகையைக் கொடுத்திருப்பேன். மறுபடியும் பெண் குழந்தையே பிறந்ததினால் உற்சாகம் மிகவும் குறைவா யிருக்கிறது. கொடுத்த தொகையைத் தயவுசெய்து பெற்றுக் கொள்ள வேண்டும்' என்று மன்றாடினார். டாக்டர் விடை பெற்றுக் கொண்டு அந்தக் கிராமத்தில் வசித்து வரும் அவருடைய பெரிய தாயார் வீட்டுக்குச் சென்றார்.

பெரிய தாயார் மிகவும் பரபரப்புடன் 'என்ன அப்பா! சாஸ்திரிகளின் மனைவிக்குச் சுகப் பிரசவம் ஆயிற்றா!' என்று வினவினார். டாக்டர் நடந்தவற்றைத் தெரிவித்தார். பெரிய தாயார் 'அட அசடே! நாலு மாத காலமாகச் சாஸ்திரிகள் தமக்கு மறுபடியும் பெண்தான் பிறக்கப் போவதாக ஊரெல்லாம் சொல்லி வருகிறாரே! டாக்டர் தொகையில் பத்து ரூபாய் குறைத்துக் கொடுப்பதற்காக இந்த நாடகம் நடித்திருக்கிறார்' என்று சொல்லிச் சிரித்தாள்.

இந்தச் சம்பவத்தை அறிந்த நாங்கள் சோதிடத்தை எப்படி நம்பாமலிருக்க முடியும்?

பூனா
15-2-54

லக்ஷ்மி விசுவநாதன்

★

என் ஜாதகத்தைப் பார்த்த சோதிடர் என் நட்சத்திரக் கோளாறினால் என் தந்தையார் உடல் நலக் குறைவால் தாக்கப்படுவார் எனக் கூறிப் போந்தார். ஆனால் இதே கவலையால் படுக்கையில் வீழ்ந்தார் என் தந்தையார். ரூபாய் இரண்டாயிரம் வைத்தியச் செலவு செய்ததின் பேரில் நல்ல உடற்கட்டுடன் வாழ்ந்து வருகிறார்.

குருட்டுப் பூனை விட்டத்தில் பாய்ந்தாற் போல் 'நீ படிப்பின் காரணமாகப் பட்டினம் செல்வாய்' என்றார். அந்த ஒரு விஷயத்தில்தான் சோதிடர் வாக்கு மெய்த்தது. மற்ற செய்திகள் பொய்த்தன. எழுத வேண்டாமென நினைக்கிறேன்.

காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தாற்போல ஏதோ சில காரியங்கள் தான் மெய்யாகிறதே தவிர மற்றதிலும் இல்லை. ஆகவே பாதிக் கிணறு தாண்டியது போன்றுதான் இந்தச் சோதிடம்.

பாதை நடுவில் செல்லும் ஓர் பாவையின் மேல் ஒரு சாருளி ஏறும் சமயத்தில் ஓட்டியவன் மிகவும் சிரமப்பட்டு அவ்வண்டியை நிறுத்தி விபத்திற்குள்ளாகாமல் தடுக்கிறான். இந்த நேரத்திலே அப் பாவை கூறுகின்றான்: "சோதிடர் கூறியது போல் கண்டத்திலிருந்து தப்பி விட்டோமே" என்று. முயற்சியைக் கடைப்பிடித்த ஒருவனின் உத்தமமான உழைப்பு உதாசீனப் படுத்தப்படுவது நேர்மையாகுமா!

உலகத்தில் ஒரு வீரன்

வித்துவான் க. வேந்தனார்

○★○

அலைமேலே அலைமோதும் ஆழ்கடலை நீந்தி
  அனைத்துலகும் வரவேற்கும் ஆண்மையினை பெற்றேன்
மலைபோலக் கலங்காத மனவலிமை உற்றோன்
  மாவீரன் நவரத்ன சாமிபுகழ் வாழ்க!

பாக்குநீ ரிணையென்னும் பருங்கடலை நீந்திப்
  பாரெல்லாம் ஈழத்தின் புகழ்படரச் செய்தோன்
ஊக்கமுடன் உலையாத உளத்திண்மை உடையோன்
  உலகத்தில் ஒருவீரன் நவரத்னம் என்போம்.

மலைமலையாய் எழுந்தலைகள் மார்பின்மேல் மோத
  மாறியெழும் நீர்ச்சுழிகள் வந்துவழி மாற
அலைமேலே அலையாய்ப்போய் ஆழ்கடலைக் கடந்தோன்
  ஆற்றல்மிகும் நவரத்ன அண்ணலெனச் சொல்வோம்.

மன்னிமய மலைமேலே கொடிநாட்டி இந்த
  வையமெலாம் இசைபோக்கி வாழ்தமிழன் வீரம்
இன்னுமுள தென்பதற்கோர் இலக்கியமாய் நின்றோன்
  இருங்கடல்பாய் நவரத்ன ஏந்தலெனக் கண்டோம்.

முப்பதுகல் தொலைகொண்ட முழங்குகடல் நீந்தி
  முழுதுலகம் பாராட்ட முதன்மைபெறு வீரன்
செப்பரிய திறலாளன் நவரத்ன சாமி
  செயல்பாடிச் செம்மாந்து திசையனைத்தும் செல்வோம்.

இவைகளையெல்லாம் சிந்திக்கின்ற நேரத்திலே நலிந்து கிடக்கிற நம் நாட்டுக்கு இந்த நாளும் கிழமையும் கூறிடும் சோதிடம் தேவையில்லை.

சென்னை
13—2—54 *ந. சுப்பராவ்*

★

ஒரு பெரிய உத்தியோகஸ்தரின் மனைவிக்கு உடம்பு வியாதியால் பீடிக்கப் பட்டிருந்தது. பல சோதிடர்கள் அந்த அம்மாளின் ஜாதகத்தைப் பார்த்துத் தசை மாரக தசை, இனிப் பிழைக்க ஏதுவில்லை என்று முடிவு கட்டி விட்டார்கள். பெரிய டாக்டர்கள் வியாதி கடுமையாக இருக்கிறது, இது நிவர்த்தியாக மாட்டாது என்று சொல்லி விட்டார்கள். கடைசியாக நான் அந்த அம்மாள், அவள் புருஷன், புத்திரன் ஜாதகங்களைப் பரிசீலனை செய்து "புத்திரனுக்குக் கர்மாதி பத்தியம் வரவில்லை. புருஷனுக்குக் களத்திரத்தை இழக்கும் தசை இல்லை. பூர்வ கர்ம தோஷத்தால் கஷ்டப்படுகிறாள்" என்று கண்டு பிடித்தேன். தோஷ நிவர்த்திக்குக் கர்ம காண்ட பரிசீலனை செய்து அந்தப்படி பரிகாரங்கள் செய்து பிழைத்துச் சுகமாய் இன்னும் இருக்கிறாள். இது நடந்து சுமார் இருபது வருஷங்கள் ஆகின்றன.

தஞ்சாவூர் ராஜ்யத்தை அரசாண்ட சரபோஜி ராஜாவுக்குச் சோதிடத்தில் ரொம்ப நம்பிக்கையுண்டு. அவர் அரண்மனையில் அநேக சோதிடர்களை வைத்து ஆதரித்து வந்தார். சோதிடர் சொல்கிறபடியே நடப்பார். எங்கு போனாலும் சோதிடர்களை அழைத்துப் போவார்.

ஒருநாள் காட்டுக்கு வேட்டையாடப் போகும் போது சோதிடர் மந்திரி முதலிய பரிவாரங்களுடன் போனார். சோதிடரோடு வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருக்கையில் நான் அரண்மனைக்குத் திரும்பிப் போகும்போது எந்தக் கோட்டை வாசல் வழியாகப் போவேன் என்று கேட்டார். உடனே சோதிடர் கேட்ட சமயத்தையும் கிரகங்கள் அப்போது நிற்கும் நிலைமையையும் தசாபுத்தி கோசாரங்களையும் ஆராய்ந்து "மகாராஜா, இப்போது தாங்கள் கேட்ட சமயம் தாங்கள் நான்கு கோட்டை வாசல் வழியாகவும் போக மாட்டீர்கள். கோட்டையின் கீழ்ப்புற மதிளில் புதிதாக ஒரு வாசல் ஏற்படுத்திக் கொண்டு அதில் குதிரை மேல் போவீர்கள். அப்போது உச்சியில் உள்ள ஒரு கல் தலையில் பட்டு இரத்தம் உண்டாகும்" என்று எழுதி முத்திரை யிட்டு ராஜாவிடம் கொடுத்தார். 'இதை அரண்மனையில் போன பிறகு பிரித்துப்']பார்க்க வேணும்' என்று கேட்டுக் கொண்டார். ராஜா அதை வாங்கி வைத்துக்கொண்டு, 'சோதிடர் நான்கு கோட்டை வாசலில் ஒன்றைத் தான் குறிப்பிட் டிருப்பார். அது சரியாக வந்தாலும் வரும்' என்று நினைத்து மந்திரியிடம் கீழ் வாசல் மதிலை இடித்துப் புது வாசல் வைக்கும்படி உத்தரவிட்டார். அந்தப்படி உடனே செய்யப்பட்டது. ராஜா அந்த வழியாகக் குதிரை மேல் போனார்.

உயரத்தில் உள்ள கல் தட்டி ராஜாவுக்கு ரத்தம் வந்தது. ராஜா சோதிடர் எழுதிக் கொடுத்தபடியே நடந்ததைப் பார்த்து ஆச்சரியப்பட்டுச் சோதிடருக்கு ஏராளமான வெகுமதி கொடுத்தும், திருவையாற்றுக்குப் பக்கத்தில் உள்ள ஒரு கிராமத்தையும் சர்வ மான்யமாய்க் கொடுத்தார். அந்த வம்சத்தார்கள் அதை இப்போதும் அநுபவித்துக் கொண்டு வருகிறார்கள்.

இந்தமாதிரி சோதிடத்தைப் பற்றி எவ்வளவோ சொல்லலாம். ஆகையால் சோதிடம் பொய்யல்ல.

திருச்சி
20-2-54 **வி. எஸ். ஆர். ராஜகோபாலய்யங்கார்**

எனது ஜாதகத்தை மலையாள சிறந்த சோதிட ஆசானும், சோதிட நிபுணருமான ஒரு நம்பூத்திரி பொருத்தம் பார்த்து விவாகம் நடந்தது. பின் எனது மனைவியின் பெற்றோர் சோதிடர்களிடம் குழந்தைகள் எப்போது பிறக்கும் என்று கேட்டனர். அதற்கு 'விவாகமான ஒரு வருஷத்தில் முதல் மனைவி இறப்பாள். முதல் மனைவியிடம் குழந்தைகள் இல்லை. இரண்டாவது விவாகத்தில் தான் குழந்தைகள் உண்டு' என்றும் எனது ஜாதகத்தில் ஏழில் ராகு இருக்கிறான் என்றும் கூறிவிட்டனர்.

இதன் பலனாக நாங்கள் பல துன்பங்களை அநுபவிக்க நேரிட்டது. எனது மனைவியின் பெற்றோர்கள் தமது மகள் இறந்து விடுவாள் என்று கவலைப் பட்டனர். மனைவி இருக்கும் போதே எனக்கு மறு விவாகம் செய்ய முற்பட்டனர். அதனால் நான் அடைந்த இன்னல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. எனக்கு அதே மனைவியிடம் குழந்தை பிறந்து, தற்சமயம் ஐந்து குழந்தைகள் இருக்கிறார்கள். இரண்டாந்தார விவாகமும் செய்யவில்லை. சோதிடர் சொற்களால் கஷ்டம் அநுபவிக்க நேரிட்டவனில் நான் ஒருவன்.

உடன்குடி
10—2—54

பி. குழைகாத்தான்

★

ஒவ்வொன்றுக்கும் சகுனமும், நாளும் பார்ப்பதில் அதிகக் கெடுதல்தான் நேருகிறது. எங்கள் உறவினர் ஒருவருக்கு அதிக சிரமத்தின் பேரில் ஒரு உத்தியோகத்துக்காக 'இன்டர்வ்யூ'வுக்கு அழைப்பு வந்தது. அந்த வேலை கிடைப்பது குதிரைக் கொம்பாக இருந்த காலம். பையனின் தகப்பனார் "அன்று நாள் நன்றாக இல்லை, போக வேண்டாம்" என்று தடுத்து விட்டார். அவர் வார்த்தையைத் தட்ட முடியாமல் பையன் 'இன்டர்வியூ'வுக்குப் போகவில்லை. பிறகு நான்கு வருஷங்கள் வரையில் வேலை கிடைக்காமல் சிரமப் படவேண்டி வந்து விட்டது.

எங்கள் வாழ்க்கையில் இன்னொரு சம்பவம். எங்களுக்கு வெகு நாட்கள் குழந்தைப் பேறில்லாமலிருந்து முதல் குழந்தை பிறந்தது. நான் குழந்தையுடன் முதன் முதலாகப் புக்ககம் கிளம்பினேன். என்னைக் கொண்டுவிடப் பார்த்திருந்த நன்னாளில் சில தடங்கல்கள் நேரவே, பிறகு நாள் பார்க்க அவகாசமில்லாமல் பரஸ்தானம் இருந்தேன். அன்று பெய்த மழை காரணமாகப் பரஸ்தானம் பலனற்றுப் போயிற்று. ஆயினும் விடாமல் மறு நாள் கிளம்பினேம். நான் வேலூர் போக வேண்டும். அன்று ஆடி மாதத்துக் கிருத்திகை. காட்பாடி ஸ்டேஷனில் திருத்தணி முருகனுக்குக் காவடி எடுக்கும் பக்தர்களின் எண்ணிக்கையால் கூட்டம் தாங்கவில்லை. மேம்பாலம் நடந்து போக ஒரு மணி நேரம் பிடித்து விட்டது. பரணி—கிருத்திகை கூடாது என்பதும் என் விஷயத்தில் பொய்த்து விட்டது. எங்களுக்கோ குழந்தைக்கோ இன்று வரையில் ஆண்டவன் அருட் கருணையால் யாதொரு கெடுதலும் நேரவில்லை. இச் சம்பவம் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தொன்பதாம் ஆண்டில் நடந்தது.

ஹைதராபாத்
16—2—54

எம். கே. ஜயலக்ஷ்மி.

★

என் சகோதரிக்கு மூல நக்ஷத்திரம். ஆகையினால் ஆயிரக் கணக்கில் செலவு செய்து அலைந்தும் யாரும் அவளை மணந்து கொள்ள முன் வரவில்லை. ஏனெனில் மூல நக்ஷத்திரம் மாமனாரைக் கொன்று விடுமாம். கடைசியில் என் பாட்டனார் கேட்டை நக்ஷத்திரமென்று "பொய் ஜாதகம்" தயாரித்தார். உடனே அவளுக்கு மணமாகி விட்டது. கடைசியில் ஆச்சரியமென்ன! என் சகோதரியின் மாமனாருக்கு 102 வயதாகிறது. இன்று வரை சந்தோஷமாக இருக்கிறார். வேண்டுமானால் விலாசம் தருகிறேன். யார் வேண்டுமானாலும் தரிசித்து விட்டு வரட்டும். "ஆயில்ய நக்ஷத்திரம், பூராட நக்ஷத்திரம் நூலாடாது" என்று சொல்லுவார்கள். நன்றாக ஆடிக் கொண்டிருக்கிறது, இன்று வரையில்.

என் ஜாதகத்தை ஓர் சோதிட நிபுணர் பார்த்து உன் போன்ற அதிர்ஷ்ட ஜாதகத்தைப் பார்த்ததில்லை என எழுதிக் கொடுத்தார். இன்றுவரை மானேஜ்மெண்ட் பள்ளியில் உழைத்து உழைத்துப் பயனின்றி நைந்து வருகிறேன். எந்த அதிர்ஷ்டமும் வரவில்லை. என் வரையில் எனக்குச் சோதிடத்தில் நம்பிக்கை இல்லை.

கோயம்புத்தூர்
10—2—54

வி. எஸ். தேவி

★

நான் சித்திரை நக்ஷத்திரத்தில் என் பெற்றோருக்கு இரண்டாம் புத்திரனைப் பிறந்தேன். என் நக்ஷத்திர பலனைக் கணிக்க ஜோதிஷ நிபுணர் வழக்கம் போல் குடும்பத்திற்குரியவர் வந்தார். சித்திரை நக்ஷத்திரத்தில் பிறந்திருப்பதால் இவன் தகப்பனாரை ஒரு அலுவலையும் கவனிக்க வைக்காது சிரமிக்க வைத்துவிடும் என்றார். அவ்வளவு

போட்டிக் கதைகள்

அகில உலகச் சிறு கதைப் போட்டிக்காக வந்த தமிழ்க் கதைகளிலிருந்து நீதிபதிகளால் நாலு கதைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட விவரம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த நாலு கதைகளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, இந்தியாவில் அகில உலகச் சிறுகதைப் போட்டியை நிர்வகிக்கும் பொறுப்புள்ள "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகைக்கு அனுப்பியுள்ளோம். அதன் முடிவு உரிய காலத்தில் தெரிய வரும். மேற்படி நாலு கதைகளைத் தவிர, பிரசுரத்துக்கு உரிய கதைகள் என்று ஐம்பதுக்கு மேற்பட்ட கதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் இரண்டு போட்டிக் கதைகள் "கல்கி" புத்தாண்டு மலரில் வெளியாயின. பிரசுரத்துக்கென்று எடுத்த மற்ற கதைகளும் இனி தொடர்ந்து கல்கி இதழ்களில் வெளியாகி வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கல்கி

(வாரப் பதிப்பு)

சந்தா விவரம்

		ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா, இலங்கை	ரூ.	13-0-0	6-8-0
பர்மா, மலேயா, வெளிநாடு	ரூ.	16-4-0	8-2-0

குறிப்பு :—வி. பி. பி. மூலம் அனுப்புவது கிடையாது. தயவு செய்து முன் பணம் அனுப்ப வேண்டும். இலங்கை நேயர்கள் மட்டும் வி. பி. பி. மூலம் சந்தாத் தொகையைச் செலுத்தலாம்.

கடிதம் எழுதும்போது சந்தா நேயர்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிடவும்.

மானேஜர் - கல்கி காரியாலயம் - சென்னை

தான். என் தகப்பனார் நல்ல நாளிலேயே எல்லோரையும் கரித்துக் கொட்டுவார். இப்படிப் பலன் வேறு இருக்கிறதென்றால் கேட்க வேண்டுமா! அதன் பின் அனுபவத்தைக் கேளுங்கள். முன்பு என் அண்ணன் பிறந்த நக்ஷத்திரம் என் தகப்பனாரை நல்ல நிலையில் வைக்குமென்றார் அச் சோதிடர். என் தகப்பனார் வேலைக்குத் தேடாத இடமெல்லாம் தேடிப் பார்த்தார். கிடைத்தபாடில்லை. ஆனால் நான் பிறந்த நான்காம் நாள் சிவகங்கை எஸ்டேட்டில் நிரந்தர வேலை யொன்று கிடைத்தது! மேலும் என் நக்ஷத்திர பலனைக் கணிக்கையில் அச்சோதிடர், 'இவன் பி. ஏ. வரை தட்டுத் தடங்கலின்றிக் கட்டாயம் படித்துத் தேறி விடுவான்' என்றார். என் அண்ணனையாவது பத்தாவது வரை படிக்க வைத்தார் என் தகப்பனார். ஆனால் என்னை ஒன்பதாம் வகுப்பிலேயே நிறுத்தி விட்டார் என் தந்தை.

என் அண்ணன் இலங்கைக்குப் போய் ஐந்தரை வருட காலம் ஆகிறது. அவர் இதுவரை இங்கு வரவில்லை. வேறு ஒரு சோதிடரை இரண்டு வருடங்களுக்கு முன் கூப்பிட்டு அவர் எப்போது இங்கு வருவார் எனக் கேட்டதற்கு வருகிற தைமாதத்தில் வந்து விடுவார் என்றார். இன்னொருவரைக் கேட்டதற்கு வருகிற "சித்திரை" தப்பினால் "ஆவணி" என்றார். இதை நம்பிக்கொண்டு என் அண்ணனுக்கு "நீ எப்போது இங்கு வருவாய்? கூடிய சீக்கிரம் புறப்பட்டு வா!" என்று கடிதம் எழுதினால், அதைத் தவிர மற்றவைகளுக்குத்தான் பதில் எழுதிக்கொண்டிருக்கிறான். இவைகளையெல்லாம் அறிந்தபிறகு சோதிடத்தில் எனக்கு எப்படி நம்பிக்கை ஏற்படும்!

பாளையங்கோட்டை
6—2—54

எம். பி. மூர்த்தி

★

நான் மாணவனாக இருந்தபொழுது சர்வகலாசாலைப் பரீட்சைக்குப் பணம் கட்ட ஒரு நாள் என் தகப்பனாரைப் பணம் கேட்டேன். அது சமயம் அங்கிருந்த சோதிடர் ஒருவர் அந்த நாள் நல்ல நாள் இல்லை என்றும், அன்று பணம் செலுத்தினால் நல்ல பலன் கிட்டாது என்றும் கூறினார். பரீட்சைக்கு நான் நன்றாகப் படித்திருந்ததாலும், தேர்ச்சி அடைந்துவிட முடியும் என்ற திட நம்பிக்கை இருந்ததாலும் அன்றே பணம் கட்டினேன். பரீட்சையிலும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றேன். பிறகு அதே சோதிடரைக் கேட்டதில், நல்ல நாளில் பணம் செலுத்தியிருந்தால் நான் எல்லோருக்கும் முதலாவதாகத் தேர்ச்சி அடைந்திருப்பேன் என்றார். ஆனால் என்னுடன் அதே பரீட்சை எழுதிய சில மாணவர்களுடைய திறமையை அறிந்த எனக்கு, நான் முதலாவதாகத் தேறுவது அசாத்தியம் என்று தெரியும். மேலும் சோதிடர் வாக்குப்படி அந்த நாளில் பணம் கட்டியிரா விட்டால் அந்தப் பரீட்சையே எழுதியிருக்க முடியாது. ஏனென்றால், அதுதான் பரீட்சைக்குப் பணம் கட்ட வேண்டிய கடைசி நாள். நல்ல நாளில் பணம் கட்டி விட்டுச் சரியாகப் படிக்காமலிருந்தால் தேர்ச்சி பெற்றிருக்க முடியுமா!

கோவை
21—2—54

எஸ். கண்ணன்

★

பிரபல கணித மேதையாகிய லீலாவதியின் விதவா யோகத்தை, சாஸ்திரங்களை நன்கு கற்று அறிந்த பண்டிதராகிய அவள் தந்தையால் கூடத் தவிர்க்க முடியவில்லை. மகளுடைய ஜாதகத்தில் இருக்கும் அங்காரக தோஷத்தை முன்னமேயே அறிந்திருந்த தந்தை, சர்வ சௌபாக்கியங்களையும் கொடுக்கும் மங்களகரமான முகூர்த்தத்தில் அவளுக்கு மணம் செய்விக்க ஏற்பாடு செய்தார். ஆனால் அங்கு விதி—அதாவது சோதிடம் தான் வெற்றி பெற்றது. சமயத்தைக் குறிக்கும் நாழிகைக் கிண்ணத்தில் இருக்கும் துவாரத்தை, (அப்பொழுது கடிகாரம் கிடையாது) அதில் குனிந்து நோக்கிக் கொண்டிருந்த லீலாவதியின் தலை அலங்காரத்திலிருந்து விழுந்த ஒரு முத்து அடைத்து விட்டபடியால் அது தப்பான முகூர்த்தத்தைக் காட்ட நேர்ந்தது. லீலாவதி பால விதவையாகித் தகப்பனாரிடம் வந்து சேர்ந்தாள். அவள் அவரிடம் கணித சாஸ்திரத்தைக் கற்றதின் பயனாக 'லீலாவதி' என்னும் அரிய கணித நூல் உருவாயிற்று. இது என் தந்தையும் உபாத்தியாயரும் சொல்லி நான் கேள்விப் பட்டது.

சோதிடம் உண்மை என்று நிரூபிக்கும்படியான அனுபவங்கள் என் வாழ்க்கையிலேயே நடந்திருக்கின்றன. நான் ஆறுமாதக் குழந்தையாயிருந்தபொழுது எங்கள் கிருகத்தில் விருந்தினராக வந்த ஒரு சோதிடர், எங்களுக்கு முன்பின் அறிமுக மில்லாதவர், என் ஜாதகத்தையும் என் தந்தையின் ஜாதகத்தையும் விரிவாக எழுதியுள்ளார். என்னுடைய 25 வயது வரையில் நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளையும் கூறியிருக்கிறார். இரண்டு பேர் விஷயத்திலும், சிற்சில அற்ப வித்தியாசங்களைத் தவிர, எல்லாம் முற்றிலும் உண்மையாக நடந்து கொண்டிருக்கிறது. அதிலும் தோற்றம், குணம், மனோ நிலைமை ஆகியவை மிகவும் பொருந்தியிருக்கிறது.

சோதிட சாஸ்திரம் உண்மையாகிலும், அதைக் கூறுபவர் சரியாகக் கற்றறிந்தவர்தானா என்று நமக்குத் தெரிய நியாயமில்லாமலிருப்பதால் அவர்கள் கூறும் சோதிடத்தை நம்பியிருப்பதில் பிரயோஜனமில்லை. பலாபலன்களை எதிர்பார்க்காமல் நாம் நம் கடமையைச் செய்வதும் முயற்சி பண்ணுவதும்தான் உத்தமம்.

சென்னை
26—2—54

சுமித்திரா ராமச்சந்திரன்



தேவியின் சாபம்

குமாரி மணியன்



அவன் குழந்தை முதலே மலையின் மடியில்! தவழ்ந்து விளையாடியவன். அவன் தகப்பனார் அந்தக் கிராமத்துத் திண்ணைப் பள்ளிக்கூட உபாத்தியாயர். ஊரிலே பெரியவர் அவர்தான். ஏதாவது முக்கிய விசேஷமென்றால் "பள்ளிக்கூடத்து ஐயா" இல்லாமல் ஒன்றும் நடக்காது. அந்த ஊரிலேயே மொத்தம் சுமார் இருபது குடும்பங்கள் தான் இருந்தன. முக்காலும் மலையேறுபவர்கள். ஏதாவது எழுதப் படிக்கத் தெரிந்தவர் அவர் ஒருவர்தான். ஊரில் ஒரு கடிதம் யாருக்காவது வந்தாலும், யாருக்காவது கடிதம் எழுத வேண்டுமானாலும் வாத்தியார் ஐயா இல்லாமல் ஒன்றும் நடக்காது. அந்த மலையேறிகள் கிராமத்துக்கு வாத்தியார் ஐயா தான் 'முடியில்லா' மன்னர். அப்படி மரியாதை மிக்க வாத்தியார் ஐயாவின் ஒரே மகனுக்கு மதிப்பில்லாமல் போகுமா? அப்பாவுக்குள்ள மதிப்பில் பாதியாவது, பிள்ளைக்கு வைக்க மாட்டார்களா? அதுவும் தாயை இளமையிலேயே இழந்துவிட்ட பிள்ளைக்கு.

ஆனால் சுரேஷுக்கு இதெல்லாம் பெருமையாகத் தோன்றவில்லை. அவர்கள் கிராமம் மலையடிவாரத்திலிருந்தது ஒன்றே அவனுக்குப் பெருமையாகத் தோன்றியது. மலைகளை அண்ணாந்து பார்ப்பதிலேயே அவன் காலத்தைச் செலவிட்டான். பனிமூடியுள்ள சிகரங்களைப் பார்த்துப் பெருமூச்சு விடுவதே அவன் தொழிலாகப் போய் விட்டது. தந்தை எண்ணிய எண்ணம் வேறு தான். எப்போதும் உள்ள ஒரே கருப்புக் கோட்டுக்குள் புகுந்து கொள்ளும் உபாத்தியாயர் ஆகி விட்டோம். தன் மகனாவது படித்து ஒரு சர்க்கார் உத்தியோகம் பார்க்க மாட்டானா என்பதே அவர் அவா. ஆனால் சுரேஷ் கண்ட கனவு வேறு. குழந்தை முதல் மலைகளே அவன் தோழர்களாயின. பனிப்பாறைகளே அவனுக்கு விளையாடும் துணைவர்களாயின. மலை உச்சிக்குச் செல்ல முயலும் அனேக வெள்ளைக்காரர்களை அவன் கண்டிருக்கிறான். அவர்கள் வருவது தெரிந்தால் எத்தனை மைல்களானாலும்

சுரேஷ் போய் அவர்களைக் காணத் தவற மாட்டான். அவர்களைப் போல் தானும் ஏறக்கூடாதா என அவன் எண்ணினான்.

தகப்பனார் தன்னால் முடிந்த மட்டும் பார்த்து விட்டார். அனா ஆவன்னாவும், டனா டாவன்னாவும் அவன் தலையில் ஏறவேயில்லை. ஆனால் மலை உச்சிகளின் பெயர்கள், அவை களை ஏற வழிகள் இவைகள் அவனுக்குத் தலைகீழ்ப் பாடம். இப்படியாக சுரேஷ் தனது இருபது வயதுக்குள் மலையேற்றத்தில் மிக்க திறமை சாலியானான். அனேக மலையேறும் கோஷ்டிகளுடன் போய்ப் பெயர் பெற்றான். அவனது ஒரே எண்ணம் யாவரும் இதுவரை ஏறியிராத "லெமூரியா" சிகரத்தை அடைய வேண்டு மென்பதே. லெமூரியா சிகரம் அப்படி யொன்றும் மிகப் பெரிய சிகரமல்ல. ஆனால், லெமூரியாவுக்குப் போகும் வழி ஒரே செங்குத்தான பனிப் பாறை. ஒரு வரும் அடைய முடியாத வழி. அதனா லேயே பலரும் அதை நெருங்கவே அஞ் சினர். தவிரவும் லெமூரியா சிகரத்தை ஒரு தெய்வம் காப்பதாகவும் அதை அடைந்தவன் திரும்பமுடியாது என்றும் வேறு ஒரு வதந்தி உலாவியது. அது உண்மையோ, பொய்யோ தெரியாது. ஒருவரும்தான் லெமூரியா உச்சிக் குப் போனதில்லையே! ஆனால் அந்தக் கிராம வாசிகள் அதை நன்கு நம்பினர். அவர்களுக்கு "லெமூரியா தேவியே" தெய்வம். தெய்வத் தின் மேல் மனிதக் கால் படுவதே பாபம் என்ற எண்ணம் அவர்களுக்கு உண்டு. மலையேறும் வெள்ளைக்காரர் களுடன் உதவிக்குப் போயே பணம் சம்பாதிப்பது அவர்கள் தொழில் என்றாலும் லெமூரியாவில் மட்டும் அவர்கள் ஏற முயன்றது கிடையாது. வெள்ளைக்காரர்களும் அதை ஏற முயலவில்லை. ஏனெனில் இதைவிடப் பெரிய மலைகள் அவர்கள் கவனத் தைக் கவர்ந்து இழுத்தன.

சில நாட்களாகவே தன் மகன் என்றுமில்லாதபடி உற்சாகம் குன்றி யிருப்பதைக் கண்டார் வாத்தியார் ஐயா. சுரேஷ் அப்படி என்றுமே இருந்ததில்லை. ஆனால் அறிவிலும் அனுபவத்திலும் தேர்ந்த வாத்தியார் ஐயாவுக்கு விஷயம் விளங்க அதிக நாளாக வில்லை. சுரேஷ் காதல் கொண்டிருக்கிறான், காதல் ஜுரம் அவனைத் தாக்கி யிருக்கிறது எனப் புரிந்து கொண்டார். காதல் மணம் அம்மலையடிவார வாசிகளுக்குப் புதி தல்ல. ஆனால் எப்போதும் வீர மண மாகவே யிருக்கும் அவர்கள் கலியா ணங்கள். ஒரே பெண்ணை எவ்வளவு பேர் வேண்டுமானாலும் காதலிக்க லாம். ஆனால் ஏதாவது ஒரு போட்டி ஏற்படுத்துவார்கள். அதில் ஜயித்த வனே அப்பெண்ணை அடைவான். இதுவே அவர்களுடைய வழி.

அந்தக் கிராமத்துக்கு இரண்டு மாதத்துக்கு முன் ஒரு புதிய குடும்பம் குடியேறி யிருந் தது. அவர்களும் மலை யேறிகளே. ஆனால் அவர்கள் கொஞ்சம் பணம் படைத்தவர்கள் போலும்! இல்லா விட்டால் வந்த உட னேயே நாலு ஏக்கர் நிலம் லெமூரியா மலை யடியில் வாங்கிக் கொண்டு அங்கேயே வீடு கட்டி வாழ்வார்களா? கிராமத்தில் வீடு களா இல்லை? இது கிராம வாசிகளுக்குப் பெரும் புதிராக இருந்தது. அவர்களுடன் தாங்கள் பழகலாமா, வேண்டாமா என்ற பிரச்னையைக் கிளப்பினார்கள். இப் புதுக் குடும்பத்தார் கிராமவாசிகளுடன் அதிகம் பழக விரும்புவதாகவும் தெரிய வில்லை. இப்படி யிருக்கும் காலத்தில்தான் சுரேஷ், நளினியைக் காண நேரிட்டது. லெமூரியா மலையடியிலே வழக்கம் போல் அவன் திரிந்து கொண்டிருந்த போது பொதிகழுதை மீது யாரோ வருவது தூரத்தில் தெரிந்தது. யாரா யிருக்கலாம்? ஒருவரும் அங்கு வரத் துணிய மாட்டார்களே! நெருங்க நெருங்க வருவது ஒரு பெண் எனத் தெரிந்தது... அவள்தான் நளினி! புதிதாக வந்திருக்கும் குடும்பத்தினரின் ஒரே பெண்.

"ஆகா! என்ன அழகு! லெமூரியா மலை உச்சியைவிட அவள் முக காந்தி பன் மடங்கு பிரகாசிக்கிறதே!" என்று எண்ணினான் சுரேஷ். அன்று முதல் அவனது மனத்தில்...



இடங்கொண்ட லெமூரியாவுடன் நளினியும் சேர்ந்து கொண்டான். தினம் இருவரும் சந்தித்துப் பேசுவது வழக்கமாகி விட்டது. ஆனால் நளினியை அவன் உண்மையிலேயே அடைய முடியுமா? இதுவே அவன் கவலை; அவன் உற்சாகம் இதனாலேயே குன்றியது.

இந்தச் சமயத்தில்தான் ஒரு வெள்ளைக் காரக் கோஷ்டி லெமூரியாவில் ஏற வரப் போகிறது என்று செய்தி வந்தது. கிராமத்தில் பெரும் கொந்தளிப்பு. வருகிறவர்களை அப்படியே ஈட்டியால் களைந்து விட வேண்டும் என்றனர் ஒரு சாரார். நம் தெய்வத்தை நாம் பாதுகாக்காவிடில் அழிந்தே போவோம் என்றார்கள் சிலர். கடைசியாக எழுந்தார் வாத்தியார் ஐயா. அவர் வாக்கு வேத வாக்கு ஆயிற்றே! அவர் கூறினார்: ''சகோதரர்களே! நம் தெய்வத்தின் சக்தி நமக்குத் தெரியும். அதைக் கடக்க எந்த மனித சக்தியாலும் ஆகாது, என நமக்குப் பூரண நம்பிக்கை. அப்படியிருக்கும் போது நாம் தடுப்பது நம் தெய்வத்தை நாம் நம்பாதது போலாகும். அவர்களை லெமூரியா தேவியே தண்டிப்பாள். ஆனால் நம் கிராமத்தில் ஒருவரும் வெள்ளைக்காரர்களுக்கு உதவக் கூடாது'' என்றார்.

வாத்தியார் ஐயா கூறிய நியாயம் சரியெனப் பட்டது எல்லோருக்கும். எல்லோரும் தேவியின் சாபத்தில் நம்பிக்கையுடன் அமைதி அடைந்தனர்.

அன்று நளினியை வழக்கம் போல் சந்தித்தான் சுரேஷ். நளினி அன்று குதூகலமாக இருந்தாள். காரணம், மலையேற வரும் வெள்ளைக்கார கோஷ்டியில் அவள் அண்ணனும், மாமன் மகனும் இருந்தனர்.

''சுரேஷ்! நீயும் கட்டாயம் கோஷ்டியில் சேர வேண்டும். என் சுரேஷ்தான் முதலில் மலை உச்சியை அடைவான். என்ன அப்படித்தானே?'' என்றாள் நளினி. சுரேஷுக்குப் பகீரென்றது. கிராமத்திலேயோ தந்தையின் தலைமையில் வெள்ளைக் கோஷ்டியை எதிர்க்கிறார்கள். இங்கேயோ காதலி சவால் விடுகிறாள். பதில் கூறாமல் வேறு ஏதோ சொல்லிப் பேச்சை மாற்றினான். ஆனாலும் சுரேஷ் மனம் பட்ட பாட்டை யாரால் விவரித்துக் கூற முடியும்? இரண்டு நாட்களாக அவன் நளினியைக் கூடப் பார்க்கவில்லை. கிராமத்தில் ஏற்கெனவே நளினிக்கும் சுரேஷுக்கும் உள்ள சிநேகத்தைப் பற்றிச் சிறிது பேச்சாக இருந்தது. என்றைக்கு அது முற்றுமோ! நளினி குடும்பத்தைக் கிராமத்தார் வெறுத்தனர். ஆனால் சுரேஷ்! அவன் என்ன பண்ணுவான்? அவன் மனம் அவனிடம் இல்லையே! அதைத்தான் பறி கொடுத்திருந்தானே!

அன்று கிராமத்தினர் ஒரு அவசரக் கூட்டம் போட்டனர். வாத்தியார் ஐயாதான் வழக்கம் போல் தலைவர். வரும் வெள்ளைக் கோஷ்டி புதிதாகக் குடியேறியிருக்கும் குடும்பத்தினருடன் தங்கப் போவதாகச் செய்தி வந்திருந்தது. அது தவிர அந்தக் குடும்பத்தினர் சிலர்கூட அந்தக் கோஷ்டியிலிருப்பதாகத் தெரிய வந்தது. கிராம மக்களின் கொந்தளிப்பைக் கண்டு வாத்தியார் ஐயாவே அயர்ந்து விட்டார். உடனே அந்தப் புது வீட்டுக்குத் தீ வைத்து விடப் பல இளைஞர்கள் முன் வந்தனர். வாத்தியார் ஐயா சமாதானம் சொன்னார். சிலர் சுரேஷ், நளினியின் காதலைக் கூறி வாத்தியார் ஐயாவையே மட்டம் தட்டப் பார்த்தனர். ஆயினும் கடைசியில் பழையபடி வாத்தியார், ''தேவியின் சாபம் தானாகவே வரும். இதில் மனிதர் தலையிட நியாயம் இல்லை'' என்று ஒருவாறு கூட்டத்தைக் கலைத்தார். அன்று முதல் வாத்தியார் ஐயாவையே கிராமவாசிகள் ஒரு மாதிரி பார்க்க ஆரம்பித்தனர்.



அன்று இரவு சுரேஷ் தூக்கமின்றிக் கிராம எல்லையில் உட்கார்ந்திருந்தான். திடீரென அவனை யாரோ உலுப்பியதைக் கண்டு திரும்பிய அவன் நளினியைப் பார்த்துத் திடுக்கிட்டான். ''ஏன் சுரேஷ்! ஒரு வாரமாக உன்னைக் காணவில்லை? உன் உடம்பு சரியில்லையா? நீ இதற்குள் தயாராக இருக்க வேண்டுமே! நாளை மறு நாள் என் அண்ணனும் மாமன் மகனும் வருகிறார்கள்'' என்று கூறினாள். சுரேஷால் பேசமுடியவில்லை.

"நளினி! என்னால் வெள்ளைக் கோஷ்டியில் சேர முடியாது. மன்னித்து விடு!" என்றான் தட்டுத் தடுமாறிக் கொண்டே.

திடுக்கிட்டாள் நளினி. "சுரேஷ்! நீ அவ்வளவு கோழையா? நான் நினைக்கவேயில்லை. என் காதலன் வீரன் என்ற எண்ணம் இன்றுடன் மடிந்து விட்டது" என்றாள். பொதி கழுதை புறப்பட்டது. சுரேஷ் மட்டும் தனியே உட்கார்ந்திருந்தான்.

வெள்ளைக் கோஷ்டி வந்து விட்டது. அவர்கள் எல்லோரையும் நளினியே எதிர்கொண்டு போனாள். அவளும் அவள் மாமன் மகனும் ஒரே கழுதையில் உட்கார்ந்து தெரு வழியே போவதைப் பார்த்த சுரேஷ் மனம் படாத பாடுபட்டது. தந்தையிடம் ஓடினான். தானும் போக அனுமதி கோரினான்.

வாத்தியார் ஐயா உருத்திர மூர்த்தியானார். "என் மகன் என் சொல்லை மீறுவதா? நீ போனால், என்னைக் கொன்ற பாவம் உன்னை அடையும்!" என்றார்.

சுரேஷ் செய்வதறியாமல் தயங்கினான். லெமூரியா மலையடியில் அமர்ந்து சிந்தித்தான். புதர் மறைவில் அமர்ந்த அவன் வெள்ளைக் கோஷ்டியுடன் நளினி வருவதைக் கவனித்தான். அவள் மாமன் மகன் ஒரு வெள்ளையனிடம் கூறினான். "நான்தான் முதலில் லெமூரியாச் சிகரத்தை அடைய வேண்டும். ஏனெனில் யார் முதலில் அடைகிறார்களோ, அவர்களையே நளினி கணவனாகப் பெறுவாளாம்" என்றான்.

சுரேஷ் மனத்தில் ஒரு பேரிடி விழுந்தாற் போலிருந்தது. அவன் நிச்சயித்து விட்டான். திடீரென ஓடி வெள்ளையர் கோஷ்டித் தலைவனிடம் போய்த் தானும் வருவதாகக் கூறினான். நளினிக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. "சுரேஷ்! நீதான் உண்மையான வீரன்! நீயே முதலில் மலை உச்சியை அடைவாய் என்பது நிச்சயம்" என்றாள்.



"சும்மா இரு, சாமி! நீ வெறும் ஆண்டி; நான் குடுகுடுப்பாண்டி."

நளினியின் மாமன் மகன், சுரேஷை முறைத்துப் பார்த்தான். ஆனால் சுரேஷுக்கு அதைக் கவனிக்க நேரமில்லை. அவன்தான் நளினியையே நோக்கிக் கொண்டிருந்தானே! மாமன் மகனின் உள்ளத்திடையே ஒரு சிறு எரிமலையே குடி கொண்டது. விஷம் கக்கின அவன் விழிகள். வெள்ளையர் கோஷ்டிக்குச் சுரேஷின் சாமர்த்தியம் முன்பே நன்றாகத் தெரியும். அவர்கள் அவனை முழு மனத்துடன் வரவேற்றார்கள்.

கிராமம் முழுவதும் கொந்தளிப்பு. பனியால் மூடப்பட்ட அமைதியான லெமூரியா மலை திடீரென்று நெருப்பைக் கக்கும் எரிமலையாகி விட்டால் கூட அந்தக் கிராமவாசிகள் அவ்வளவு வியப்பு அடைந்திருக்கமாட்டார்கள். ஆனால் சுரேஷின் செயல் அவர்களை அதைவிடத் தூக்கி வாரிப் போட்டது. வாத்தியார் ஐயாவோ கேட்கவேண்டாம். அப்படியே கல்லாகி விட்டார். பெற்ற பிள்ளை செய்த காரியம் அவரை அப்படியே மனம் இடிந்து போகச் செய்தது.

வெள்ளையர்கள் நாலு கோஷ்டிகளாய்ப் பிரிந்து மலையேறினார்கள். சுரேஷும் நளினியின் மாமன் மகனும் ஒரே கோஷ்டியிலிருந்தனர். ஏறுவதற்கு முன் நளினி யாவருக்கும் விடை கொடுத்து அனுப்பினாள். சுரேஷிடம் ரகசியமாக "நீ வரும் பொழுது நான் மாலையுடன் தயாராயிருப்பேன்" என்றாள் நளினி.

ஐந்து நாட்கள் ஆகி விட்டன. அந்த ஐந்து நாட்களும் கிராமவாசிகள் ஒருவரும் தூங்கவில்லை. ஒவ்வொரு கணமும் ஏதோ ஒன்றை அவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அது வேறொன்றுமில்லை. லெமூரியா தேவியின் சாபம்தான். இன்னும் சாபம் வரவில்லையே என்று கிராமமே ஏங்கித் தவித்தது. வாத்தியார் ஐயா இருபத்தி நாலு மணி நேரமும் பூஜை யறையிலேயே இருந்தார். "லெமூரியா தேவி! என் சுரேஷைக் காப்பாற்று" என்று அவர் வாய் முணுமுணுத்தவாறே இருந்தது.

சுரேஷ் கோஷ்டி எல்லாவற்றிற்கும் முன்னால் செல்கிறது என்ற செய்தி கிராமத்தையே பரபரப்பிலாழ்த்தியது. வாத்தியாரும் பூஜையைப் பலமாகச் செய்தார்.

சுற்றி எங்கிலும் தூய்மையான வெண்மை, கடவுளின் சொந்த நாட்டுக்கே வந்து விட்டது போலிருந்தது. இன்னும் இருபத்தைந்து அடிகள் தானிருக்கும். லெமூரியா சிகரம் மாண்புடன் நிமிர்ந்து நின்றது. சுரேஷின் கோஷ்டியில் கூட வந்த இருவரும் கீழேயே தங்கி விட்டார்கள். இவனும் நளினியின் மாமன் மகனும் தான் மூச்சைப் பிடித்துக் கொண்டு வெற்றிக்கு அருகே வந்து விட்டனர். நளினியின் மாமன் மகன் கடைசியாக அயர்ந்து விட்டான். இனி அவனால் ஒரு அடி கூட எடுத்துவைக்க முடியாது. அப்படியே


தெம்பூட்டுகிறது
காலையில் உபயோகித்தால்!
மென்மை உணர்ச்சி
மணிக்கணக்காய் மாறுது!
காஷ்மீர் பொக்கே டேல் எவ்வளவு தெம்பூட்டுகிறது! அந்த மென்மை உணர்ச்சி மணிக் கணக்காக நீடிக்கிறது! ஈரத்தை உறிஞ்சி, அரிப்பும் புண்ணும் வராமல் தடுக்கிறது. குளுமை மணம், புத்துணர்ச்சி அளிக்கிறது.
கால்கேட் 1806 முதல்
தரத்துக்குப் பெயர்போனது
காஷ்மீர் பொக்கே
டால்கம் பவுடர்
ஆண்கள் விரும்பும் நறுமணம்
Cashmere Bouquet
TALCUM POWDER
C 86/15

படுத்து விட்டான். சுரேஷும் அதைவிட மோசமான நிலையில் தானிருந்தான். ஆனால் நளினியின் நினைவு அவனை உந்தித் தள்ளியது. கையில் மாலையுடன் நளினி அவன் மனக்கண் முன்பு காட்சியளித்தாள். மேலே ஏறினான். இன்னும் பத்தே அடி. லெமூரியாச் சிகரம் கைக்கு எட்டும் தூரத்தில் வந்து கொண்டேயிருந்தது. ஆனால் அந்தப் பத்து அடிகளும் பத்து மைல்கள் போல் இருந்தன. மனித சக்தி அவ்விடம் நிச்சயமாகத் தோற்றுவிடும். ஆனால் புனிதமான காதல் சக்தி அதை வென்று விடும் போல் தோன்றியது.

இன்னும் ஐந்தே அடிகள். கீழே கிடந்து பொருமுகிறான் நளினியின் மாமன் மகன். ஐயோ! கடைசியில் நளினி சுரேஷுக்கா? — தாங்க முடியாத அவமானம். இல்லை, ஒருகாலும் இல்லை — காத்திருந்தவன் இருக்கும் பொழுது நேற்று வந்தவனுக்கு என்ன உரிமை? "லெமூரியா தேவி, உன் சாபம் எங்கே? சுரேஷ் உன் தலைமீது காலை வைத்து விட்டானே! கடைசியில் நீ வெறும் கல் தானா?" என்று அர்த்தமில்லாமல் பிதற்றினான். அவனுக்கு எப்பொழுதுமே லெமூரியா உச்சியை அடையத் திகில் இருந்தது.

கடைசித் "தப்படி" லெமூரியா சிகரத்தில் நிற்கிறான் சுரேஷ். கடைசியில் வாத்தியார் ஐயாவின் வேண்டுகோளுக்குத் தேவி இரங்கி விட்டாள் போலும். யாரும் சாதிக்காத அற்புதம். உலகமே கண்டு வியக்கப் போகும் அற்புதம். அதைச் சாதித்து விட்டான் சுரேஷ். 'நளினி' என்று அவன் மகிழ்ச்சியுடன் கூவினான். அவள் நினைவு ஒன்றுதான் அவன் மனத்தில் நிறைந்திருந்தது. 'நளினி' என்ற அந்தச் சொல் கேட்ட மாமன் மகனின் நிலை குதிரையைத் தட்டி விட்ட துப்பாக்கி போல் ஆயிற்று. அவன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான். சுரேஷின் வெற்றியை அவனைத் தவிர சூரியதேவனும் பனிப் பாறைகளுமே கண்டார்கள். அங்கு வேறு எவரும் இல்லை.

மலை உச்சியிலிருந்து இறங்க ஆரம்பித்தான் சுரேஷ். அப்படியே உச்சியிலிருந்து குதித்து நளினியைக் காண மாட்டோமா என்றிருந்தது அவனுக்கு. "சுரேஷ்! நீயே பெரியவன். உண்மையில் உன் வெற்றி யாவருக்கும் கிட்டாத வெற்றி. நளினி உனக்கே சொந்தம். வா, உன்னை அணைத்து கொள்ளுகிறேன்" என்றவாறே நளினியின் மாமன் மகன் சுரேஷை நோக்கி எழுந்து வர ஆரம்பித்தான். சுரேஷ் முன்னே தாவி அவனை அணைந்தான். ஐயோ! அடுத்த நிமிஷம் சுரேஷ் அதலபாதாளத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். மாமன் மகனின் வெற்றிச் சிரிப்பு அம்மலை உச்சியில் பட்டு எதிரொலித்தது. மாமன் மகன் வெற்றி யடைந்து விட்டான். 'நளினி யாருக்கு?' என்ற கேள்வி இனி எழாதல்லவா? அவன் போட்ட திட்டம் வெற்றி பெற்று விட்டது. இனி சுரேஷைப் பற்றிப் பயமில்லை. சுரேஷ், நளினியின் கரம் பிடிக்கா விட்டாலும் பால்ய காதலியான லெமூரியாவின் சிகரத்தைப் பிடித்து விட்டான். ஆனால் அது யாருக்குத் தெரியப் போகிறது? சாட்சிகளான சூரியனும் மனப் பாறைகளும்தான் வாய் திறந்து பேச மாட்டாவே! கிராமம் முழுவதும் பயங்கர அமைதி நிலவியது. எல்லோரும் ஒருவித அச்சத்துடனே நடமாடினர். லெமூரியா உச்சியைப் பயத்துடனே யாவரும் பார்த்தார்கள். காரணம்? 'உச்சியை அடையு முன்னரே சுரேஷ் ஒரு பனிப் பாறை பெயர்ந்ததால் சரிந்து விழுந்து மடிந்தான். இனி அவன் சடலங் கூடக் கிடைக்காது' என்ற செய்தியை ஆட்கள் மூலம், கோஷ்டி அடிவாரம் வரும் முன்பே ஊரில் பரப்பி விட்டிருந்தான் நளினியின் மாமன் மகன்.

ஆம், லெமூரியா தேவியின் சாபம் கிடைத்து விட்டது. நளினிக்குப் பெரிய அதிர்ச்சி ஏற்பட்டு விட்டது. திடீரென்று "நீயா கோழை? இல்லை நான்தான் கொலைகாரி. உன் மரணத்துக்கு நானே காரணம்!" எனக் கதற ஆரம்பித்தாள்.

கிராம மக்கள் லெமூரியா தேவிக்கு பூஜை செய்தனர். பெரிய பூஜை. ஊரே திரண்டு கூடியிருந்தது. ஆனால் அந்த பக்தர்கள் கோஷ்டியில் வாத்தியார் ஐயாவைத்தான் காணவில்லை. வாத்தியார் பேசவே யில்லை. ஆனால் அவர் பூஜை நின்று விட்டது. இத்தனை வருஷங்களாக ஒரு நாள் கூடப் பூஜை செய்யத் தவறியதே யில்லை அவர். அவர் மனம்தான் லெமூரியா சிகரம் போல் கல்லாகி விட்டதே.

நளினியும் சுரேஷும் தெய்வ சாபத்தால் தான் அவரவர்களுக்கு விதிக்கப்பட்டகதியை அடைந்தார்களோ அல்லது மனிதக் குரோதத்தால் மிருக உணர்ச்சியின் காரணமாக எழுந்த துவேஷத்தின் விளைவால்தான் அடைந்தார்களோ, நாம் நிச்சயமாக எதனால் என்று கூற முடியாது. ஆனால் கடைசியாக உண்மையாகவே தெய்வ சாபம் ஒருவனைத் தாக்கி யிருக்க வேண்டும். அவன்தான் நளினியின் மாமன் மகன். அவன் மன நிம்மதி யின்றித் தவித்தான். நளினியின் நிலை வேறு அவனைக் கலக்கியது. கட்டியணைக்க வந்தவனைக் காலிடறி விட்டது எவ்வளவு துரோகம் என்று அவன் மனம் வெதும்ப ஆரம்பித்தது. கடைசியாக அவனை லெமூரியா மலையடிவாரத்தில் கண்டதாகக் கூறினார்கள். அதற்குப் பின் அவனை யாருமே எங்குமே காணவில்லை. அவனுக்கு லெமூரியா தேவி அளிக்கப் போகும் கொடும் தண்டனையை ஏற்கப் போய் விட்டான் போலும்!

இதை யெல்லாம் பார்த்துக் கொண்டு என்றும் போல் லெமூரியாச் சிகரம் கம்பீரமாக உயர்ந்து ஓங்கி நிற்கிறது. இப்பொழுதெல்லாம் அதன் பக்கம் ஒருவருமே போவதில்லை. ஆனால் 'சுரேஷ், சுரேஷ்' என்று கூவிக் கொண்டு ஒரு பெண் மட்டும் அங்கு அலைவதாகக் கேள்வி. அக்குரல் தேவியின் சாபத்தின் எதிரொலி போலும். யார் அதை அறிவார்கள்?



6. அதிசய ஒற்றுமை!

பூபதியும் அந்தப் பெண்மணியும் கப்பலின் மேல் தளத்தில் நிலவொளியில் நின்று ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகை புரிந்தனர். தங்களைச் சுற்றிலும் உள்ள அந்தப் பெரிய நீர்ப் பரப்பு அவர்களுக்கு வியப்பை அளித்தது. சந்திரனின் குளிர்ந்த கிரணங்களுடன் சமுத்திரக் காற்றும் அவர்களுடைய உடம்புக்குள் புகுந்து நடுக்கமுறச் செய்தது.

முதலில் பூபதிதான் அங்கே நிலவியிருந்த மௌனத்தைக் கலைத்தான்.

"நான் கனவு காணவில்லையே! என் மாடு மேய்க்கும் தொழிலை நினைத்து என்னுடைய தற்கால நிலைமையையும் நினைத்தால் எனக்கு ஒன்றும் புரியாமல் மயக்கம் உண்டாகிறது!"

"என்னைப் பார்த்த பின்பும் உங்கள் மயக்கம் தெளியவில்லையா? நாம் கனவு காணவில்லை. ஒரே கனவை ஒரே சமயத்தில் இருவரும் காண முடியாதல்லவா? ஆகவே, இது, நினைவில் நிஜமாக நிகழும் சம்பவம்தான்!"

"பெண்ணே, உட்கார்ந்து பேசுவோம். பேசுவதில் உனக்கு ஒன்றும் தடையில்லையே?"

"என் பெயர் பெண்ணல்ல, தெரிந்ததா? என்னைச் சுமதி என்றழையுங்கள்!" என்று சொல்லிக் கொண்டே அவள் வேலி ஓரமாக உட்கார்ந்தாள். பூபதியும் உட்கார்ந்தான்.

"சுமதி, இந்தப் பெரிய கப்பலின் மேல் தளத்தில் சூழ்ந்திருக்கும் இருளை இந்த நிலவொளி போக்குவது போல, நீ என் தனிமையின் சங்கடத்தைப் போக்கி உற்சாகம் அளிக்க உதவியாக வந்து சேர்ந்தாய்!" என்றான் பூபதி.

"இல்லை, சிறையில் நீண்ட காலமாக இருக்கும் எனக்கு ஆபத்துக் காலத்தில் நீங்கள் உதவியாக வந்து சேர்ந்தீர்கள். பேச்சுத் துணைக்குக்கூட ஆள் இல்லாமல் தவித்தேன். அதிருக்கட்டும். நீங்கள் எப்படி அவ்வளவு இனிமையாக வேணு கானம் செய்யக் கற்றுக் கொண்டீர்கள்? இன்று காலையில் நீங்கள் குழலில் இசைத்த சோக கீதம் என் நரம்புக்குள் புகுந்து நடுக்கமுறச் செய்தது..." என்று பரவசத்தோடு சொன்னாள் சுமதி.

"சுமதி, நான் குழல் வாசிக்க யாரிடமும் போய்க் கற்றுக் கொள்ளவில்லை. மாடு மேய்க்கும் அநாதை வாலிபனுக்குக் குழல் பயிற்சி செய்ய வசதி ஏது? நானாக வாசித்துக் கற்றுக் கொண்டதுதான். அந்த இசை உன்னைப் பரவசப் படுத்தியது கேட்க எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. அதெல்லாம் இருக்கட்டும், சுமதி! நீ யார்? ராஜகுமாரியா? எந்த ஊரைச் சேர்ந்தவள்? எனக்கு விவரமாகச் சொல்ல மாட்டாயா?" என்று கேட்டான் பூபதி.

"ஆம், உங்களுக்கு அதையெல்லாம் அவசியம் தெரிவிக்க வேண்டும். அதுவும் பொழுது விடிவதற்கு முன்பு தெரிவிக்க வேண்டும். சூரியன் உதயமாகி விட்டால் நான் சிறையில் அடைக்கப்பட்டு விடுவேன். நான், மேற்கே வெகு தூரத்திலுள்ள மரகதத் தீவின் அரசிளங் குமரி."

"ஹா! என்ன? நீ உண்மையிலேயே ராஜ குமாரியா? அப்படியானால் நான்



பாக்கியம் செய்தவன்தான். ஒரு ராஜ குமாரியை நிஜமாகவே பார்க்க வேண்டும் என்னும் என்னுடைய நீண்ட நாளைய ஆசை இன்றுதான் நிறைவேறியது......" என்று கூறி, பூபதி ஆனந்த மிகுதியில் மேலே பேச முடியாமல் தவித்தான்.

சுமதி கலீர் எனச் சிரித்தாள். "என்ன அதிசயமான ஒற்றுமை! நான் அரண்மனை வாழ்வில் ஆனந்தமாயிருந்த போது ஏழை மக்களைக் கண்டு இரக்கப் படுவேன். ராஜ குடும்பத்துக் கட்டுப்பாடுகளிலிருந்தெல்லாம் தப்பி, எளிய வாழ்வு வாழ மாட்டேனா என்று ஏங்குவேன். ஒரு ஏழையோடு மனம் விட்டுப் பேசி அவன் உள்ளத்தில் இருப்பதை உணர்ந்து அவனுக்குச் சகாயம் செய்ய வேண்டும் என்னும் ஆவல் என் உள்ளத்தில் கட்டுக்கடங்காமல் பெருகும். இப்பொழுது உண்மையிலேயே நான் ஒரு அநாதை. இந்தப் பெரிய கப்பலில் என்னிடம் அநுதாபம் காட்டக் கூடியவர் உங்களைத் தவிர யாரும் இல்லை" என்று கண்களில் நீர் ததும்பச் சொன்னாள்.

"சுமதி, நீ ஒன்றுக்கும் வருத்தப் படாதே. இந்தக் கொள்ளைக்காரர்களிடமிருந்து உன்னைக் காப்பாற்றுவது என் கடமை. நீ எப்படி இவர்கள் கையில் சிக்கினாய் என்பதைச் சொல்லவில்லையே!" என்றான் பூபதி.

"நான் எங்கள் தேசத்து அரண்மனை நந்தவனத்தில் தோழிகளுடன் விளையாடிக் கொண்டிருந்தேன். அப்பொழுது திடீரென்று சில முரடர்கள் அங்கே தோன்றி என்னைப் பிடித்துக் கொண்டு போய் விட்டார்கள். எவ்வளவு திமிறியும் தப்ப முடியவில்லை!" என்றாள் சுமதி.

"என்ன! நீ சொல்லுவது ஆச்சரியமாக இருக்கிறதே! ஒரு தேசத்து ராஜ குமாரியை அவளது அரண்மனையில் புகுந்து சில முரடர்கள் கட்டித் தூக்கிக் கொண்டு போகவாவது! எனக்காக ஏதாவது கதை சொல்லுகிறாயா, என்ன? அரண்மனைக் காவலர்கள் என்ன செய்தார்கள்? நந்தவனத்துக்குப் பாதுகாப்பாக இருக்கும் சேனா வீரர்கள் எல்லாம் சுத்த சோம்பேறிகளாகத் தூங்கிக் கொண்டிருந்தார்களோ? கோட்டையைக் காக்கும் தளபதி அந்தச் சமயத்தில் ஏதாவது கனவு கண்டு கொண்டிருந்தாரோ? தங்கள் தேசத்து ராஜ குமாரியை யாரோ சிலர் தூக்கிக் கொண்டு போவதைத் தடுக்க முடியாத வீரர்கள் என்னத்துக்காக அரசாங்கத்தில் ஊழியம் புரிய வேண்டும்?" என்று மிகவும் கோபத்தோடு கொதித்தபடி கேட்டான் பூபதி.

"நீங்கள் அரண்மனையைப் பற்றி எவ்வளவோ தெரிந்து கொண்டிருக்கிறீர்களே! நீங்கள் கேட்பது சரிதான். ஒரு அரசிளங் குமரியை யாரும் சுலபமாகத் தூக்கிக் கொண்டு போய்விட முடியாது. ஆனால் இந்தக் கொள்ளைக்காரர்கள் விருந்தினர் போல் வந்து என் தகப்பனாரை ஏமாற்றிச் சில நாட்கள் தங்கியிருந்தனர். என் தகப்பனார் வேட்டைக்குப் போகும் சமயம் பார்த்து மிகவும் தந்திரமாக என்னைச் சிறை செய்து தங்கள் கப்பலுக்குக் கொண்டு வந்து விட்டார்கள். கப்பலைத் துறைமுகத்தில் நிறுத்தாமல், கள்ளத்தனமாகத் தூரத்தில் நிறுத்தி விட்டு என்னைக் கடத்திச் சென்று விட்டார்கள்......!"

"சுமதி, நீ வருத்தப் படாதே! எப்படியாவது இந்தக் கப்பலிலிருந்து தப்ப நாம் முயற்சி செய்வோம். நாளையிலிருந்து நான் இவர்களுக்கு இணங்கியவனைப் போல் நடித்து இவர்களது விஷயத்தை அறிகிறேன். நாம் தினம் யாரும் அறியாமல் சந்திப்போம்" என்றான் பூபதி.

சுமதியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் துளித்தது. அது பூரண சந்திரனின் ஒளியில் நன் முத்துப் போல் சுடர் விட்டுப் பிரகாசித்தது.

"நடுக்கடலில் செல்லும் கப்பல் திசையறியாது தவித்தால், கலங்கரை விளக்கம் தோன்றி உதவுவது போல் நீங்கள் இந்த அநாதைப் பெண்ணுக்கு உதவியாக வந்து சேர்ந்தீர்கள். ஆனால் நீங்கள் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பொழுது விடிய இன்னும் சில நாழிகைகளே பாக்கியிருக்கின்றன. நீங்கள் இங்கு இருக்க வேண்டாம், உங்கள் இடத்துக்குப் போய் விடுங்கள். பிறகு சந்திக்கலாம்!" என்று கூறி விட்டுச் சுமதி மின்னல் போல் திடீரென்று மறைந்தாள். (தொடரும்)


டூத்பேஸ்ட் உங்கள்
பற்களை சுத்தம் செய்வது தவிர,
மேற்கொண்டும் உதவவேண்டும்
நீங்கள் உடனேயே க்ளோரோபில் சேர்ந்த 'கோலினுஸ்'
உபயோகிக்கத் தொடங்குங்கள்
மிக சிக்கனம் கூட! சாயமில்லாத பிரஷில் அரையங்குல அளவே தேவை. க்ளோரோபில் சேர்ந்த 'கோலினுஸ்' உங்கள் பணத்திற்கு பூரண பயன் தருகிறது!
செழிப்பான 'கோலினுஸ்' நுரை ஆக்டிவ் க்ளோரோபிலுடன் வாயில் பிரஷ் நுழைய முடியாத ஒவ்வொரு மூலைமுடுக்கிற்கும் எடுத்துச் செல்கிறது. உங்கள் சுவாசம் மணிக்கணக்கில் நறுமணம் கமழ விளங்குகிறது.
க்ளோரோபில் சேர்ந்த 'கோலினுஸ்' பற்களை சுத்தம் செய்வதோடு நிற்பதில்லை! பல் சிதைவுக்குக் காரணமான கிருமிகளை ஒழித்து, ஈறுகளில் புண்ணிருந்தால், அதை ஆற்றவும் உதவுகிறது.
நகைமுகன், 'கோலினுஸ்' சிறுவன்
இலவசம்
குழந்தைகளுக்கு
உங்கள் பெயர் மற்றும் விலாசத்தை மட்டும் 'நகைமுகன்', டிபார்ட்மெண்ட் 38, த. பெ. 641, பம்பாய் என்ற விலாசத்திற்கு அனுப்பினால், அவன் உங்களுக்கு 'நகைமுகனும் அவனுடைய பிராணி நண்பர்களும்' என்ற தனது ரஸமான சித்திரக் கதையை அனுப்புவான், இப்பொழுதே எழுதுங்கள்!
'கோலினுஸ்' புன்னகையில்
Kolynos
TOOTHPASTE
Chlorophyll
ஆரோக்கியம் ததும்புகிறது
GK. 9374



"ருக்குவுக்குக் கல்யாணம் நிச்சயம் ஆகிவிட்டது. கடைசியில் அந்த இரண்டாந்தார வரன்தான் நிச்சயமாயிற்று. என்ன செய்யலாம்! அவரவர்கள் தலையெழுத்துப் போல் நடக்கிறது. என்னவோ அவளுக்குக் கல்யாணம் என்று ஒன்று நடந்தால் போதும் என்று இருப்பதனாலேயே நான் ஆட்சேபமே சொல்லவில்லை. அது இருக்கட்டும், குமுதா! கல்யாணக் காரியத்துக்கெல்லாம் நீதான் கூட இருந்து கவனித்துக் கொள்ள வேண்டும். இப்பொழுதே சொல்லி விட்டேன். தெரிந்ததா! நீ முன்னாலேயே வந்து விட வேண்டும்! என்ன!" என்று கேட்டு விட்டுப் பார்வதி மாமி வீட்டுக்குப் புறப்பட எழுந்தாள்.

"நீங்கள் ஒன்றும் கவலைப் பட வேண்டாம், மாமி! நான் கவனித்துக் கொள்ளுகிறேன்!" என்று சொல்லிப் பார்வதி மாமியை வழியனுப்பினாள் குமுதா.

இன்னும் அவள் கணவன் ஆபீஸிலிருந்து வரவில்லை. குழந்தை லலிதா தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தாள். குமுதா தொட்டிலுக்கு அருகில் தூணிலே சாய்ந்து கொண்டு உட்கார்ந்தாள். அவள் மனம் பழைய சம்பவங்களையெல்லாம் நினைவுகூரத் தொடங்கியது.

'கடைசியில் அந்த இரண்டாந்தார வரன்தான் நிச்சயமாயிற்று' என்று மிகவும் ஆற்றாமையோடு பார்வதியம்மாள் சொல்லி விட்டுப் போன வார்த்தைகள் குமுதாவின் இரு கண்களிலிருந்தும் கரகரவென்று கண்ணீரை வரவழைத்தன. அந்த வாக்கியம் அவளுடைய செவிகளில் இடைவிடாமல் ஒலித்துக் கொண்டிருந்தது.

குமுதா தனக்கு வரப்போகும் கணவனைப் பற்றி என்னவெல்லாமோ இன்பக் கனவு கண்டு கொண்டிருந்தாள்.

குமுதாவுக்குப் பத்து வயது இருக்கும். அவள் தோழிமார்கள் சுமதி, விசாலம், பட்டு, லக்ஷ்மி முதலியவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். அப்பொழுது சுமதியின் தலையில் இருந்த கதம்பம் கீழே விழுந்து விட்டது. உடனே குமுதா அந்தப் பூவை எடுத்து அவளுக்குத் தெரியாமல் தன் தலையில் வைத்துக்கொண்டு, "சுமதி, உன் தலையில் இருந்த பூ எங்கேயடி!" என்று கேட்டு விட்டுச் சிரித்தாள். சுமதி பூவைக் காணாமல் திகைத்தாள். எல்லோரும் சிரித்தார்கள்.

உடனே சுமதி, குமுதாவைப் பார்த்து, "குமுதா, சிரிக்காதே! ஒருத்தர் தலைப்பூவை இன்னொருத்தர் வைத்துக் கொண்டால், அவர்களுக்கு இரண்டாந்தாரத்து அகமுடையான் தான் கிடைப்பான்!" என்று கூறி எச்சரித்தாள். குமுதா மறு கணம் தலைப் பூவை எடுத்துக் கீழே போட்டாள்.

"சுமதி, நான் அந்த மாதிரி நேர்ந்தால் கல்யாணமே செய்துகொள்ள மாட்டேன்!" என்று மிகவும் கடுமையான குரலில் சொன்னாள் குமுதா. அவளது அழகிய முகம் சிவந்து விட்டது. அத்துடன் அவர்களுடைய விளையாட்டு முடிவடைந்தது. அதாவது பாதியில் நின்று விட்டது.

குமுதாவின் மனத்தில் அந்தச் சம்பவம் ஆழப் பதிந்து விட்டது.

இது நடந்து பல வருஷங்கள் ஓடி விட்டன. இப்பொழுது குமுதாவுக்கு வயது இருபது. பூத்துக் குலுங்கும் பூங்கொடியென வனப்பு மிகுந்து விளங்கினாள். ஆனால் விவாகச் சந்தையில் பெண்ணின் வனப்பு மட்டும் தனியாக விலை போகாதே! அதன் பிரதான அம்சம் பணமல்லவா! குமுதாவின் தகப்பனார் ஓர் ஏழைக் குமாஸ்தா. அவரால் எப்படித் தம் பெண்ணுக்கு நல்ல வரனைத் தேடி மணம் செய்து வைக்க முடியும்!

தன் குடும்பத்தின் ஏழைமை நிலை அவளுக்கும் நன்றாய்த் தெரிந்திருந்தபடியினால்தான் அவள் மனம் அர்த்தமற்ற பீதியில் ஆழ்ந்து விட்டது.

குமுதாவின் தகப்பனார், பாவம், தம் நிலைமைக்கு மீறிய இடங்களிலெல்லாம் அவளுக்கு வரன் தேடினார். வரன் தேடு படலத்திலேயே இரண்டு வருஷங்கள் சென்று விட்டன.

குமுதாவின் மனம் ஒடிந்து விட்டது. சதா காலமும் பிரமை பிடித்தவள் மாதிரி வீட்டுக்குள்ளேயே ஓர் இடத்தில் உட்கார்ந்திருந்தாள். வரன் விஷயமாக ஊருக்குப் போன அவள் தகப்பனார் இரண்டு நாட்கள் ஆகியும் திரும்பவில்லை. 'இந்த வரனை முடிவாக ஏற்பாடு செய்து கொண்டுதான் ஊருக்குத் திரும்புவேன்' என்று சபதம் கூறிவிட்டுப் போயிருந்தார் அவர்.

குமுதாவின் உடம்பு ஏதோ அர்த்தமற்ற பயத்தினால் 'கிடு கிடு' வென்று ஆடி நடுங்கியது.



விவாகம் ஆன மறுதினமே, தன் மூத்தாள் குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பு அவள் தலையில் சுமத்தப்பட்டது. கணவன் வீட்டுக்கு வந்த மறுதினத்திலிருந்தே குமுதாவின் நடை, உடை, பாவனை யாவும் அந்தத் தெருப் பெண் குலத்தினால் கண்காணிக்கப்படலாயின.

"குழந்தைகளைப் பார்த்தாயா! எப்படித் துரும்பாய் இளைத்து விட்டன!"

"எந்தக் குழந்தைகளைச் சொல்லுகிறாய்!"

"அதுதான் சந்திரனின் மூத்தாள் குழந்தைகளடி!"

"ஆமாம். அதற்கு என்ன செய்கிறது! பெற்றவள் காலமாகி விட்டாள். அவள் ஸ்தானத்தில் வேறொரு பெண் வந்து குழந்தைகளை ஆசையோடு அணைப்பாளா? பாவம், அந்தக் குழந்தைகளுக்குத் தலைவாரிப் பின்னுவதோ, குளிப்பாட்டுவதோ ஒன்றும் கிடையாது......!"

மேற்கண்ட சம்பாஷணையைக் காமுப் பாட்டியும் நாகம் மாமியும் கோவிலில் நிகழ்த்தினர். அங்கு சென்றிருந்த குமுதாவின் செவிகளில் தெளிவாக இவ் வார்த்தைகள் விழுந்தன. உடனே குமுதாவின் கண்களிலிருந்து 'குபு குபு' வென்று கண்ணீர் பெருகியது. 'விடு விடு' என்று வீட்டுக்குத் திரும்பினாள்.

வாசற்படி யேறி ரேழிக்குள் காலடி எடுத்து வைத்தபோது அவள் துக்கம் இன்னும் அதிகமாகியது. அதற்குக் காரணம் அவளுடைய மூத்தாள் குழந்தைகள் இரண்டும் அவள் கணவனிடம் பின்வருமாறு பேசிக்கொண்டிருந்ததுதான்.

"அப்பா, புதுசா வந்திருக்காளே சித்தி, அவள் வெறுமனே திட்டுகிறாள், அப்பா!"

"ஆமாம், நேத்து எண்ணெய் தேய்த்து விடும் போது சித்தி என்னை அடித்தாள், அப்பா!"

இதைக் கேட்டதும் குமுதாவின் உடம்பு கிடுகிடு வென்று நடுங்கியது. கால்கள் சோர்ந்தன. தன் வருங்கால வாழ்வின் இருள் அவள் மனத் திரையில் மிகவும் பயங்கரமாக எழுந்து கப்பியது. உடனே "ஐயோ!" என்று கதறிவிட்டாள் குமுதா.

அடுத்த விநாடி தன் தாயின் அரவணைப்பில் இருப்பதை உணர்ந்தாள் குமுதா.

"குமுதா, பயப்படாதே, அம்மா! சொப்பனம் ஏதாவது பயங்கரமாகக் கண்டாயா!" என்று அவள் தாயார் மிகவும் அன்போடு கேட்டாள்.

குமுதாவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. பூப் போன்ற அவள் உடம்பு பயத்தால் நடுங்கியது.

"அம்மா...!"

"ஏன், குமுதா!"

குமுதாவுக்கு வாய் திறந்து ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகி வழிந்தது. அவள் தகப்பனார் ஓடி வந்து அவள் பக்கத்தில் அமர்ந்து அவளைச் சமாதானப் படுத்தினார். தான் கண்டது அத்தனையும் கனவு என்று தெரிந்ததும் அவளுக்கு ஒருபுறம் ஆறுதலாகவும், ஒரு புறம் வெட்கமாகவும் இருந்தது.

இந்தக் கனவு நிகழ்ச்சிக்குப் பிறகு, குமுதாவுக்குத் தன் கலியாணத்தைப் பற்றிய கவலையே அதிகமாகி விட்டது.

வாரங்களும் மாதங்களும் சென்றன. குமுதாவின் தகப்பனார் தம் பெண்ணை எப்படியாவது முதல் தாரமாகக் கொடுக்க வேண்டும் என்று பல விதத்திலும் முயன்றார். குமுதாவுக்கு வயது வளர்ந்து கொண்டிருந்ததே தவிர, அவர் விருப்பப் படி வரன் கிடைக்கவில்லை.

"குமுதா, இன்றைக்கு ஒரு வரன் உன்னைப் பார்க்க வருகிறார். தயாரா யிரு, அம்மா!" என்றார், அவள் தகப்பனார் ஒரு நாள் மாலை. யந்திரம் மாதிரி குமுதா தன்னைத் தயார் செய்து கொண்டாள்.

குறிப்பிட்ட நாழிகைக்கு அந்த மனிதர் வந்தார். பார்ப்பதற்கு மிகவும் நன்றா யிருந்தார். அவர் முகத்தில் பிறரைக் கவரும் ஒரு கம்பீரமான சௌந்தர்யம் குடி கொண்டிருந்தது; நல்ல வாலிப வயதுதான்; முதல் எடுப்பிலேயே குமுதாவுக்கு அவரைப் பிடித்து விட்டது.

சம்பிரதாயப்படி குமுதா வந்து அவருக்கும் அப்பாவுக்கும் நமஸ்கரித்து விட்டு, உட்கார்ந்து பாடினாள். குமுதாவின் பாட்டு, அழகு எல்லாம் அவருக்கு ரொம்பப் பிடித்திருந்தது என்பதற்கு அறிகுறியாக அவர் முகம் மலர்ந்திருந்தது.

அவருடன் யாரும் வரவில்லை. அவர் தனியாகத் தான் வந்தார். அவர் புறப்படும் பொழுது குமுதாவின் தகப்பனாரைப் பார்த்து, "சரி, நான் வருகிறேன். எனக்குப் பூரண சம்மதம். உங்களுக்கு எந்தவிதமான செலவும் வைக்க நான் தயாரா யில்லை. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஒரு முகூர்த்தம் பார்த்து எனக்கு எழுதுங்கள். முக்கியமாக ஒரு விஷயம். என்னைப் பற்றிய முழு விவரங்களையும் உங்கள் பெண்ணிடம் தெரிவித்து விடுங்கள். அவளுடைய மனப்பூர்வமான சம்மதம்தான் இதில் முக்கியம்!" என்று சொல்லி விட்டு, குமுதாவைத் தம் கடைக் கண்ணால் பார்த்துவிட்டு எழுந்து வாசலுக்குப் போனார். குமுதாவின் தகப்பனாரும் எழுந்து அவரைப் பின்பற்றியபடி, "நீங்கள் அவளைப் பற்றிக் கவலைப் படவேண்டாம். உங்களைக் கலியாணம் செய்து கொள்ள அவள் பாக்கியம் செய்திருக்க வேண்டும். உங்கள் விருப்பப்படி அவளிடம் விவரம் முழுவதையும் சொல்லிவிட்டு உங்களுக்கு எழுதுகிறேன். இதில் அவள் சம்மதம் கிடைத்து விட்டது என்றே நீங்கள் தீர்மானம் செய்து கொள்ளலாம்!" என்று மகிழ்ச்சி

போகக் கூறிவிட்டுக் கைகூப்பி வாசல் வரையில் போய் அவரை அனுப்பி வைத்தார்.

பிறகு அவர் சற்று நேரத்துக்கெல்லாம் உள்ளே வந்து, "குமுதா, உனக்கு இவரைப் பிடிக்கிறதா! வயது இருபத்தெட்டுதான் ஆகிறது. நல்ல சொத்து இருக்கிறது......!" என்று கேட்டார்.

குமுதாவின் முகம் வெளுத்து விட்டது. "அப்பா, உங்கள் இஷ்டம்போல் செய்யுங்கள்!" என்று குரல் தழுதழுக்கக் கூறினாள்.

"குமுதா, இன்னும் கேள். அவர் மாதம் முந்நூறு ரூபாய் சம்பாதிக்கிறார். சென்னை திருவல்லிக்கேணியில் சொந்த வீடு இருக்கிறது; தாயார் இல்லை; தகப்பனார் இருக்கிறார். அவருக்கு உபகாரச் சம்பளம் மாதம் ரூபாய் நூறு வருகிறது. பெயர் தியாகு. தகப்பனாருக்கு ஒரே பிள்ளை."

"அப்பா, உங்களுக்குச் சம்மதம் என்றால் எனக்கும் சம்மதம்தான். வேறு ஒரு விவரமும் சொல்ல வேண்டாம்!"

"இல்லை, அம்மா! முக்கியமாக அவரைப் பற்றி ஒரு விஷயம் சொல்ல வேண்டியிருக்கிறது. அதற்குப் பிறகும் நீ அவரை மணந்து கொள்ள விரும்புவாயா என்பதுதான் என் சந்தேகம்!" என்றார் அவள் தகப்பனார் சற்று இழுத்தபடியே.

குமுதா திடுக்கிட்டுப் போனாள். தியாகுவின் அழகிய முகம் அவள் மனக் கண்முன் தோன்றியது. அவரை இழந்து விடுவோமோ என்று அவள் நெஞ்சு துணுக்குற்றது.

"அவரைப்பற்றி என்ன, அப்பா......!" என்று திகிலுடன் கேட்டாள் குமுதா.

"தியாகுவுக்கு நீ இரண்டாந்தாரமாக வாழ்க்கைப் படவேண்டும். அவன் மனைவி விவாகமான இரண்டு வருஷங்களுக்கெல்லாம் இறந்துவிட்டாள். ஒரு குழந்தை இரண்டு வயதில் இருக்கிறது...!"

"என்ன......! இரண்டாந்தாரமா......!" என்று மிகவும் படபடப்புடன் கேட்டாள் குமுதா. அவள் குரலில் இனந் தெரியாத சோகம் தொனித்தது. வார்த்தைக்கு வார்த்தை இதயத்தின் விம்மல் கேட்டது.

"குமுதா, பைத்தியம் மாதிரி பேசாதே. இரண்டாந் தாரம் என்றால் அவருக்கு என்ன வயசாகிறது தெரியுமா! இருபத்தெட்டாகிறது! பார்வைக்கு அவர் அழகில்லையா! கைநிறையச் சம்பாதிக்கிறார்......!" என்று குமுதாவின் தாயார் ஆரம்பித்து விட்டாள்.

குமுதா ஒரு கணம் தன் நிலைமையை நினைத்துப் பார்த்தாள். தியாகுவின் அழகிய முகம் அவள் மனத்தில் தோன்றி அவளை அலைக்கழித்தது.

"அப்பா, எனக்குப் பூரண சம்மதம் என்று தெரிவித்து விடுங்கள்!" என்றாள் குமுதா கண்ணீருக் கிடையே.

"குமுதா, அப்படி உனக்கிந்த வரன் சம்மதம் இல்லை என்றால் சொல்லு...!" என்று நெகிழ்ந்த குரலில் அவள் தகப்பனார் கூறிக் கொண்டிருக்கும் போதே அவள் தாயார் இடை மறித்து, "நன்றாயிருக்கிறது, உங்கள் பேச்சு. இந்த வரன் நமக்குக் கிடைக்குமா! உலகத்தில் ஒரு பெண்ணும் இரண்டாந் தாரமாக வாழ்க்கைப்படுவதில்லையா! பார்க்கப்போனால் என் பாட்டி இரண்டாந்தாரமாக வாழ்க்கைப் பட்டு அமோகமாக வாழ்ந்தாள்......" என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டே போனாள்.

"சரி, சரி. நிறுத்து" என்று குமுதாவின் தகப்பனார் அவளைக் கடிந்து கொண்டு மேலே நடக்க வேண்டியவைகளைக் கவனிக்கலானார்.

** ** **

குமுதாவுக்குத் திருமணம் முடிந்து விட்டது. மறு நாளே அவள் தன் கணவன் தியாகுவுடன் புறப்பட்டுப் புக்ககம் வந்து சேர்ந்தாள்.

சென்னையில் அவர்கள் வீடு மிகவும் சௌகரியமாயிருந்தது. தியாகுவின் முதல் மனைவியினுடைய குழந்தை மணி ரொம்ப அழகாயிருந்தான். 'சித்தி, சித்தி' என்று குமுதாவினிடம் ஒட்டிக் கொண்டான். தியாகுவின் அத்தை குழந்தைக்குத் துணையாக வீட்டில் இருந்தாள். தியாகுவின் தகப்பனார் குமுதாவினிடம் ரொம்பப் பிரியமாயிருந்தார். குமுதாவுக்கு எந்தக் குறையும் அந்த வீட்டில் இருக்கவில்லை. குமுதா நினைத்ததற்கு நேர்மாறாக எல்லாம் இருந்தது. அவள் கணவன் தியாகு அவளிடம் வைத்திருந்த அன்பு அவளைப் புளகமுறச் செய்தது. ஆனால் அவள் மனத்தில் மட்டும் இனந் தெரியாத வேதனை, அந்த வீட்டில் உள்ள எதிலும் ஒரு வெறுப்பு இருந்து வந்தது.

தியாகு குமுதாவை அடிக்கடி சினிமா, நாடகம், நடனம் முதலிய லலித நிகழ்ச்சிகளுக் கெல்லாம்





அழைத்துக்கொண்டு போனான். அவன் நினைத்துக்கொண் டிருந்ததுபோல் அவன் அவளைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கவில்லை. குழந்தை மணியை அவள் சரியாகக் கவனிக்கிறாளா, இல்லையா என்று தியாகு வேவு பார்க்கவில்லை; அவன் தன் தகப்பனாரிடமோ அத்தையிடமோ அவளைப் பற்றிக் 'கசமுச' வென்று இரகசியம் பேசவில்லை; அவளுக்கு எதிரில் தன் முதல் மனைவியைப் பற்றியோ அவளுடைய குணநிசயங்களைப் பற்றியோ பேசிக் குத்திக் காட்டவில்லை. வீட்டில் யாருமே அவளுக்குக் குறைவு ஏற்படும்படி நடந்து கொள்ளவில்லை. ஆனால், ஏனோ குமுதாவின் மனம் ஒரு நிலையில் இல்லை.

குழந்தை மணி அவளிடமும் உயிரா யிருந்தான். ஆனால் குமுதாவுக்கு அவனிடம் ஒரு வெறுப்பு ஏற்பட் டிருந்தது. அவனால் தன் எதிர்கால வாழ்வே பாழடைந்து விட்டதாக அவள் நினைத்தாள். ஒரு நாள் இல்லா விட்டால் ஒரு நாள் அந்தக் குழந்தையினாலேயே பெரிய பகை மூண்டு குடும்பத்தில் பெரிய ரகளை ஏற்படும் என்று அவள் உள் மனம் ஓயாமல் சொல்லிக் கொண்டிருந்தது. அதனால் அவள் குழந்தை மணியின் விஷயத்தில் சர்வ ஜாக்கிரதையா யிருந்தாள்.

அவன் தன்னிடமே ஒட்டிக்கொண் டிருக்கிறான் என்பதற்காக அவனை அதிகமாக எடுத்துக் கொஞ்சி விளையாட அவளுக்குப் பயம். 'பெரிய கைக்காரியா யிருக்கிறாளே! குழந்தை, பாவம்! தாய்ப் பாசத்தை அறியாதது. இவள் நேற்று வந்தவள். ரொம்பக் கண்டு விட்டவள் மாதிரி குழந்தையை எடுத்து ஓயாமல் கொஞ்சிப் பிரமாதமாக அன்புள்ளவளைப்போல் நடிக்கிறாளே!' என்று ஏதோ இனந் தெரியாத குரல் அவளுக்குப் பின்னாலிருந்து சொல்லுவதுபோல் இருக்கும். ஆகவே, குழந்தை மணியை ரொம்பக் கொஞ்ச மாட்டாள். அவனைக் கொஞ்சாமல் அன்பு பாராட்டாமல் இருந்தால் கணவன் தன்னிடம் வெறுப்புக் கொள்ளுவது போல் இருக்கும் அவளுக்கு. இந்நிலையில் அவள் இருதலைக்கொள்ளி எறும்பாகத் தவித்தாள்.

தியாகு ஏராளமாக அவளுக்குப் புடவைகளும், நகைகளும் நிறுசு நிறுசாக வாங்கி யிருந்தான். குமுதாவுக்கு அவைகளை அணிந்து கொண்டு வீட்டில் நடமாடவோ, வெளியில் போகவோ தைரியம் கிடையாது. வீட்டில், யார் என்ன சொல்லுவார்களோ என்று அவளுக்கு ஒரே பயம். தியாகு அவளை ஓயாமல் நச்சரித்துப் புது நகை, புதுப் புடவையுடன் காட்சி தரும்படி சொல்லிக் கட்டாயப்படுத்துவான்.

"குமுதா! நான் வாங்கி யிருக்கும் புடவைகளும் நகைகளும் உனக்குப் பிடிக்கவில்லையா! ஏன் தினம் ஒன்று அணிந்துகொண்டு சந்தோஷமாக இருக்க மாட்டேன் என்கிறாய்? இனிமேல் நூல் புடவையே கட்டிக் கொள்ளாதே!" என்று தியாகு அன்போடு சொல்லுவான்.

குமுதாவுக்கு இதைக் கேட்க எவ்வளவோ சந்தோஷமா யிருந்தது. ஆனால் கணவனிடம் மனம் விட்டுப் பேச, கலகலவென்று சிரித்து உல்லாசமா யிருக்க அவள் மனம் விரும்பினாலும் செய்கையில் காட்ட முடியாதபடி பயம் ஒன்று இருந்தது. தான் சரளமா யிருப்பதனால், 'கணவனைக் கையில் போட்டுக் கொள்ளுவதற்காக இந்த இரண்டாந் தார நீலி இப்படி வேஷம் போடுகிறாள்' என்று யாராவது சொல்லுவார்களோ என்று அவளுக்கு உள்ளூறப் பயம்.

பாவம், குமுதா! இப்படி யெல்லாம் பலவித மான மனக் குழப்பத்துக்கிடையில் தவித்தாள். அதிகமாக யாருடனும் பேசவோ, பழகவோ அவளுக்குத் தைரியம் இல்லாம லிருந்தது. இதன் காரணமாகக் குமுதா வரவர நோயுற்றவள் மாதிரி இளைத்து வெளுத்துப் போனாள்.

குமுதா வரவர இளைத்துக்கொண்டு வருவதையும், உற்சாகம் இல்லாமல் இருப்பதையும் கண்ட தியாகு பலவிதத்திலும் அவள் மனத்தில் இருப்பதை அறிய முயன்றான்.

தியாகு குமுதாவினிடம் காட்டிய அக்கறையையும் அன்பையும் அவள் தவறாகவே எடுத்துக் கொண்டாள். தன்னை இரண்டாந் தாரமாக மணந்த தவறை மறைப்பதற்காகவே தியாகு இப்படித் தன்னிடம் நடந்து கொள்ளுவதாக நினைத்து அவள் மேலும் மனம் வருந்தினாள்.


அன்று தியாகு மாலை ஆறு மணிக்குமேல் ஆகியும் ஆபீஸிலிருந்து வரவில்லை. அவன் தகப்பனார் வெளியே உலாவப் போயிருந்தார். அத்தை சமைய லறையில் ஏதோ காரியமா யிருந்தாள். குமுதா தியாகுவின் அறையில் உட்கார்ந்து கொண்டு மேஜையின் மேல் இருந்த புஸ்தகங்களைப் பார்த்துக்கொண் டிருந்தாள். அவள் சாதாரணமாக அந்த அறைக்கு அதிகமாகப் போவதில்லை. காரணம் அங்கே தியாகுவின் மூத்த மனைவியின் பெரிய புகைப் படம் மாட்டி யிருந்தது தான். அதைப் பார்த்தால் அவள் மனம் படாத பாடு படும். தனக்குமுன் தன் கணவனின் முழு அன்புக்கும் பாத்திரமாக இருந்தவளின் உருவத்தைப் பார்க்கும்போது ஏனோ அவளுக்கு மனம் கசந்தது.

புத்தகத்தைப் புரட்டியவள் கையில் ஒரு சிறு அழகிய குறிப்புப் புத்தகம் தட்டுப் பட்டது. அதை எடுத்துப் பிரித்தாள் குமுதா. மணி மணியான எழுத்துக்களில் அதில் காணப்பட்ட விஷயத்தைப் படிக்காமல் அவளால் இருக்க முடியவில்லை:

"பாவம், குமுதா! அவள் புரிந்து கொள்ள முடியாத புதிர்தான். அநாவசியமாக அவள் என்னத்தை யெல்லாமோ நினைத்து மன வேதனைப் படுகிறாள்.

இன்று குமுதா என்னை ஒரு கேள்வி கேட்டாள். 'என்னை ஏன் நீங்கள் இரண்டாந் தாரமாக மணந்து கொண்டீர்கள்!' என்று. இதற்கு என்னால் உடனே

★ காலத்தை அளப்பதற்குக் கடிகாரம் என்று கண்டு பிடித்தானே அவன் மேதையைப் பாராட்ட வேண்டும். அந்தக் கடிகாரங்களில்தான் எத்தனை மாதிரிகள். தானே இயங்கும் கடிகாரங்களில் எடர்னு மாடிக் கடிகாரக் கம்பெனிக் காரர்கள் புதுப் புரட்சியே செய்திருக்கிறார்கள். 'பால்பேரிங்' முறையில் இயங்கச் செய்திருக்கிறார்கள். ஓரணாவின் விட்டம் எவ்வளவோ அவ்வளவே, அதாவது முக்கால் அங்குலம் தான் கடிகாரத்துக் குள்ளிருந்து இயக்கும் புது இயந்திர உறுப்பு. அதில் பொருத்தப்பட் டிருக்கும் சின்னஞ் சிறு இரும்புக் குண்டுகளையும் படத்தில் காணலாம். ★





ஒரு விநாடி கூட
கவலை வேண்டாம்
அவன் லாக்டோஜென்
அருந்துவதால்—ஏனெனில்
தாய்ப்பாலுக்கு ஈடாக இருக்க விசேஷமாகத்
தயாரிக்கப்பட்டது அது.
நம்புங்கள்
LACTOGEN
தாய்ப்பால் இல்லாதபோது
இலவச லாக்டோஜென் போல்டர்
பெற இந்தக் கூப்பனை எழுதி தபா
லில் இவ்விலாசத்துக்கு அனுப்புக:
நெஸில்ஸ் புராடெக்ட்ஸ் (இந்தியா)
லிட்., தபால் பெட்டி 396, கல்கத்தா.
பெயர் ....
விலாசம் ....
....
LG/G/9



இதைப்போன்ற டூத் பிரஷ் வேறில்லை!
உங்களுக்கேற்றடிசைன்! உங்கள் வாய்க்கு பொருத்தமானது!
பற்களை உறுதிப்படுத்தும் புது அம்சங்கள்
• முற்றிலும் ஸ்டரிலைஸ் செய்யப்பட்டது
• கால்கேட் டூத் பிரஷ்களின் ஹாண்டில்கள் தனி வர்ண
முள்ளவை; உங்களுக்கு ஏற்றதை லகுவில் அறியலாம்
• பிளாஸ்டிக் ஹாண்டிலில் நிஜ நைலான் நார்கள்
• மிருதுவாக பாலிஷ் செய்கிறது: இனாமல் சிதையாது
• பல் ஈறுகளை மிருதுவாகத்தடவி உறுதிப்படுத்துகிறது
குழந்தைகளுக்கு
ஸ்திரீ
களுக்கு
ஆண்
களுக்கு
2 சைஸ்கள்
பெரியவர்களுக்கு குழந்
தைகளுக்கு
ஹார்ட், மீடியம், சாப்ட் டப்ட்ஸ்
COLGATE
Nylon TOOTH BRUSH
AN EXCELLENT QUALITY TOOTH BRUSH WITH
GENUINE NYLON BRISTLES—FIRMLY FASTENED
கால்கேட்
நைலான் டூத் பிரஷ்
"துவண்டு" போவதில்லை

பதில் சொல்ல முடியவில்லை. 'ஏன் அப்படிக் கேட்கிறாய்? முதல் மனைவியை இழந்த எனக்கு அப்படி வயதாகி விடவில்லையே! இருபத்தெட்டு தானே ஆகிறது! மேலும், குழந்தை மணி தாய் அன்பு இல்லாமல் ஏங்கிவிடக் கூடாது அல்லவா!' என்று இன்னும் மேலே தொடர்ந்தேன்.

அதற்குள் குமுதா குறுக்கிட்டு, '...அப்படியானால், குழந்தைக்கு ஒரு தாய் வேண்டும் என்பதற்காகத்தானே என்னைக் கல்யாணம் செய்து கொண்டீர்கள்! உங்களுக்கு... ஒரு...' என்று ஏதோ சொல்ல வந்தவள் வாக்கியத்தை முடிக்காமல் உதட்டைக் கடித்தபடி மென்று விழுங்கினாள். அவள் பூர்த்தி செய்யாத வாக்கியத்தைக் 'குபுகுபு' வென்று பெருகி வந்த அவள் கண்ணீர் பூர்த்தி செய்து விட்டது.

'குமுதா. மனத்தை விட்டுப் பேச மாட்டேன் என்கிறாயே!' என்றேன். அவள் பதில் பேசவில்லை.

பாவம், அவள் மனத்தை நோக வைத்து விட்டேனோ இந்த என் விவாகத்தின் மூலம் என்று என் மனம் புழுங்குகிறது. அவள் மனம் தான் இரண்டாந்தாரம் என்பதை நினைத்து ரொம்ப வேசனைப் படுகிறது என்பதை அன்று அவள் உதிர்த்த கண்ணீர் புலப்படுத்தி விட்டது.

இதற்கு என்ன செய்வது என்று மனசுக்கு ஒன்றும் பிடிபடவில்லை. என் மறு விவாகம் இத்தகைய வேதனையை உண்டாக்கும் என்று நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. குமுதா மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள். அவள் விவாகத்துக்கு அவள் தகப்பனார் ஐந்து வருஷங்களாகச் சிரமப் படுகிறார் என்று எனக்கு ஒரு நண்பர் மூலம் தெரிய வந்ததும், நான் என்னுடைய காரியத்தைப் பரோபகாரமாக எண்ணி விட்டேன்; கஷ்டப்படும் குடும்பத்தைக் கை தூக்கி எடுத்து நிறுத்தியதாக நினைத்து மனம் பூரித்தேன். அந்த எண்ணத்துடன்தான் அவள் விவாக சம்பந்தமான அத்தனை செலவையும் நானே ஏற்றுக் கொண்டேன்; அவளுக்கு நிறைய நகைகள் பூட்டினேன். அவள் சந்தோஷமாக இருப்பதற்காகச் சினிமா, நாடகம், நடனம் என்று எங்கெல்லாமோ அவளை உற்சாகமாக அழைத்துச் சென்றேன்.

உம், அதனாலெல்லாம் ஒரு பயனும் இல்லை என்பதுதான் நன்றாய்த் தெரிந்து விட்டதே!

குமுதாவின் வாழ்வு என்னால் பாழாகி விட்டது. நான் அவள் மனத்தை நேரடியாக அறிந்து கொள்ளாதது ஆண் வர்க்கத்தின் சுயநலப் பேயின் செயலோ!

குமுதா. அடி பேதைப் பெண்ணே! விவாகத்துக்கு முன்பே உன் மன நிலையை எனக்கு வெளிப்படுத்தி யிருக்கக் கூடாதா! நீ அப்படிச் செய்திருந்தால், இப்பொழுது மன வேதனையினால் இருவரும் மாழ்கிச் சாக வேண்டாமே! குமுதா, இதற்கு நீயே ஒரு வழி சொல்லு! உன் மனசுக்கு இதம் தரும் எந்த முடிவுக்கும் நான் வரத் தயார். உன் வாழ்வு, என் வாழ்வு உன் இன்பம், என் இன்பம். இதில் சிறிதும் ஐயமில்லை.

குமுதாவிடம் மனம் விட்டுப் பேசி இதற்கு ஒரு முடிவுகாணலாம் என்றால், அவள் என்னை நிமிர்ந்தே பார்ப்பதில்லையே! அவள் பேசாமல் இருக்கும் போது வலிய நானாக என்னத்தை அவளிடம் பேச முடியும்! ஏதோ நான் கட்டாயப் படுத்துகிறேன் என்பதற்காகச் சினிமாவுக்கு என்னோடு வருகிறாள். அவள் முகத்தில் சிரிப்பையே காணோம். முள் மேல் இருப்பது போலத்தான் இந்த வீட்டில் அவள் இருக்கிறாள்......"

இதற்கு மேல் குமுதாவினால் படிக்க முடியவில்லை. கண்களில் நீர் பெருகி மறைத்தது. அவள் மனம் பட்ட வேதனை மிகுதியில் அவளால் சும்மா இருக்க முடியவில்லை.

"ஐயோ, அம்மா! எத்தனை பெரிய தவறு செய்து விட்டேன்! உத்தம புருஷரை மனம் நோகச் செய்தேனே!" என்று குமுதா வாய் விட்டுக் கதறி மூர்ச்சையாகி நாற்காலியிலிருந்து கீழே சாய்ந்து விட்டாள்.

அவளுக்குப் பிரக்ஞை வருவதற்கு வெகு நேரமாகி விட்டது. பிரக்ஞை வந்த போது அவள் மனம் இத்தனை நாளும் கண்டறியாத இன்பத்தில் திளைத்துக் கொண்டிருந்தது. தன் கணவரின் அன்பு நிறைந்த அரவணைப்பில் அவள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அந்நிலையில் பேச நாவே எழவில்லை அவளுக்கு.

"குமுதா, இப்பொழுது எப்படி யிருக்கிறது! சாப்பாட்டை மாடிக்கே கொண்டு வரச் சொல்லி யிருக்கிறேன். சாப்பிட்டு விட்டுப் படுத்துக் கொள்!" என்ற தியாகுவின் அன்புக் குரல் குமுதாவுக்குக் கந்தர்வ கானமாக ஒலித்தது. சட்டென்று எழுந்திருந்தாள்.

"நான் உங்கள் மனம் புண்படும்படி அனாவசியமாக நடந்து கொண்டேன். கதைகளிலும் சினிமாக்களிலும் காட்டப் பட்டு வரும் இரண்டாந்தாரக் கதைகளைப் படித்து பார்த்து என் மனம் குழம்பி யிருந்தது. கர்ண பரம்பரையாகக் குடும்பங்களில் வழங்கி வரும் இரண்டாந்தாரத்தைப் பற்றிய துக்கம் ததும்பும் வரலாறுகளைக் கேட்டதில் அர்த்தமற்ற பயம் ஒன்று என் மனத்தில் தோன்றி நிலை பெற்று விட்டது. உங்களைப் போன்ற பொன் உள்ளம் படைத்தவர்களும் இருப்பார்கள் என்பதை நான் அறியவில்லை. என்னை மன்னிப்பீர்களா!"

"குமுதா, வீணாக அலட்டிக் கொள்ளாதே. பேசாமல் ஓய்வு எடுத்துக் கொள். நீ ஒரு தவறும் செய்து விடவில்லை. உன் எண்ணங்களை அர்த்தமற்றவை என்று அலட்சியம் செய்ய முடியாது. நான் உன்னை மணந்து உன் மனசைப் புண்படுத்தி விட்டேன். அந்த என் தவறுக்குப் பிராயச்சித்தமாகத் தனிமையில் நான் பெருக்கிய கண்ணீர் உன் கண்களில் படாமலிருக்க நான் ரொம்பப் பிரயாசைப் பட்டேன். ஆயினும் மன உளைச்சல் முழுவதையும் குறிப்புப் புத்தகத்தில் எழுதிப் பல முறை தனிமையில் படித்து வந்ததில்தான் என் மனம் ஓரளவுக்குச் சாந்தி பெற்று வந்தது. நேற்று இரவு கவனப் பிசகாக என் குறிப்புப் புத்தகத்தை வெளியே வைத்து விட்டேன்......"

இந்தச் சமயம், "சித்தி, சித்தி" என்று அழுது கொண்டே மாடிப்படி ஏறி வந்துவிட்டான் குழந்தை மணி. குமுதா ஓடி அவனை வாரி எடுத்தாள்.

"இவனுக்காக நாம் எதையும் மறந்துவிட வேண்டியதுதான். வாழ்வில் தான் விட்டுப் போன பணியைப் பொறுப்புடன் நிறைவேற்ற இவன் தாயார் இவனை விட்டுச் சென்றிருக்கிறாள். கள்ளமற்ற இவன் முகத்தைப் பாருங்கள்!" என்றாள் குமுதா. பிறகு அவள் குழந்தையை எடுத்துக் கொண்டு கீழே போகப் புறப்பட்டாள்.

தியாகு அவளைத் தொடர்ந்து கீழே சென்றான். குமுதா அப்பொழுது அவனைப் பார்த்த பார்வையில் பொங்கி வந்த அன்பைத் தியாகு இது வரையில் அவளிடம் பார்த்ததில்லை. அவன் முகத்திலும் மகிழ்ச்சி பொங்கி மலர்ந்தது.

அலை எழுந்தாடும் நீலக் கடல். அக் கடலில் நிழல் போல் கரை நோக்கி மிதந்து வரும் ஒரு சிறு படகு. கண்ணுக்கு எட்டிய வரையில் திரை விரித்தாற் போல் கரு நீல நிற வானம். வைரத்தை வாரி இறைத்தாற் போல் தனியாகவும்



கூட்டமாகவும் சிதறிக் கிடந்து மின்னும் நட்சத்திரங்கள். பூரணத் தன்மைபெற்ற மகிழ்ச்சியோடு ஒளி வீசித் திகழும் முழு நிலவு. இவ்வளவும் கண்ணுக்கு நேரே காணும் உண்மையான காட்சிகள் தானா! இல்லை. அந்த அரங்கில் கட்டப்பட்டிருந்த திரைச் சீலையில் திகழும் வர்ண விசித்திர வேலைப்பாடுகள் அமைந்த சித்திரம்தான் அது.

அலை மோதும் கடற் கரையில் ஒரு சிலை. பார்வைக்கு அது ஒரு தெய்வச் சிலையாகத் தோன்றவில்லை. ஒரு அழகான பெண்ணின் அங்க அடையாளங்களோடுதான் அச் சிலை காட்சி அளித்தது. ஒரு காலை மடக்கி ஊன்றி இரு கைகளையும் மார்புக்கு நேராகச் சேர்த்து மலர்ந்த கமலத்தைக் காட்டும் நாட்டிய முத்திரையோடு விளங்கியது அச் சிலை. அந்தச் சிலையை அந்த நிலையில் பார்ப்பவர்கள் ஒவ்வொருவருக்கும் அந்த நாடக அரங்கில் வர்ணப் படுதாவுக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் அழகிய சிலை என்றுதான் தோன்றும். வானத்தைத் தழுவி நிற்கும் அலை வீசும் நீலக் கடல் இயற்கையின் அழகு குறையாமல் எழுதப்பட்டிருந்தாலும், அது ஒரு வர்ண சித்திரம்தான் என்று சிறிது மனம் மயங்கி நிற்பவரும் கூடச் சிறிது நேரம் ஊன்றிக் கவனித்தால் உணர்ந்து கொண்டு விடுவார்கள். ஆனால் அங்கு நிறுத்தப்பட்டிருக்கும் சிலை உண்மையில் சிலை இல்லை என்று எவராலும் மறுத்துக் கூறவே முடியாது.

பின்னணி வாத்தியங்களின் இசை ஏதோ சோகச் சூழ் நிலையை உணர்த்துவது போலிருந்தது. கடற்கரையில் நின்று கொண்டிருந்த சிலை மெதுவாகத் தன் உடலை அசைத்தது. கமலம் போல் குவிந்திருந்த கை விரல்களில் சிறிது அசைவு ஏற்பட்டது. அதை முதன் முதலில் பார்ப்பவர்களுக்குச் 'சிலைக்குக்கூட உயிர் உண்டா! இப்படி அசைகிறதே!' என்ற பிரமிப்பும் திகைப்பும் கட்டாயம் உண்டாகும்.

திடீரென்று ஒரு கடுமையான குரல் எழுந்தது. "ஆஹாஹா! போச்சு, எல்லாம் குட்டிச் சுவராகப் போச்சு. வேதா! உனக்கு எவ்வளவு தடவை சொல்லுவது! ஒரு ஐந்து நிமிஷ நேரம் அசையாமல் சிலை போல உன்னால் நிற்க முடியாதா! உன்னால் என் நாடகமே வீணாகிவிடும் போலிருக்கிறதே! ஊஹூம். இதற்கு உன்னை வைத்துச் சமாளிக்க முடியாது......" என்று பின்னணி வாத்தியக்காரர்களிடையே உட்கார்ந்திருந்த வாலிபன் வெறுப்பும் அலுப்பும் அடைந்தவன் போல் சொல்லி விட்டு ஏதோ பெரிய சிக்கலில் மாட்டிக் கொண்டவன் போல் முகத்தை வைத்துக் கொண்டு வேறெங்கோ பார்வையைச் செலுத்தினான். அரங்கத்தின் நடுவே சிலைபோல் நின்று கொண்டிருந்த பெண் மெதுவாகத் திரும்பிப் பயத்தோடு அவன் முகத்தைப் பார்த்து விட்டு மறுபடியும் அங்கங்களை முன்பு இருந்த நிலையிலேயே வைத்துக் கொண்டு சிலைபோல் நின்றாள். ஆனால் அவள் முகத்தில் முன்பிருந்த தெளிவும் சாந்தியும் இல்லை. பயமும் சோகமும்தான் குடிபுகுந்திருந்தன. ராமநாதனின் கடுமையான வார்த்தைகளில் பயந்து தங்கள் வாத்திய இசையை நிறுத்திக் கொண்ட பின்னணி இசைக்காரர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். மன வெறுப்போடு கூடிய சிந்தனையில் ஆழ்ந்திருந்த ராமநாதன் ஒரு பெருமூச்சு விட்ட வண்ணமே, "சரி! மறுபடியும் முதலிலிருந்தே ஆரம்பியுங்கள். இன்று இது சரியாக வராத வரையில் நான் விடப்போவதில்லை" என்றான். மறுபடியும் வாத்திய இசைகள் முன் போலவே முழங்க ஆரம்பித்தன.

அது ஒரு நாடக ஒத்திகை. அது கடைசி நாள் ஒத்திகை. விளம்பரம் செய்திருந்தபடி மறு நாள் அந்த நாடகம் நடக்க வேண்டும்.

ஒத்திகை ஒருவிதமாக முடிந்தது. நாடக ஒத்திகை ஒரு முடிவான கட்டத்தை அடைந்ததே

தவிர, ராமநாதனுக்கு அதில் சிரத்தையோ திருப்தியோ ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அவன் முகம் தெளிவில்லாமல் இருந்தது. அவன் மனக் கற்பனையில் எப்படி எப்படியெல்லாம் நாடகக் காட்சிகள் இருக்க வேண்டுமென்று நினைத்தானோ அப்படியெல்லாம் அது அமையவில்லை என்பது முகக் குறியிலிருந்தே தெளிவாகியது. 'மேலே என்ன செய்வது?' என்றபோது வாத்தியக் காரர்களும் நடிகர்களும் அவன் முகத்தைப் பார்த்தனர். மறுபடியும் முதலிலிருந்து ஒத்திகைக்கு ஆரம்பியுங்கள்' என்று அவன் சொல்லிவிடுவானோ என்ற திகில்தான் அவர்களுக்கு. அவன் ஒரு கேலிச் சிரிப்புச் சிரித்தான். "சரி! இத்துடன் எல்லாம் முடிந்து விட்டது போலிருக்கிறது...... ஆமாம்! எல்லாமே முடிந்து விட்டது. இனி மேலும் ஏதோ நம்பிக்கையோடு இந்தக் கம்பெனியை நடத்துவது முட்டாள்தனம். இதைக் கலைத்து விடுவதுதான் நல்ல முடிவு. இந்த நாடகத்தை வெற்றிகரமாக்க வேண்டுமென்று எவ்வளவு மனக் கோட்டை கட்டி இருப்பேன்! எவ்வளவு பாடுபட்டிருப்பேன்! எவ்வளவு பணம் செலவு செய்திருப்பேன்! எல்லாம் வீண். என் லட்சியமே பாழாய்ப் போய்விட்டது. நான் இன்று சாயந்திரமே விளம்பரம் செய்துவிடப் போகிறேன், முன்பு விளம்பரம் செய்திருந்தபடி நாடகம் கிடையாதென்று. நாளைய தினம் எல்லோருக்கும் சம்பளத்தைக் கணக்குத் தீர்த்துக் கொடுத்துவிடுகிறேன்..." என்று சொல்லி ஆசனத்தை விட்டு எழுந்து சென்றான்.

அங்கு கூடியிருந்தவர்களுக்கு ராமநாதன் விடுத்த செய்தி திகைப்பை அளித்தது. அவன் மனத்துக்கு அவ்வளவு வெறுப்பும் கசப்பும் ஏற்படும் வண்ணம் அன்று ஏதும் விபரீதமாக நடந்து விடவில்லை என்றுதான் எல்லோருக்கும் தோன்றியது. அப்பொழுது நடந்த ஒத்திகையில் எல்லோரும் பணிவாகவும் ஒழுங்காகவும்தான் நடந்து கொண்டனர். ஆனால் வேதா......அவளுடைய நடிப்புத்தான் அவன் மனத் திருப்தியைக் குலைத்திருக்க வேண்டும். அவள் சரியாக நடிக்காத குறைதான் அவனுக்குப் பெரிதாகப் பட்டிருக்க வேண்டும். அங்கு கூடியிருந்த எல்லோருடைய மனத்திலும் அந்த அபிப்பிராயம்தான் அப்பொழுது தோன்றியது. அவள் நாட்டியம் ஆடும்போது ஒவ்வொரு நாளும் எவ்வளவு குறைகள் கண்டு ராமநாதன் அவற்றைத் திருத்திக் கொள்ளச் சொன்னான். அவள் அவன் வார்த்தையைக் கேட்டாளா! உண்மையாக மனமிருந்தால் அவன் பிசகை உணர்ந்து திருத்திக் கொண்டு நடிக்க மாட்டாளா! அவன் சொல்லுகிறபடி தேக சிரமப்பட்டு ஆட வேண்டுமென்று அவளுக்குச் சிரத்தை இல்லை. அவளால்தான் எல்லாம் கெட்டுவிட்டது எல்லோர் பிழைப்பிலும் மண் விழுந்து விட்டது. அவள்மீது அவன் எந்த அளவுக்கு அன்பு வைத்திருந்தானோ, அந்த அளவுக்கு நிச்சயமாக அவள்மீது அவனுக்கு வெறுப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். அவள்மீது அதிக அபிமானம் வைத்து மிகவும் சலுகை காட்டியதைக் கண்டு பொறாமை கொண்டிருந்த பலருக்கு இப்பொழுது மனத்தில் ஒரு அர்த்தமில்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆனால் இப்படிச் சந்தோஷ மடைவதினால் ஏதாவது புண்ணியம் உண்டா! வேதா மீது ராமநாதன் கொண்ட மன வருத்தம் எல்லோருடைய பிழைப்புக்குமல்லவா கேடு விளைவித்து விட்டது! அவன் ஒருத்தியிடம் கண்ட குறைக்காக ஒரு நாடகக் குழுவையே கலைப்பதென்றால் அது விவேகமான செய்கையா! அவளுக்கு அந்தப் பாத்திரத்தை நன்றாக நடிக்க யோக்கியதை இல்லா விட்டால் வேறொரு நல்ல நடிகைக்குக் கொடுக்கலாம் அல்லவா! இதற்காக ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்த பிறகு இந்த நாடகத்தைக் கை விடுவதோடு அல்லாமல் கம்பெனியையே கலைத்து விடுகிறேன் என்றால் அது புத்திசாலித்தனமா! இப்படித்தான் அங்குள்ள ஒவ்வொருவருடைய மனத்திலும் தோன்றியது. ஆனால் ராமநாதனிடம் தங்கள் மனத்திலுள்ளதைச் சொல்லும் துணிவு மாத்திரம் ஒருவருக்குமே உண்டாகவில்லை.



*

பிறவியிலிருந்தே கலைக்காகப் பாடுபடும் பிறவிகள் சிலர்; அவர்கள் பொருளை லட்சியம் செய்வதில்லை. உடல்நலத்தைக் கவனிப்பதில்லை. எதிலும் லாப நஷ்டக் கணக்குப் பார்ப்பதில்லை. ஊராரின் நகைப்புக்கோ, உற்றாரின் பழிச் சொற்களுக்கோ செவி சாய்ப்பதில்லை. இத்தகைய பிறவிதான் ராமநாதன். அவன் தகப்பனார் பெரிய வியாபாரியாக இருந்து லட்சக்கணக்கான ரூபாய் சம்பாதித்தார். தகப்பனார் சேர்த்து வைக்க பணத்தைக் கொண்டு இவனும் வியாபாரத் துறையில் இறங்கிப் பணத்தை இன்னும் பன்மடங்காகக் குவித்திருக்கலாம். ஆனால் அவனுக்குப் புத்தி அதில் செல்லவில்லை. வாலிபத்திலிருந்தே நாடகப் பித்துப் பிடித்து அலைந்தான். பள்ளியில் பயிலும் காலத்திலிருந்தே அவன் ஒரு சிறந்த நடிகன். அது மட்டுமல்ல; அவனுக்குக் கொஞ்

சம் கவிப் பித்தும் உண்டு. அது அவனைச் சும்மா விடவில்லை. சிறு பிராயத்திலேயே அவன் பல நாடகங்களை எழுத ஆரம்பித்து விட்டான். அந்த நாடகங்களுக்கு உலகத்தில் எத்தகைய வரவேற்பு இருக்கும் என்று அவனுக்குத் தெரியாது. ஆனால் அவற்றை அரங்கேற்ற வேண்டும் என்ற துடிப்பு மாத்திரம் அவனுக்கு இருந்தது. கையில் பண மில்லாதவன் இத்தகைய கனவு கண்டால் அது பலனளிக்காமல் போனாலும் போகலாம். ராம நாதனுக்கு என்ன குறை! அவன் தகப்பனார் தான் ஏராளமாகச்சேர்த்து வைத்திருக்கிறாரே! லாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அவன் நாடகக் கலைக்குப் பணி செய்ய இறங்க வில்லை. கட்டுக் கடங்காத ஆசைதான் அவனை அந்த வழியில் இருப்பியது. அவனுடைய உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அவனுடைய செய்கை பிடிக்கவில்லை. அத் தொழிலில் வீண் நஷ்டம் ஏற்படுமென்று எச்சரித்தனர். அவன் அதையெல்லாம் காதில் வாங்கவேயில்லை. அவன் பணத்தை விரயமாக்குவதாகவும், தூர் நடத்தை உள்ளவனென்றும் ஊரில் உள்ளவர்கள் சொல்லித் திரிந்தனர்.


அவன் எவருடைய வார்த்தைகளையும் லட்சியம் செய்யாமல் ஒரு நாடகக் கம்பெனியை ஆரம்பித்தான். சொந்தமாகவே ஒரு நாடகக் கம்பெனியை ஆரம்பித்து விட்ட பொழுது அதில் தான் சொந்தமாக எழுதிய நாடகங்களைப் போட்டுக் கொள்வதென்றால் யார் ஆட்சேபிக்கப் போகிறார்கள்! 'கொண்டிப் பெண்' 'புதரில் ரோஜா' 'அவளும் இவனும்' முதலிய நாடகங்களெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக அரங்கமேறின. எப்படியோ அவனால் நாற்பது ஐம்பது ஜீவன்கள் பிழைத்து வந்தன. 'ராமநாத கான சபா' என்னும் அக் கம்பெனி ஊர் ஊராகச் சென்று ராமநாதன் எழுதிய நாடகங்களையே திரும்பத் திரும்ப நடித்துக் கொண்டிருந்தது. தன்னுடைய நாடகங்களிலெல்லாம் ராமநாதனே முக்கியமான பாத்திரங்களை ஏற்று நடித்து வந்தான். அவன் எழுதிய நாடகங்கள் எப்படிப்பட்டவைகளோ! ஆனால் அவன் ஒரு நல்ல நடிகனாகவும் கலைக்காக வாழ்பவனாகவும் திகழ்ந்தான். நாடகக் கம்பெனி ஆரம்பித்து நான்கைந்து வருடங்கள் ஓடி விட்டன. அவன் தன் சொந்த ஊரையும் உற்றார் உறவினர்களையும் மறந்து விட்டான். இந்த நாடகங்களுக்காக நாம் எத்தனை பணம் செலவு செய்திருக்கிறோம்! எவ்வளவு லாபம் அடைந்திருக்கிறோம்! எவ்வளவு கஷ்டம் அடைந்திருக்கிறோம்! என்பதையெல்லாம் கணக்குப் பார்த்துத் தெரிந்து கொள்ளச் சக்தி யற்றவனாகவே ஆகி விட்டான் அவன்.

இரவு பகல் கண் விழிப்பதினாலும், ஊர் ஊராகச் சென்று பல ரகமான சாப்பாடுகளைச் சாப்பிடுவதினாலும் தன் அழகான, திடமான வாலிப தேகம் எவ்வளவு மெருகிழந்திருக்கிறது என்பதையும் அவன் கவனிக்கவில்லை. வசதிகள் இருந்தும் வாழ்க்கையில் நிம்மதியாகவும் சுகமாகவும் இருக்கும் வழியை மறந்திருந்தான். அவன் கடைசியாக எழுதிய நாடகம் 'சிலையின் நாட்டியம்' என்பது. இத்தகைய ஒரு அபூர்வமான நாடகத்தை எழுத அவனுக்குத் தூண்டுதலாக இருந்தவள் வேதா என்பது அநேகருக்குத் தெரியாது.

வேதா இரண்டு வருடங்களுக்கு முன்தான் அவனுடைய நாடக சபையில் சேர்ந்தாள். அவளுக்குத் தாயில்லை. அவளுடைய தகப்பனார் அவளை வைத்துப் போஷிக்கச் சக்தியற்றவராகி அந்த நாடகக் கம்பெனியில் சேர்த்து விட்டுப் போனார். அவளுக்குச் சுமாராகப் பாடத் தெரியும். கொஞ்



சம் நாட்டியமும் ஆடுவாள். பிரமாதமான அழகியல்ல அவள். இருந்தாலும் நாடகத்துக்கு வேண்டிய முக வெட்டும் நாட்டியத்துக்கு லாகவமான கொடி போன்ற உடலமைப்பும் அவளுக்கு இருந்தது. அவளுக்கு வயது இருபதுதான் இருக்கும். அந்த நாடகசபையில் சேருவதற்குமுன்னால் அவள் மேடை ஏறி நடித்தவளல்ல. அவளை நடிப்பில் சிறந்தவள் என்றும் சொல்ல முடியாது. அவளுக்கு நாடகங்களில் பிரதான பாத்திரங்கள் எதுவும் கொடுக்க யோக்கியதை இல்லா விட்டாலும் சபையில் நாட்டிய மாடுவதற்கும் தோழி



சோஷலிஸ்ட்

★ மார்ச்சு 21உ ஈரோடு அப்பர்சாமி மடத்தில் பிரஜா சோஷலிஸ்ட் ஊழியர் கூட்டம் நடந்தது. கோயமுத்தூர் ஜில்லா பிரஜா-சோஷலிஸ்ட் கட்சிக் காரியதரிசி திரு எஸ். பாலசுப்பிரமணியம் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார். ஈரோடு நகர சோஷலிஸ்ட் கட்சிக் காரியதரிசி திரு கே. மாரப்பன் எல்லோரையும் வரவேற்றுப் பேசினார்.

" சோஷலிஸம் என்ற தத்துவம் நம் நாட்டுக்குப் புதிதல்ல. வேறு எந்த நாட்டிலிருந்தும்

வேடம் போன்ற சில்லறை வேடங்களுக்கும் அவள் பயன் படுவாள் என்ற எண்ணத்தில்தான் அவளைத் தன் கான சபையில் சேர்த்துக் கொண்டான் ராமநாதன்.

அவள் அந்த நாடகக் குழுவில் சேர்ந்த இரண்டு மூன்று மாதங்களுக்குள் ராமநாதனின் அன்பிற்குப் பாத்திரமானாள். ராமநாதன் மற்றவர்கள் பொறாமை கொள்ளும் வண்ணம் அவளிடம் அன்பு செலுத்தலானான். அவள் தன் நாட்டியத்தினாலோ, பாட்டினாலோ, அழகினாலோ, நடிப்பினாலோ அவன் மனத்தைக் கவர்ந்துவிடவில்லை. அவளுடைய குணமும் நடத்தையும்தான் அவன் மனத்தைக் கவர்ந்தன. அனாதையாக அவன் பொறுப்பில் விடப்பட்டதனால் அந்த இளம் பெண்ணிடம் அனுதாபமும் பச்சாத்தாபமும் அவனுக்கு நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருந்தன. அந்த நாடகக் குழுவிலிருந்த நடிகர்களும் மற்றவர்களும் 'அவளிடம் அவனுக்குக் காதல்' என்று கூட ரகசியமாகப் பேசிக் கொண்டனர். ஆனால் உண்மையாக வேதாவிடம் ராமநாதன் வைத்த அன்பு இயற்கையாக வாலிப உள்ளத்தில் எழும் காதல் உணர்ச்சிதானா என்று ஒருவராலும் கண்டு பிடிக்க முடியாமலிருந்தது. அவளுக்காக அவன் காட்டும் அனுதாபமும் சலுகையும் அதிகமாக இருந்தனவே தவிர, அவனுடைய நடத்தையிலோ, பேச்சிலோ வித்தியாசம் காணும்படியாக எதுவுமே நிகழ்ந்ததில்லை. வேதாவின் இளம் உள்ளம் வாழ்க்கையில் அன்பையும் பரிவையும் அதுவரையில் கண்டிராதது. எனவே, ராமநாதனின் அன்பிலும் ஆதரவிலும் மயங்கியது. அவனிடம் பாய்ந்தோடும் இருதயத்தை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

அதன் பலனாக அந்தப் பேதைப் பெண்ணின் உள்ளம் அவனுக்கு அடிமையாகியது. மற்றவர்களெல்லாம் ரகசியமாகவும் ஜாடையாகவும் பரிகாசமாகவும் பேசிக் கொள்வது போல் ராமநாதன் உண்மையாகத் தன்மீது காதல் கொண்டிருப்பானோ என்ற சிந்தனையில் அவள் உள்ளம் சிக்கிச் சுழன்றது. ராமநாதன் அவள்மீது காதல் கொண்டிருந்தானோ இல்லையோ, தெரியாது. வேதா அவன் மீது அளவற்ற காதல் கொண்டிருந்தாள். தன் மனக் காதலை-தன் மன ஆவலை-அவனிடம் எப்படியாவது சொல்ல வேண்டும் என்று அவளுக்குத் துடிப்பு ஏற்பட்டது. ஆனால் அந்த அளவுக்குத் துணிவு உண்டாகவில்லை. அவன் அவளிடம் செலுத்தும் அன்பை, ஆதரவைக் காதலென்றோ மோகமென்றோ அவள் எப்படி எடுத்துக் கொள்ள முடியும்! அதற்கு ஆதாரம்! அவனிடம் எப்படித் துணிந்து தன் மனத்திலுள்ள காதலைச் சொல்லுவது! அவன் அதை வித்தியாசமாக எடுத்துக் கொண்டு விட்டால்......! அது ஏதேனும் விபரீதமாக முடிந்துவிட்டால்...! பலஹீனமடைந்த பெண் உள்ளம் தன் துடிக்கும் ஆவலை அடக்கிக் கொண்டது. மனக் கனவிலேயே மயங்கித் தடுமாறியது. என்றோ ஒரு நாள் அவன் தன் மனத்திலுள்ள காதலை சொல்லித்தானே ஆகவேண்டும் என்று நம்பிக்கையோடு எதிர்பார்த்தது. அவன் தன்னோடு பேசும் ஒவ்வொரு வினாடியிலும் தன் மனத்தைத் திறந்து ஏதாவது சொல்ல மாட்டானா என்றே அவள் எதிர் பார்த்தாள். ஆனால் கலையையே வாழ்வின் லட்சியமாகக் கொண்டிருந்த ராமநாதனுக்கு அதற்கெல்லாம் பொழுது எங்கே இருந்தது!

ராமநாதன் வேதாவிடம் எவ்வளவோ அன்பாகவும் ஆதரவாகவும் தான் நடந்து கொண்டான். இருந்தாலும் அவனுடைய நாடகங்களில் வேதாவுக்கு எத்தகைய முக்கியப் பாத்திரமும் கொடுத்து நடிக்கச் செய்யாதது எல்லோருக்குமே ஆச்சர்யமாய்த்தானிருந்தது. ஆனால் ராமநாதன் பிறர் மனத்துக்கு வருத்தம் ஏற்படும் வண்ணம் பிறரை நீக்கி அந்த ஸ்தானத்தை வேதாவுக்குக் கொடுக்க விரும்பவில்லை. ஒரு நாடகத்தில் வேதாவைப் பிரதான பாத்திரமாக்கி நடிக்கச் செய்ய வேண்டும் என்ற ஆவல் மட்டும் அவன் மனத்துள் இருந்தது. எனவே, அவளுக்காக, அவளுக்குத் தகுந்தாற் போல் ஒரு புது நாடகத்தைச் சிருஷ்டிக்க விரும்பினான் ராமநாதன். அந்த அவளின் காரணமாகச் சிருஷ்டிக்கப்பட்டதுதான் 'சிலையின் நாட்டியம்' என்ற நாடகம். அந்த நாடகம் உருவானதற்குக் காரணமானவள் வேதா என்பதும், அது அவளுக்காகவே அவனால் எழுதப்பட்டது என்பதும் அவனுக்கு மாத்திரமே தெரிந்த ரகசியம். அதை வேதாவிடம் கூட அவன் தவறிப் போயும் சொன்னதில்லை.

கூட்டம்

இறக்குமதி செய்த சரக்கல்ல. தமிழ் மக்களிடமும், தமிழ் இலக்கியங்களிலும், கம்பராமாயணம், திருக்குறள் முதலிய நூல்களிலும் அந்தத் தத்துவம் ஊறிக் கிடக்கிறது" என்று ஆசிரியர் 'கல்கி" கூறிப் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியை வலுப்படுத்த வேண்டிய அவசியத்தைப் பற்றிப் பேசினார். குட்டப்பாளையம் திரு கே. எஸ். பெரியசாமி முதலியவர்கள் பேசிய பின்னர், திரு என். லட்சுமணன் அனைவருக்கும் வந்தனோபசாரம் கூறினார்.



வஜ்ர நாட்டைக் கேசவமாதவன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவன், மிகவும் கலை ஆர்வமுள்ளவன். அதிலும் நாட்டியக் கலை என்றால் அவனுக்கு அலாதி மோகம். உலகமெங்கும் அலசிச் சிறந்த முறையில் நாட்டியமாடக் கூடிய அனேக மங்கையர்களைத் தன் சமஸ்தான நாட்டிய நங்கைகளாக நியமித்திருந்தான். அவனுடைய நகரம் தேவலோகம் போலிருந்தது. அந்த நகரத்தில் அரம்பையர் போன்ற நாட்டிய நங்கையர்கள் உலவிவந்தனர். அரச சபையிலுள்ள மற்ற நாட்டிய நங்கையர்களைவிடப் பத்மதிலகா என்பவளே மிகவும் சிறந்து விளங்கினாள். வானுலகிலிருந்து வந்து குதித்த மேனகையோ ரம்பையோ எனத் திகழ்ந்தாள் அவள். நாட்டியத்திலும் அழகிலும் உலகத்தில் அவளை வெற்றி கொள்பவர் ஒருவருமில்லை என்றே சொல்லி விடலாம். அவள் நாட்டியமாடும்போது பொற் கொடி துவண்டு ஆடுவது போலிருக்கும். இயன்ற வண்ணமெல்லாம் மேனியை நெளித்து ஆடும் வகையில் அவளது உடலமைப்பைப் பிரும்மன் எப்படிச் சிருஷ்டித்தானோ என்று எல்லோரும் வியப்படையும்படி பத்ம திலகா திகழ்ந்தாள். அவள் தன் சமஸ்தானத்தின் நடன அணங்காக இருப்பதில் அவனுக்குப் பெரு மகிழ்ச்சி. அதன் காரணமாகப் பல அரசர்களை யுத்தத்தில் வென்ற பெருமிதத்தைக் காட்டிலும் அதிகத் திருப்தியோடும் சந்தோஷத்தோடும் இருந்தான் கேசவ மாதவன்.

கேசவ மாதவனுக்கு ஒரு அருமைப் புதல்வனிருந்தான். அவன் பெயர் ஸ்ரீதர மாதவன். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா! நாட்டியக் கலையை ரசிப்பதிலும் நாட்டியமாடுகிறவர்களைப் போற்றிப் புகழ்வதிலும் தந்தையை விட ஒரு படி ஏற்றமாகவே இருந்தான் ஸ்ரீதர மாதவன். சிறு குழந்தைப் பருவத்திலிருந்தே தன் புதல்வனுக்கு நாட்டியக் கலையில் பிரேமை ஏற்பட்டிருப்பதைக் கண்டு கேசவ மாதவன் பயந்தான். தன் மகன் நாட்டியக் கலையின்மேல் கொண்ட பித்துக் காரணமாக நாட்டிய மங்கையர்களிடம் மோகம் கொண்டு தன் வாழ்க்கையையே கெடுத்துக் கொண்டு விடுவானோ என்ற பயம் மன்னனுக்கு. அந்தப் பயத்தின் காரணமாக அவன் தன் மகனின் சுதந்திரத்தைப் பல வகையிலும் கட்டுப்படுத்தலானான். ஸ்ரீதரமாதவனை நாட்டியம் பார்க்க அனுமதிப்பதில்லை. சபை நடுவே பகிரங்கமாக நடக்கும் நாட்டியக் கச்சேரிகளையெல்லாம் நிறுத்தி அவைகளைத் தனியே அந்தப்புரங்களில் வைத்துக் கொண்டு தான் மட்டும் கண்டு ரசித்து வந்தான். எந்த நாட்டியப் பெண்களும் ஸ்ரீதர மாதவனின் கண்களில் படக்கூடாதென்று உத்தரவிட்டான். நாட்டியப் பெண்கள் மூடு பல்லக்கில் ரகசியமாக வந்து அந்தப்புரத்தில் நாட்டியமாடி விட்டுப் போவது வழக்கம். மற்ற பெண்கள் எல்லோரையும் விடப் பத்மதிலகாவைத் தன் குமாரன் பார்ப்பதுதான் மிகவும் அபாயம் என்று உணர்ந்தான் மன்னன். பத்மதிலகாவைப் பார்த்த எவரும் நிச்சயமாக மயங்குவார்கள். அதிலும் அவளுடைய நாட்டியத்தைப் பார்த்த எவரும் நிச்சயம் அவளுக்கு அடிமையாகி விடுவார்கள். பத்மதிலகா போன்ற ஒரு நாட்டியக் காரியினாலேயே எவ்வளவோ சாம்ராஜ்யங்களை அடிமைப்படுத்திவிடலாம் என்று எண்ணிப் பெருமைப்படும் மன்னனுக்கு இளைஞனும் நாட்டியக் கலையில் அதிக மோகம் கொண்டவனுமான தன் குமாரன் அவளைப் பார்த்துவிட்டால் எப்படியாகி விடுவான் என்பது தெரியாதா!

பத்மதிலகாவின் நாட்டியத்தைப் பற்றியும், அவளுடைய அழகைப் பற்றியும் ஸ்ரீதரமாதவன் கேள்விப்பட்டிருந்தான். அவளை மட்டும் பார்த்ததில்லை. அவளைப் பார்க்க வேண்டும், அவள் நாட்டியத்தைப் பார்த்து அனுபவிக்க வேண்டும் என்ற ஆவல் நாளுக்கு நாள் அவனை வாட்டி வந்தது. ஆனால் அரசனுடைய தடை உத்தரவு நாளுக்கு நாள் மிகவும் கடுமையானதாகிக் கொண்டிருந்தது. தகப்பனாரின் அடக்குமுறை அதிகமாக அதிகமாக அவனுடைய மன ஆவலும் ஆசையும் அதிகமாகிக் கொண்டே வந்தன. எந்த வகையிலாவது பத்மதிலகாவைப் பார்த்துவிடுவது என்ற தீர்மானத்தோடு பலவிதமான முயற்சிகளில் இறங்கினான். அவன் முயற்சிகளெல்லாம் தோல்வியுற்றன. பலத்த பாதுகாப்புடன் வரும் நூற்றுக்கணக்கான மூடு பல்லக்குகளில் எதில் பத்மதிலகா இருக்கிறாள் என்பது அவனுக்குத் தெரியவில்லை. எல்லாப் பல்லக்கு

களும் ஒரே மாதிரியாக இருந்தன. ஒவ்வொரு பல்லக்கையும் சுற்றி உருவிய கத்தியுடன் மெய்காப்பாளர்கள் வந்து கொண்டிருந்தனர். யாரேனும் அந்தப் பல்லக்குக்குச் சமீபமாக வந்தால் அவர்களைக் கை வாளால் உடல் வேறு தலை வேறாக்கி விடும்படியாக மன்னன் உத்தரவிட்டிருந்தான். அரண்மனைக்கு வரும் மூடிய பல்லக்குகளை மாளிகையின் மேல் உப்பரிகையில் நின்ற வண்ணம் பார்த்துப் பெருமூச் செறிவான் ஸ்ரீதரமாதவன். உருவத்தைக் கூடப் பார்க்காமல் பத்மதிலகாவையே நினைத்து உருகும் அவனைப் பற்றிப் பத்மதிலகா எதற்கு நினைத்துப் பார்க்கப் போகிறாள்!

பத்ம திலகா இளவரசனைப் பற்றியும் அவனுக்குள்ள கலை ஆர்வத்தைப் பற்றியும் அவனுடைய அழகைப் பற்றியும் கேள்விப் பட்டிருந்தாள். அரசன் இளவரசனை எதற்காக நாட்டியங்களைக் கண்டு ரசிக்க விடாமல் தடை போட்டிருக்கிறார் என்ற ரகசியம் மாத்திரம் அவளுக்கு விளங்கவில்லை. அரசகுமாரனைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையும் துடிப்பும் அவளுக்கு இருந்தன. ஒருதரமாவது அவன் எதிரில நாட்டியமாடி ரசிகத் தன்மை நிறைந்த அவனிடமிருந்து ஆசிபெற வேண்டுமென்று துடித்தாள். துடிப்பும் ஆர்வமும் இருந்து பயனென்ன! அரசன் அவளுக்கும் மற்ற நாட்டிய நங்கையர்களுக்கும் இட்டுள்ள கடுமையான ஆக்ஞையிலிருந்து மாற முடியுமா! இளவரசனைப் பார்க்க வேண்டும். அவன் எதிரில் நாட்டிய மாடவேண்டும் என்ற துடிப்பும் ஏக்கமும் ஒருபுறமிருக்கட்டும். ஒவ்வொரு நாளும் அரசனுக்காக மாத்திரம் தனியே நாட்டிய மாடுவது அவளுக்கு வெறுப்பையும் அலுப்பையும் கொடுத்து வந்தது. அதனால் நாளுக்கு நாள் அவளுடைய நாட்டியச் சிறப்பு மங்கி வந்தது. தேக சௌந்தர்யம் ஒளி இழந்து வந்தது. மற்ற பெண்கள் நன்றாக நாட்டியமாடுவதுடன் சந்தோஷமாகவும் இருந்து வந்தனர். அதனால் அரசன் தன்னிடம் காட்டிவந்த அபிமானம் நாளுக்கு நாள் குறைவது போல் அவளுக்குத் தோன்றியது. எனவே, அவள் மனம் குன்றிப் போனாள். உள்ளம் சோரவே உடல் மெலிந்தது. ஒரு நாள் இரவு மனத்தில் எழுந்த தாபத்தைச் சற்றும் பொறுக்க மாட்டாமல் பத்ம திலகா இறந்து விட்டாள்.

பத்மதிலகா திடீரென்று இறந்து விட்டதைக் கேட்ட அரசன் தன் நாட்டையே இழந்து விட்டவன் போல் துடித்தான். பாவம்! இந்தச் செய்தியைக் கேட்ட இளவரசன் எப்படி இருப்பான்! அவனுடைய ஆசை இனி எந்த விதத்தில் நிறைவேறப் போகிறது! இந்தப் பிறவியில் பத்மதிலகாவின் நாட்டியத்தைக் கண்டு மகிழாத துர்ப்பாக்கியத்தை விட வேறு ஏதேனும் துர்ப்பாக்கியம் அவனுக்கு வேண்டுமா! அந்த அழகியை இனி அவன் எங்கே பார்க்கப் போகிறான்! இனி எங்கே அவளுடைய ஒயிலான நடனத்தைக் கண்டு களிக்கப் போகிறான்! அவனுக்கு வாழ்க்கையிலேயே வெறுப்பு ஏற்பட்டு விட்டது. நெருப்பில் விழுந்த புழுவெனத் துடித்தான்.

அரசன் அரசாங்க மரியாதைகளுடன் படாடோபத்தோடு பத்மதிலகாவின் சடலத்தைக் கடற்கரை ஓரமாக அடக்கம் செய்தான். அதோடு மட்டுமல்ல; கைதேர்ந்த சிற்பியைக் கொண்டு அவளைப் போன்ற ஒரு அழகான சிலை செதுக்கச் செய்து அதை அலைவீசும் கடற்கரையில் அவளது ஞாபகார்த்தமாக நிலைநாட்டினான்.

அரசன் பத்மதிலகாவைப் போல் ஒரு சிலையைச் செய்து நிலை நாட்டியதில் இளவரசனுக்குச் சிறிது மன ஆறுதல் ஏற்பட்டது. பத்மதிலகாவை நேரில் பார்க்கக் கொடுத்து வைக்கா விட்டாலும் அவளுடைய சிலையையாவது அடிக்கடி பார்த்து மன ஆறுதல் அடையலா மல்லவா! அரசன் பத்மதிலகா இறந்த பிறகு இளவரசனுக்கு ஏற்படுத்தி யிருந்த கட்டுப்பாடுகளைச் சிறிது சிறிதாகத் தளர்த்தி விட்டான். இளவரசன் தன் இச்சையாக வெளியே உலவ முடிந்தது.

நடு இரவு; வளர்பிறைச் சந்திரனின் ஒளி உலகெல்லாம் பரவி இருந்தது. சந்திரனின் பூரிப்பில் குதூகலமடைந்த கடல் 'ஓ' வென்ற நாதத்துடன் களிநடம் புரிந்து கொண்டிருந்தது. கடல் மணலில் கால்பதிய மெதுவாக இளவரசன் ஸ்ரீ தரமாதவன் பத்ம திலகாவின் சிலையை நோக்கி வந்து கொண்டிருந்தான். ஒவ்வொரு நாளும் அந்தச் சிலையை ஒரு முறையாவது வந்து பார்க்கா விட்டால் அவனுக்கு மன நிம்மதி ஏற்படாது. பத்மதிலகாவின் நாட்டியத்தைப் பார்க்கக் கொடுத்து வைக்காமற் போனேமே என்ற ஆற்றாமையில் புழுங்கும் அவன் உள்ளத்தில் பத்மதிலகாவின் சிலை உயிர் பெற்று வந்து நாட்டிய மாடாதா என்ற நம்பிக்கையும் நப்பாசையும் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு நாளும் அச் சிலையருகே வந்து அதன் முகத்தைப் பார்த்துப் பார்த்து, "பத்மதிலகா! கொஞ்சம் ஆடமாட்டாயா! எனக்காகக் கொஞ்சம் ஆடமாட்டாயா!" என்ற வார்த்தைகளையே திரும்பத் திரும்பப் பித்தம் தலைக்கேறியவனைப் போலச் சொல்லிச் சொல்லிக் கெஞ்சுவான். சிலை எங்காவது உயிர் பெற்று வந்து நடனம் ஆடுவதுண்டா!......

ஆனால் ஆடியது! ஒரு நாள் இரவு அந்தச் சிலையும் பித்தனைப் போலாகிவிட்ட இளவரசனுக்கு இரங்கி உயிர் பெற்று வந்து நாட்டியம் ஆடியது! அன்று இரவு நெடுநேரம் வரையில் அச் சிலையின் அருகில் நின்று அவன் கதறினான். மெதுவாக அச் சிலையின் அழகிய விழிகள் திறந்தன. அங்கத்தில் அசைவு ஏற்பட்டது. ஒரு இனிய குரல், "நான் ஆட வேண்டுமா! உங்கள் எதிரில் ஆட வேண்டுமென்றுதானே எனக்கும் ஆவல்!" என்றது. அடுத்த கணம் நாட்டியம் ஆரம்பமாகியது. கடல் அலைகளின் பேரிகையோடு கால் சதங்கையின் 'கல் கல்' என்ற ஓசை இணைந்து ஒலித்தது. பூரண நிலவின் ஒளியில் பத்மதிலகாவின் பொன் மேனி ஒவ்வொரு அசைவிலும் நெளிவிலும் தக தக வென்று மின்னியது. காற்றில் துவண்டாலும் பொற் கொடி போல் தான் அவள் ஆடினாள். ஸ்ரீதரமாதவன் பூவுலகிலிருந்து திடீரென்று அமரர் சபைக்கு வந்து விட்டவன் போல் அந்தக் கடற்கரையின் மணற் பரப்பில் உட்கார்ந்து அவளுடைய அழகிய நடனத்தைக் கண் கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தான். அவளுடைய நாட்டியத்துக்கும் ஒரு முடிவு ஏற்பட்டது. மணலில் உட்கார்ந்திருந்த ஸ்ரீதரமாதவன் பாய்ந்தெழுந்து அவளுடைய கரத்தைப் பற்றிக் கொண்டு, "பத்மதிலகா! அற்புதம்! அற்புதம்!!" என்று கூவினான். ஆனால் அங்கு பத்மதிலகா இல்லை. அவளுடைய அழகுச் சிலைமட்டும் தான் நின்று கொண்டிருந்தது.

ஸ்ரீதரமாதவன், "பத்ம திலகா! பத்ம திலகா! நீ மறுபடியும் சிலையாகி விட்டாயா! இன்னும் கொஞ்சம் ஆடு! இன்னும் கொஞ்சம் நடனமாடு!" என்று கதறினான். (அடுத்த இதழில் முடியும்)


இந்த புத்திசாலியான மஹாராஷ்டிரிய பெண்மணி கூறுகிறாள்:
"உங்கள் பணத்திற்கு
அதிகப்படியான,
புத்தம்புதிய, ருசியான
தேயிலையை வாங்குங்கள்"
தேயிலைத் தொழிலில் தேர்ந்தவர்களால் தயாரிக்கப்பட்டு, சரம் உட்புகாதபடி சிறந்த முறையில் பாக் செய்யப்பட்டு, தோட்டத்திலிருந்து கடைகளுக்கு அதி வேகமாக அனுப்பப்படுவதால், ப்ரூக் பாண்ட் தேயிலை களங்கமற்று, புத்தம் புதியதாகவும் காலவரையற்று சுத்தமானதாகவும் இருக்கிறது.
எப்பொழுதும்
ப்ரூக் பாண்ட்
பாக்கெட்
தேயிலையை
வாங்குங்கள்
BB 19 K



திருமண வருஷம்

வ.சா.நாகராஜன்

சாமா

சித்திரை மாதம் முதல் தேதி. புது வருஷப் பண்டிகை தினம். காப்பி சாப்பிட்டான பிறகு ராமகிருஷ்ணன் சாவகாசமாக உட்கார்ந்துகொண்டு அன்று காலை வந்த பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தான்.

"நன்றாக இருக்கிறது! நாளும் கிழமையுமாகப் பத்திரிகையைக் கையிலே வைத்துக்கொண்டு என்ன இது? குளிக்க வேண்டாமா! எழுந்திருந்து போய்க் குளித்து விட்டுத் தயாராக இருந்தால் தானே சமையல் ஆனவுடனே சாப்பிடலாம்!" என்று கேட்டபடியே பெருங்காயத்தைக் கிண்ணத்தில் கரைத்துக் கொண்டே ராமகிருஷ்ணன் இருந்த அறைக்குள் நுழைந்தாள் பூமா.

"உன் தொல்லை பெரிய தொல்லையாகப் போச்சு, பூமா!" என்று அலுத்துக் கொண்டான் ராமகிருஷ்ணன்.

"தொல்லை என்ன! நல்ல நாள் அன்றைக்கு இப்படித்தான் சோம்பேறித்தனமாக உட்கார்ந்து கொண்டிருப்பார்களா! சமையல் பாதி ஆகி விட்டது; நீங்கள் இன்னும் குளிக்கக்கூட இல்லை!"

"அப்பா! என்ன விரட்டு விரட்டறே! ஏழு வருஷம் சுகமாய் இருந்தேன்; ஒருத்தர் 'ஏன்'னு கேட்காமல்!"

"ஏன், அப்படியே பிரும்மசாரியாகவே இருந்திருப்பது தானே! ஏன் கல்யாணம் பண்ணிக் கொண்டீர்கள்!" என்று கேட்டு விட்டுக் குறும்பாகச் சிரித்தாள் பூமா.

"சீ, போ!" என்று சொல்லி விட்டு எழுந்தவன் மறுபடியும் உட்கார்ந்து விட்டான். பூமா சமையல் அறைக்குச் சென்றாள்.

** ** **

சென்ற வருஷம் ராமகிருஷ்ணன் பிரும்மசாரியாக இருந்தான். ஹோட்டல் கண்ட இடத்தில் சாப்பாடு! 'ரூம்' கண்ட இடத்தில் தூக்கம்! அவனுக்கு வாழ்க்கை குஷியாகத்தான் இருந்தது.

ஆனால் ஒரு நாள் – கிழமை என்று வந்து விட்டால் அன்று அவன் மனம் சிறிது சஞ்சலப்படும். எந்த ஹோட்டலில் ஒவ்வொரு விசேஷ தினத்துக்கும் வடையும் பாயஸமும் போடுகிறார்கள்!

அன்றும், அதாவது சென்ற வருஷம் புது வருஷப் பண்டிகை அன்று – காலையில் ராமகிருஷ்ணனுக்கு எழுந்தவுடன் இந்தமாதிரி யோசனை ஓடிற்று. "இன்று வருஷப் பிறப்பு. ஊர் இமி லோகப்படும். 'பாயஸமும் கறி வகைகளும், அடடா!...'" என்று எண்ணி நாக்கைச் சப்புக் கொட்டினான். அடுத்த படியாக இன்று சாப்பிடுவதற்கு யார் வீட்டுக்குப் போகலாம் என்று யோசித்தான். இப்படி யோசித்தானே ஒழிய ராமகிருஷ்ணன் மகா சங்கோசி. யாராவது வந்து கூப்பிட்டால் கூடப் போவதற்கு அவன் மிகவும் கூச்சப்படுவான்.

படுக்கையில் விழுந்து கிடந்த பத்திரிகையை எடுத்துப் பார்த்தான். அதில் ஒன்றும் முக்கியமான செய்தியாகப் படவில்லை. அதை அப்படியே தூக்கி எறிந்து விட்டுப் படுக்கையைச் சுருட்டி வைத்தான். பல் தேய்த்தான பிறகு காப்பி சாப்பிட வெளியில் கிளம்பினான்.

காப்பி சாப்பிட்டு விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தபோது, "ராமகிருஷ்ணா!" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். இடது கையில் வாழை இலைக் கட்டு, வலது கையில் கறிகாய்ப் பை — இந்தச் சம்பிரமத்துடன் நின்று கொண்டிருந்த தன் கலாசாலை நண்பன் சுந்தரராமனைக் கண்டதும் ராமகிருஷ்ணன் அப்படியே பிரமித்து நின்றான்.

"என்னப்பா, சுந்தரம்! நீ சென்னையிலா இருக்கிறாய்! எத்தனை நாளாக! என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாய்!" என்று விசாரித்தான்.

"வா, பேசிக் கொண்டே போகலாம்!" என்று சொல்லி, ராமகிருஷ்ணனையும் அழைத்துக் கொண்டு தன் வீட்டுக்குப் போனான் சுந்தரராமன்.

வீட்டுக்குள் நுழைந்ததும், சமையலறையிலிருந்து பத்தடி தள்ளி இருந்த மூன் பக்கத்து அறையில் ராமகிருஷ்ணனை உட்கார வைத்து விட்டுச் சுந்தரராமன் சமையல் அறைக்குச் சென்றான். உள்ளே சுந்தரராமன், "சுசீலா, இன்று சாப்பிடுவதற்கு என் சிநேகிதன் ஒருவனை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறேன். எல்லாம் காணுமா? இல்லை, ஏதாவது வாங்கிக் கொண்டு வரட்டுமா!" என்று கேட்டதும். "நன்றாக இருக்கிறது! இரண்டு பேருக்குச் சமையல் என்றால் சரியாக இரண்டு பேருக்கே மாத்திரம் காணும்படியாகச் சமைப்பார்களா! எல்லாம் நன்றாகக் காணும். நீங்கள் குளிக்கிற வழியைப் பாருங்கள்!" என்று பதில் சொன்னதும் ராமகிருஷ்ணனின் காதில் விழுந்தது.

அவன் சிரித்துக் கொண்டான். சிநேகிதனின் மனைவி கெட்டிக்காரிதான் என்று அவன் மனம் சொல்லியது.

சுந்தரராமன் மூன் பக்கத்து அறைக்கு வந்தான். இருவரும் ஏதேதோ பழைய விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். நடுவில் மூன் பக்கத்து அறையில் ஏதோ சாமான் எடுக்க வந்த சுந்தரத்தின் மனைவி, தன் கணவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த ராமகிருஷ்ணனைப் பார்த்து விட்டுப் போனாள்.

சற்று நேரத்திற் கெல்லாம், சுந்தரராமன் சமையல் அறைக்குச் சென்றான். "ஆமாம், உங்கள் சிநேகிதருக்கு எந்த ஊர்! அவர் அப்பா என்ன பண்ணுகிறார்!" என்று நண்பன் மனைவி விசாரித்தது ராமகிருஷ்ணனின் காதில் விழுந்தது.

"ஆரம்பிச்சுட்டியா, உன் தங்கைக்கு வரன் பார்ப்பதற்கு! எனக்கு என்ன, வேறே வேலை கிடையாதா. உன் தங்கைக்கு வரன் பார்க்கிறதைத் தவிர!" என்று கேட்டான் சுந்தரம்.

"ஆமாம், உங்களுக்குப் பெண்ணைக் கொடுத்து, வேலையும் பண்ணி வைத்து, வீடும் பார்த்துக் கொடுத்து, குடியும் குடித்தனமுமாக வைத்திருக்கிறார்களே, அதற்கு நீங்கள் இதுகூடச் செய்யக்கூடாதா!" என்று சுசீலா திருப்பிக் கேட்டாள்.

"ஆமாம், ஆமாம்! உலகத்திலே ஒரு மாமனாரும் செய்யாததைத்தான் உன் அப்பா அதிசயமாகச் செய்து விட்டார்!" என்று சுந்தரம் கேலியாகச் சொன்னான்.

ராமகிருஷ்ணனுக்கு, அவர்களுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டு பக்கத்து அறையில் உட்கார்ந்து கொண்டிருப்பது சங்கடமாக இருந்தது. தங்கள் பேச்சைப் பிறர் கேட்பதை அந்த இருவரும் விரும்ப மாட்டார்கள் என்பதை ராமகிருஷ்ணன் அறிந்திருந்ததால் மெதுவாக எழுந்து வாசல் பக்கம் வந்து விட்டான்.

காலையிலிருந்து "கருவேப்பிலை, கொத்தமல்லி...!" என்று விற்றுக் கொண்டு தெருவில் அலைந்த கருவேப்பிலைக் கூடைக்காரி, கூடையில் இருந்ததை விற்று விட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தாள். பண்டிகை நாள் இறைக்காக எதிர் வீட்டு வாசலில் தோட்டி, வீட்டுக்காரருடன் தகராறு செய்து கொண்டிருந்தான். கோடி வீட்டு டாக்டருக்கு அன்றுகூட லீவு இல்லை போலும்! நான்கைந்து ரிக்ஷாக்களும் அவருடைய காரும் வாசலில் நின்று கொண்டிருந்தன.

ராமகிருஷ்ணன் வாசலில் திண்ணையருகில் நின்று இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த போது, அந்த வீட்டு வாசலில் ஒரு குதிரை வண்டி வந்து நின்றது. அதிலிருந்து ஒரு பெரியவரும் ஒரு பெண்ணும் இறங்கினார்கள். பெரியவர் வண்டிக்குள்ளிருந்து ஒரு தகரப் டின், வாழை இலைக் கட்டு இவைகளை இறக்கிக் கொண்டிருந்ததைப் பார்த்த ராமகிருஷ்ணன், எங்கேயோ கிராமத்திலிருந்து வருகிறார் என்று தீர்மானித்தான்.

திண்ணைப் பக்கம் நின்று கொண்டிருந்த ராமகிருஷ்ணனைப் பார்த்த பெரியவர், "இந்த வீட்டு நம்பர் என்ன!" என்று கேட்டார்.

"ஏன்!" என்று கேட்டான் ராமகிருஷ்ணன்.

"சுந்தரராமன் என்கிறவர் இங்கே தானே இருக்கிறார்!"

"நீங்கள் யார்!"

"அவர் வீட்டிலே இருக்கிறாரோ, இல்லையோ!"

"இருக்கிறார். நீங்கள் யாரு!" என்று குறுக்குக் கேள்வி கேட்டான் ராமகிருஷ்ணன்.

பெரியவர் அசைந்து கொடுக்கவில்லை. அவரும் விடாக்கண்டர் என்று தெரிந்தது.

இதற்குள் நல்ல வேளையாக வெளியே எட்டிப் பார்த்த சுந்தரம், "அடேடே! வாங்கோ, வாங்கோ! இது என்ன இது, திடுதிப்பென்று ஒரு கடிதம்கூடப் போடாமல்! வீடு தெரிந்ததா!" என்று அடுக்கினான்.

ராமகிருஷ்ணன் புரிந்து கொண்டு விட்டான், சுந்தரத்தின் மாமனாரும் மைத்துனியும் என்று. அதற்குமேல் அவனுக்கு அங்கே இருக்கப் பிடிக்கவில்லை. ஏற்கெனவே அவன் சங்கோசி. அதுவும் சுந்தரராமனின் மாமனார், மைத்துனி, மனைவி இவர்கள் இருக்கும்போது, தானும் அந்த வீட்டில் ஒரு விருந்தாளியாக இருக்க அவன் விரும்பவில்லை.



அதனால்சுந்தரராமனைத் தனியாக அழைத்து, "நான் போய் விட்டு வருகிறேன்" என்றான். சுந்தரம் அவனை விடவில்லை. ஆயினும் வாதாடி ஒரு வழியாகச் சாப்பிடாமலேயே வெளியேறி விட்டான் ராமகிருஷ்ணன்.

அந்த வீட்டை விட்டு வெளியேறித் தன் அறைக்கு வந்துகொண்டிருந்த போது, ராமகிருஷ்ணனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இன்றைக்குக் கிடைக்க இருந்த விருந்துச் சாப்பாட்டை அந்த மனிதரும் பெண்ணும் கெடுத்து விட்டார்களே என்று நினைத்துக் கொண்டான்.

அன்று சாயந்திரம் ராமகிருஷ்ணனுக்குப் பொழுது போகவில்லை. கடைசியில் தியாகராய நகரில் இருந்த ஒரு சிநேகிதனைப் போய்ப் பார்த்து விட்டு வரலாம் என்று கிளம்பினான்.

பாண்டி பஜாரில் ராமகிருஷ்ணன் பஸ்ஸை விட்டு இறங்கி நடந்து கொண்டிருந்தபோது, "ஸார்!" என்ற அரை குறையான பூனு முனுப்பைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தவன் திடுக்கிட்டு நின்றான். அங்கே சுந்தரராமனின் மைத்துனி தனியாக நின்றுகொண்டிருந்ததைக் கண்டான்.

"ஏன், தனியாக நிற்கிறீர்கள்! அத்திம்பேர் வரவில்லையா!" என்று ராமகிருஷ்ணன் கேட்டான்.

"அத்திம்பேருடனும் அக்காவுடனும் தான் வந்தேன். அதோ அந்தக் கடை வாசலில் அவர்கள் என்னை விட்டுப் பிரிந்து போய் விட்டார்கள்!'

"எத்தனை நாழியாக!"

"கிட்டத் தட்ட அரை மணி இருக்கும்."

"அரை மணியாகவா இங்கே நின்று கொண்டிருக்கிறீர்கள்! ஒரு வேளை, நீங்கள் தனியாகத் திருவல்லிக்கேணிக்குத் திரும்பி விட்டீர்கள் என்று நினைத்துக் கொண்டு அவர்கள் அங்கே போய்த் தேடுகிறார்களோ, என்னவோ!"

பூமா கலவரம் நிறைந்த மனத்துடன் எதிரே நின்று கொண்டிருந்தாள்.

"சரி; நான் உங்களை வீட்டில் கொண்டு போய் விட்டு விடுகிறேன்" என்று சொல்லி ராமகிருஷ்ணன் அவளை அழைத்துக் கொண்டு பஸ் நிற்குமிடத்துக்குப் போனான். சுந்தரராமன் பூமாவைத் தேடிக் கொண்டு அலைகிறானோ என்று கடை வாசல்களில் பார்த்தான். ஆனால் மனத்துள் மட்டும் சுந்தர ராமன் கண்ணில் படக் கூடாது என்று வேண்டிக் கொண்டான்!

பஸ் நிற்குமிடத்துக்கு வந்ததும், "உங்கள் பெயர் என்ன!" என்று கேட்டான்.

"பூமா" என்றாள் அவள்.

சற்று நேரம் அங்கே மௌனம் நிலவிற்று. எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்த பூமாவை ராமகிருஷ்ணன் அவளுக்குத் தெரியாமல் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு, "இதற்கு முன் நீ சென்னைக்கு வந்ததில்லையா!" என்று கேட்டான்.

"இல்லை; அப்பாவுக்குக் கண்ணில் ஏதோ கோளாறு. கண்ணாடி போட்டுக் கொள்வதற்காக வந்திருக்கிறார். நானும் கூடவந்தேன்!"

பஸ் வந்தது. இருள் சூழ்ந்து கொண்டிருந்த வேளையாதலாலும், பக்கத்தில் முன்பின் பழக்கம் இல்லாத பெண் தன்னை நம்பி நின்று கொண்டிருந்ததாலும் ராமகிருஷ்ணனுக்குக் கண்களை மறைத்துக் கொண்டு வந்தது. அவன் பூமாவுடன் பஸ்ஸில் ஏறி ஆறணா சில்லறை எடுத்துக் கண்டக்டரிடம் கொடுத்து டிக்கட் வாங்கினான்.

பஸ்ஸில் பூமா பெண்கள் உட்காரும் இடத்தில் உட்கார்ந்து கொண்டாள். ராமகிருஷ்ணன் கைப்பிடியைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்தான். அவன் மனம் ஒரு நூதனமான இன்பத்தை அநுபவித்துக் கொண்டிருந்தது. தன்னையும் சுற்றுப் புறத்தையும் கிட்டத்தட்ட மறந்தே போய் விட்டான்.

'சென்டிரல்...! யாரும் இறங்கலியா! ரைட்!"

ராமகிருஷ்ணனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. கழுத்தை வளைத்து வெளியில் பார்த்தான். சென்டிரல்! தியாகராய நகரிலிருந்து திருவல்லிக்கேணிக்கு வருவதற்குச் சென்டிரல் பஸ்ஸில் ஏன் ஏறினான்! 'அட கடவுளே!' என்று நினைத்துக் கொண்டான். ஒரு பக்கம் சிரிப்பும் ஒரு பக்கம் பயமும் ஏற்பட்டது.

பஸ் பாரிஸ் கார்னரில் நின்றது. ராமகிருஷ்ணனும் பூமாவும் இறங்கினார்கள்.

"இதுவா திருவல்லிக்கேணி!" என்று கேட்டாள், அந்தக் கிராமத்துப் பெண் தன் கண்களை அகல விரித்து ஹைகோர்ட்டில் சுற்றிக் கொண்டிருந்த கலங்கரை விளக்கத்தின் வெளிச்சத்தையும் சைனா பஜார் கூட்டத்தையும் பார்த்தவாறு.


"ஆமாம்!" என்றான் ராமகிருஷ்ணன். அவளிடம் பொய் சொல்வது அவனுக்கு எவ்வளவு இன்பமாக இருந்தது!

"சாயங்காலம் போகும்போது இந்த மாதிரி இடம் எல்லாம் வரவில்லையே!" என்றாள் பூமா.

ராமகிருஷ்ணன் சிரித்துக் கொண்டான். பிறகு "இது திருவல்லிக்கேணி இல்லை. அதோ அந்த பஸ்ஸில் போகவேண்டும். திருவல்லிக்கேணிக்கு வா" என்று சொல்லி மெரினா கடற்கரை வழியாகத் திருவல்லிக்கேணிக்குப் போகும் மாடி பஸ்ஸை நோக்கி நடந்தான்.

ஒரு கணம் பூமாவின் முகத்தில் தாங்க இயலாத பீதியும் சந்தேகமும் தோன்றுவதை ராமகிருஷ்ணன் பார்த்தான். உள்ளத்தின் உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் அந்தக் களங்கம் இல்லாத முகக் கண்ணாடியை அவன் ஒரு கணம் பார்த்தான். பிறகு 'கவலைப்படாதே. உன்னை நான் எங்கேயும் அழைத்துக் கொண்டு போய் விடமாட்டேன். நேரே வீட்டில் கொண்டுபோய் விட்டு விடுகிறேன். உன் அத்திம்பேர் எனக்கு மிகவும் நெருங்கிய சிநேகிதர். என்னை நம்புகிறாய் அல்லவா!" என்றான் ராமகிருஷ்ணன்.

இருவரும் மாடி பஸ்ஸில் மாடியில் ஏறி ஜம்மென்று உட்கார்ந்து கொண்டார்கள்.



கவிச் சக்கரவர்த்தி கம்பர் அவதரித்த தேரழுந்தூரில் சென்ற மார்ச் மாதம் 20, 21 தேதிகளில் வெகு விமரிசையாகக் கம்பர் விழா கொண்டாடப் பட்டது. கம்பரின் திரு உருவப் படத்தையும், விழாவில் பங்கெடுத்துக் கொண்ட பிரமுகர்களையும் மேலே படத்தில் காணலாம்.



பஸ் கடற்கரைப் பாதையில் போய்க் கொண்டிருந்தது. கடற்கரையிலிருந்து இன்பமாகக் காற்று வீசிக் கொண்டிருந்தது. ஏழு வருஷங்களாக அந்தக் கடற்கரைக் காற்றை அநுபவித்திருந்த ராமகிருஷ்ணனுக்கு, அன்று அந்தக் காற்று ஒரு புது உணர்ச்சியையும் உற்சாகத்தையும் ஊட்டிற்று. சந்திரனின் கிரணங்கள் சமுத்திர ஜலத்தில் பட்டு அதை வெள்ளிப் பாளமாகச் செய்யும் விந்தையை அவன் பார்த்து, அந்த வெள்ளிப் பாளங்களுக்கு ஒப்பிடும் படியாகப் பூமாவின் கன்னங்கள் இருப்பதையும் நினைத்து அதிசயித்தான்.

"நீ படித்துக் கொண்டிருக்கிறாயா, இன்னும்!" என்று கேட்டுவிட்டு, "பூமா!" என்றும் சேர்த்துக் கொண்டான் ராமகிருஷ்ணன்.

"படிப்பை நிறுத்தியாகிவிட்டது, பத்தாவது வகுப்புடன்!" என்றாள் பூமா, கடலைப் பார்த்தபடி.

அதற்குமேல் பேசுவதற்கு ராமகிருஷ்ணனுக்கு வாயே எழும்பவில்லை; விஷயமே கிடைக்கவில்லை.

ராமகிருஷ்ணன் சுந்தரராமனின் வீட்டு வாசலுக்குப் போனபோது அங்கே சுந்தரராமனும் அவன் மனைவியும் மாமனாரும் கவலையுடன் நின்று கொண்டிருந்தார்கள். சுந்தரராமன், "எங்கே போய்விட்டாய், பூமா! உன்னைக் காணோம் என்றதும் உன் அக்கா தவித்துப் போய் விட்டாள். தனியாக வீட்டுக்கு வந்திருப்பாயாக்கும் என்று இங்கு வந்து பார்த்தால் இங்கேயும் காணோம்!" என்று பூமாவைப் பார்த்துச் சொல்லி விட்டு, "ரொம்ப நன்றி, ராமகிருஷ்ணா!" என்றான்.

அன்று இரவு சுந்தரராமன், அவன் மனைவி, மாமனார், பூமா உள்பட—எல்லோரும் கட்டாயப் படுத்தவே, ராமகிருஷ்ணன் அங்கேயே சாப்பிட்டு விட்டுத் தன் அறைக்கு வந்தான்.

மறுநாள் காலை சுந்தரராமன், மாமனாரின் சார்பாக ராமகிருஷ்ணனின் அறைக்கு வந்து, ராமகிருஷ்ணனின் ஜாதகத்தைப் பற்றிக் கேட்ட போது, ராமகிருஷ்ணன் பதில் பேசாமல் தகப்பனாரின் விலாசத்தை எழுதிக் கொடுத்தான்.

** ** **

"இப்பொழுது எழுந்திருக்கப் போகிறீர்களா, இல்லையா! இனிமேல் நீங்கள் எப்பொழுது குளித்து எப்பொழுது சாப்பிடுகிறது! எழுந்திருங்கள்!" என்று பூமா மறுபடியும் முன் பக்கத்து அறைக்கு வந்து இரைந்தாள்.

"அப்பப்பா! என்ன பூமா இப்படி விரட்டுகிறாயே! நான் போன வருஷம் நடந்ததை எல்லாம் நினைத்துக் கொண்டிருந்தேன். நீ மாத்திரம் அன்றைக்குப் பாண்டி பஜாரில் காணாமற் போகாமல் இருந்திருந்தால் எனக்கு உன்னுடன் சிறிது நேரம் தனிமையில் பழகச் சந்தர்ப்பம் கிடைத்திராது; நானும் இப்பொழுது ஆகியிருப்பது மாதிரி பைத்தியமாக ஆகி யிருந்திருக்க மாட்டேன்!" என்றான் ராமகிருஷ்ணன்.

"இன்றைக்கு ஒரு ரகசியம் சொல்லுகிறேன்; கேட்கிறீர்களா!" என்று பூமா ஒரு கள்ளச் சிரிப்புடன் கேட்டபோது, "என்ன அது! சொல்லு!" என்று ராமகிருஷ்ணன் பூமாவின் வாயைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்தான்.

"அன்றைக்கு நான் பாண்டி பஜாரில் உண்மையாகவே அத்திம்பேரை விட்டுப் பிரிந்து விட்டேன் என்றுதானே நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்!" என்று கேட்டாள் பூமா.

"ஆமாம்; பின்னே அது உண்மை இல்லையா!"

பூமா மறுபடியும் சிரித்தாள். "பாண்டி பஜாரில் தொலைந்து போய் விடுவதற்கு நான் என்ன, பச்சைக் குழந்தையா! அத்திம்பேர்தான் உங்களிடம் அப்படிச் சொல்லச் சொன்னார்! கேளுங்கள். அன்றைக்கு மத்தியானம் அத்திம்பேர் உங்கள் பெயரைப் பிரஸ்தாபித்து 'இவரை உனக்குப் பிடித்திருக்கிறதா!' என்று கேட்டார். பிடித்திருக்கிறதா, பிடிக்கவில்லையா என்று முதல் பார்வையிலேயே எப்படிச் சொல்வது என்று நான் அத்திம்பேரிடம் சொன்னேன். அன்றைக்குச் சாயங்காலம் நாங்கள் பாண்டி பஜாரில் போய்க் கொண்டிருந்த போது அத்திம்பேர் உங்களைப் பார்த்ததும், 'அதோ போகிறான்' என்று சொல்லி இந்தச் சூழ்ச்சி செய்தார். நான் உங்களை அணுகி, அத்திம்பேரை விட்டுப் பிரிந்து விட்டேன் என்று சொல்லி உங்களுடன் வீட்டுக்கு வர

வேண்டும் என்றும் அதற்குள் உங்களைப் பிடித்திருக்கிறதா இல்லையா என்று சொல்லிவிட வேண்டும் என்றும்!......"

ராமகிருஷ்ணனின் முகத்தில் அசடு வழிந்தது. ஆனாலும் சமாளித்துக் கொண்டு, "அன்றைக்குத் தியாகராய நகரிலிருந்து உன்னைத் திருவல்லிக்கேணிக்கு அழைத்துக் கொண்டு போவதற்குத் திருவல்லிக்கேணி பஸ்ஸில் ஏறாமல் பாரிஸ் கார்னர் பஸ்ஸில் ஏறிப் பிறகு கடற்கரை வழியாக உன்னை அழைத்துக் கொண்டு போனேனே, நினைவிருக்கிறதா! அதைப் பற்றி என்ன நினைக்கிறாய்!" என்று கேட்டான்.

"நினைக்கிறது என்ன! நான் உங்களுக்குப் பக்கத்தில் வந்து நின்றதும் உங்களுக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. அந்த அவசரத்தில் ஏதோ ஒரு பஸ்ஸில் ஏறி விட்டீர்கள்! உங்கள் கலவர மனம்தான் உங்கள் முகத்தில் எழுதி ஒட்டியிருந்ததே!" என்றாள் பூமா.

"அதெல்லாம் ஒன்றும் இல்லை; உன்னுடன் அதிக நேரம் பேச வேண்டும் என்பதற்காகத்தான் அப்படிச் சுற்று வழியில் அழைத்துக் கொண்டு போனேன்!" என்றான் ராமகிருஷ்ணன்.

"கீழே விழுந்தாலும், மீசையில் மண் ஒட்டவில்லை! சரி அப்படியே இருக்கட்டும். இப்பொழுது குளிக்க எழுந்திருங்கள்" என்று பூமா கெடுபிடி செய்யவே ராமகிருஷ்ணன் துண்டையும் சோப்புப் பெட்டியையும் எடுத்துக் கொண்டு, "இவளுடன் பேசி ஜயிக்க நம்மால் ஆகாது!" என்று முணு முணுத்தவாறே குளித்து வருவதற்காகப் பின்கட்டுக்குச் சென்றான்.

பட்டம் கொடுத்த தொல்லை!

'டாக்டர் சேகரன் எம். ஏ.' என்று போட்டிருந்த போர்டைக் கண் இமைச் சதைகளைச் சுருக்கிக் கையினால் வெளிச்சத்தை மறைத்துக் கொண்டு கண உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தாள் ஒரு கிழவி.

அச்சமயம் பங்களாவுக்குள்ளிருந்து வெளி வந்த வேலைக்காரன் "என்ன, பாட்டி! என்ன பார்க்கிறாய்!" என்று கேட்டான்.

"ஏன் அப்பா! டாக்டர் வீட்டில் இருக்கிறாரா!" என்று கேட்டாள் கிழவி அவனைப் பார்த்து.

"இருக்கிறார். என்ன வேண்டும்!"

"அவரைப் பார்க்க வேண்டும்!"

"என்ன வேலை!"

"என்ன வேலையாக இருந்தால் உனக்கென்ன! நான் அவரைப் பார்க்க முடியுமா, முடியாதா! சொல்லு!" என்றாள் கிழவி கடுமையான குரலில்.

வேலைக்காரன் தடிப்பாகப் பதில் சொல்லத்தான் வாய் எடுத்தான். ஆனால் அதற்குள் அப்பக்கம் எட்டிப் பார்த்த டாக்டர் சேகரன், "யார் அப்பா, அங்கே!" என்று கேட்டார்.

"ஒரு அம்மா வந்திருக்கிறாங்க. உங்களைப் பார்க்க வேண்டுமாம்!" என்றான் வேலைக்காரன்.

"உள்ளே வரச் சொல்லு!" என்று சொல்லி விட்டு டாக்டர் சேகரன் அறைக்குள் நுழைந்தார்.

தள்ளாடியவாறே கிழவி அவர் அறைக்குள் நுழைந்தாள். "யார் பாட்டியம்மா நீங்கள்!" என்று ஆதரவுடன் விசாரித்தார் டாக்டர்.

"குளத்தூர் கிட்டு இல்லை! அவனுக்கு அம்மாவைப் பெற்ற பாட்டி!"

"அப்படியா! என்ன விசேஷம்!"

"விசேஷம் என்ன! உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்!"

கிழவியாக இல்லாமல் வேறு யாராகவாவது இருந்தால், "பார்த்தாகி விட்டதோ, இல்லையோ! போய் வாருங்கள்!" என்றுதான் டாக்டர் பதில் சொல்லி யிருப்பார். ஆனால் வயதானவர்களிட முள்ள மரியாதை அவரை அப்படிக் கேட்க விடவில்லை. அதனால், "என்ன வேணும், உங்களுக்கு!" என்று கேட்டார்.

"ஒன்றும் இல்லை. கொஞ்ச நாட்களாகவே எனக்கு உடம்பு சரியில்லை. அதுதான் உங்களைப் பார்த்து......"

"அதற்கு என்னை எதற்குப் பார்க்க வேண்டும்!"

"டாக்டரை வேறு எதற்குப் பார்ப்பார்கள்! மருந்து வாங்கத்தான்!" என்றாள் கிழவி.

டாக்டர் சேகரனுக்குச் சிரிப்பு வந்தது. இருந்தாலும் அடக்கிக் கொண்டு, "சரி! உங்களுக்கு என்ன உடம்பு!" என்று கேட்டார்.

"அதை டாக்டருக்குப் படித்த நீங்கள் அல்லவா பார்த்துச் சொல்லணும்' என்னைக் கேட்டால்...!"

"உங்களுக்கு என்ன செய்கிறது, சொல்லுங்கள்! அப்புறம் நான் பார்க்கிறேன்!"

"வயசாகி விட்டதோ, இல்லையோ! தள்ளாமை வந்து விட்டது. கண் தெரியவில்லை. காது கேட்கவில்லை!" என்று அடுக்கிக் கொண்டு போனாள் கிழவி.

அதற்குமேலும் கிழவியைச் சோதிக்க மனம் இல்லாமல், "அதற்கு என்னிடம் வந்து என்ன பயன்! யாராவது நல்ல டாக்டரிடமல்லவா கொண்டு போய்க் காட்ட வேண்டும்!" என்றார்.

"ஆமாம். நீங்கள் என்ன! டாக்டர் இல்லையா!" என்று வெடுக்கென்று கேட்டாள் கிழவி.

"நான் டாக்டர்தான்! ஆனால் வைத்தியம் பண்ணுகிற டாக்டர் இல்லை!"

"வைத்தியம் பண்ணாத டாக்டர் என்ன டாக்டராம்!"

"பாட்டி! நான் வைத்தியம் பண்ணுகிற டாக்டருக்குப் படித்தவன் இல்லை. சங்கீதத்திலே டாக்டர் பட்டம் வாங்கி யிருக்கிறேன்!"

"அது தெரியாமலா நான் உங்களிடம் வந்தேன்!"

"அது தெரிந்துதான் வந்தீர்களா!"

"ஆமாம். கொஞ்ச நாட்களாகக் காதிலே பாடிக் கொண்டே இருக்கிறாற்போல 'ஙொய்' என்று ஏதோ ரீங்கார சப்தம் வந்து கொண்டிருக்கிறது. என்ன பண்ணியும் அது நிற்கவில்லை. அதனால் தான் உங்களிடம்......"

"என்னிடம் வந்து என்ன பிரயோசனம்! நான் சங்கீதத்தில் அல்லவா டாக்டர்!"

"ஆமாம். பல்லுக்கு டாக்டர், கண்ணுக்கு டாக்டர், காதுக்கு டாக்டர், மூக்குக்கு டாக்டர் என்றிருப்பது போலத்தானே நீங்களும் சங்கீதத்துக்கு டாக்டர்! என் காதில் வருகிற பாட்டுச் சப்தத்தை உங்களால் நிறுத்த முடியாதா! நிறுத்த முடியாதென்றால், இந்த டாக்டருக்குப் படித்து என்ன பிரயோசனம்!" என்று கேட்டாள் கிழவி.

டாக்டர் சேகரனுக்குத் தமது டாக்டர் பட்டம் எத்தகையது என்பதைக் கிழவிக்குப் புரியவைக்க வழியே தோன்றவில்லை. "நல்ல டாக்டர் பட்டம் வேண்டிக் கிடக்கிறது!" என்று தம்மைத் தாமே நொந்து கொண்டார்.

—அரு யாம்.


குழந்தை
அவைகளை
விரும்புகிறது
ஜே. பி. மங்காராமின்
NOURISHING
நரிஷிங் பிஸ்கட்ஸ்
NOURISHING
Biscuits
NOURISHING
நரிஷிங் பிஸ்கட்டுகளை
குழந்தைகள் ருசி பார்க்கட்
டும். அவைகளில் அதிக
மான மனங்கவர் மணமும்
இனிய ருசியும் ஆரோக்
கிய மளிக்கும் வைட்டமின்
களும் அடங்கி யிருப்ப
தால் அவைகளை அவன்
மிகவும் விரும்புகிறான்.
தரமேன்மை பெற்றது
வைட்டமின்கள் மிகுதியானது
ஜே. பி. மங்காராம் & கோ., குவாலியர்
NAS
M. 1

யோகாசனச் சிகிச்சை

✦ வி.என். குமாரசாமி

16. ஆஸ்துமா என்றால் என்ன ?

ஆஸ்துமா வரப் பல காரணங்கள் உண்டு. பொதுவாய் நாம் விடும் மூச்சு சரிவர விட முடியாமல் தடைப்படுவதே ஆஸ்துமா நோய் வருவதற்கு முக்கிய காரணமாகும்.

நாம் உயிர்வாழப் பிராணவாயு அவசியம். அப் பிராண வாயுவை நாம் மூக்கின் இரண்டு துவாரங்கள் வழியாக மூச்சாக உட்கொள்ளுகிறோம். பின் 'டிராசிய' எனும் பெரிய காற்றுக் குழாய் வழியாக உட் செல்லுகிறது. சிறிது உட்சென்றதும் இரண்டு கிளைகளாகப் பிரிகிறது. இவைகளுக்கு பிரான்கி காற்றுக் குழாய்க் கிளை என்று பெயர். இவை வலது நுரை சரலுக்கு ஒன்றும் இடது நுரைசரலுக்கு ஒன்றுமாகப் போகின்றன. பின் அதிலிருந்து மரக் கிளைகள் பிரிவதுபோன்று பல சிறிய கிளைகளாக, பிரான்கியாலஸ் உபகிளைகளாகப் பிரிகின்றன. அப்படிப் பிரியும் உப கிளைகளின் கனம் சுமாராக ஒரு அங்குலத்தில் நாற்பதில் ஒரு பங்கு இருக்கும். இக்குழாய்களின் முடிவில் சிறு காற்றுப் பைகள் இருக்கின்றன. இக்காற்றுப் பைகளைச் சுற்றிப் பொடி ரத்த நாளங்கள் பின்னியிருக்கின்றன. நாம் சுவாசிக்கும் காற்று பெரிய காற்றுக் குழாயின் வழியே வந்து பின் கிளைக் காற்றுக் குழாயின் வழியே பிரவேசித்து. பின் உப கிளைகளின் வழியே பரவிக் கடைசியில் இக்காற்றுப் பைகளுக்கு வருகிறது

இவ்வாறு வந்தடையும் பிராண வாயுவினால் கெட்ட ரத்தம் சுத்தமாகி, அதாவது கரியமலவாயு பிரிக்கப்பட்டுப் பிராணவாயு ரத்தத்துடன் கலந்து சுத்தமாக்கப்பட்டு இருதயத்தில் சரீரம் முழுதும் அடித்து அனுப்பப்படுகிறது. பிரிக்கப்பட்ட கரியமலவாயு உபகாற்றுக் குழாய்களிலிருந்து கிளை காற்றுக் குழாய்களுக்கும் பின் பெரிய காற்றுக் குழாய் டிராசியாவுக்கும் வந்து சேர்ந்து மூச்சாக வெளியில் போகிறது.

நாம் சுலபமாய் மூச்சை வாங்கவும் விடவும் செய்வதற்காகச் சுவாசக் குழாய்களின் உள் சுவரைச் சுற்றித் தசைகளால் ஆன சவ்வு படர்ந்து இருக்கிறது. இந்தச் சவ்வுச் சுவரில் மிகப் பொடிய சுரப்புக் கிண்ணங்கள் பதிந்திருக்கின்றன. இச் சுரப்பிகள் காற்றுக் குழாய்களின் வழி உலர்ந்து வறண்டு விடாமல் பாதுகாக்கின்றன. இம்மாதிரி இருப்பதனால்தான் நாம் சௌகரியமாய் மூச்சை விடவும் இழுக்கவும் முடிகிறது. இந்தத் தசைச் சவ்வுகளை இயக்க இரண்டுவித நரம்புச் சக்திகள் வேலை செய்கின்றன. வேகஸ் எனும் நரம்புச் சக்தி இத் தசைச் சவ்வுகளைத் தூண்டச் செய்கிறது. சிம்பதடிக் என்னும் நரம்புச் சக்தி தசைச் சவ்வுகளைத் தளர்த்துகின்றன. இம்மாதிரி இரண்டும் வேலை செய்வதனால்தான் மூச்சை வாங்கவும் விடவும் செய்கிறது. இந்த வேகஸ் நரம்பின் ஆட்சி மிக்க வல்லமை பொருந்தியது. இந்த நரம்பு மூளையின் பாகமாகிய மெடுல்லாவில் வந்து முடிகிறது. இந்த பாகத்துக்கு ரெஸ்பிரேடரி சென்டர் என்று பெயர். இதே நரம்பு மற்றும் இருதயம், இரைப்பை, குடல்கள் இவைகளுக்கும் செல்லுகிறது. இந்த இடத்தில் இதைப் பற்றி இவ்வளவு தெரிந்து கொண்டால் போதும்.



"என்ன எல்லோரும் ஆகாசத்தைப் பார்த்து உட்கார்ந்திருக்கிறீர்கள்? உங்க நாடகத்தை எப்போ போடுவதாக இருக்கிறீர்கள்?"

"நாடகம் என்னமோ தயாராக இருக்குங்க. ஒரு நல்ல நடிகை பிறந்து வருவதற்காகத்தான் காத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறோம்!"

நுரையீரல், மார்பு எலும்புகள், பக்கத்துக்கு ஒன்றாக இருக்கிறது என்பது தெரிய வேண்டும்.

நுரையீரலானது கடல் பஞ்சைப்போல மிருதுவான தசைகளால் ஆனவை. இவைகளை மெல்லியதாகப் பரப்பினால் முப்பத்தோரு சதுர அடி ஆகுமாம். ஆனால் இது கொத்தாக இரண்டு பக்கங்களில் அமைந்திருக்கின்றன. இந்த நுரை யீரல்களைச் சுற்றி ஒரு தசைப் பை இருக்கிறது. அந்தப் பைக்குமேல் உறை போட்டாற் போல் மற்றொரு தசைப் பை இருக்கிறது.

இந்தப் பைகளுக்கு 'ப்ளூரா' என்று பெயர். உள் பை நுரையீரலை ஒட்டியிருக்கிறது. வெளிப் பை மார்பெலும்பை ஒட்டியிருக்கிறது. இந்த இரண்டு பைகளினிடையே ஒருவித திரவம் இருக்கிறது நுரையீரல் விரியும்போது இரண்டு பைகளும் ஒட்டாமலும் உரசாமலும் இருப்பதற்காக இந்தத் திரவம் வழுவழுப்பாக்கி உதவிக் கொண்டிருக்கிறது.

நாம் மூச்சை வாங்கும்போதும் விடும்போதும் நுரை ஈரல்களும் அதைச் சார்ந்த பாகங்களும் என்ன ஆகின்றன என்று புளூரொசென்ட் திரை மூலமாகப் பார்த்திருக்கிறார்கள். மூச்சை வாங்கும்போது நுரை ஈரல் விரிவடைய மார்பு எலும்புகள் விரிவடைகிறது. விதானம் – எனும் தசைத் தடுப்பு நுரை ஈரலை விட்டுக் கீழே நோக்கிச் செல்லுகிறது. (விதானம் என்பது நுரை ஈரல்களுக்குக் கீழே இருக்கும் ஒரு தசைத் தடுப்பு. இது வயிற்றுப் பாகத்தையும் மார்பு பாகத்தையும் பிரிக்கிறது.) அப்படிச் செல்லும் விதானம் வயிற்றிலுள்ள உறுப்புக்களை அழுத்துகிறது. அதனால் வயிற்று உறுப்புகளுக்குப் பயிற்சி ஏற்படுகிறது. மூச்சை விடும்போது விரிந்த நுரை யீரல் சுருங்கிக் குறுகலாகிறது. ஓய்வும் பெறுகிறது. விதானம் மேல் எழும்புகிறது. அப்போது வயிற்று உறுப்புகள் ஓய்வு பெறுகின்றன. மூச்சை வாங்கும்போது தூண்டப்பட்ட தசைகள் ஓய்வு பெறுகின்றன.

நாம் மூச்சு வாங்கும்போது காற்றுக் குழாய்கள் காற்றால் நிறைகின்றன. மூச்சை விடும்போது காலி ஆகிறது. இம்மாதிரி சாதாரணமாய் எல்லோருக்கும் நடைபெறுகிறது.

ஆஸ்துமா நோயாளிகளுக்குச் சாதாரணமாய் மேற்சொன்னபடி நடவாமல் தடைப்படுகிறது. காற்றுக் குழாய்களிலுள்ள தசைகள் பல காரணங்களால் ஆஸ்துமாக்காரர்களுக்கு வீங்கிக் காற்றுக் குழாயின் வழி சுருங்கிவிடுகிறது. அதனால் காற்று இழுக்கும்போது வேகமாய் இழுக்க வேண்டியிருக்கிறது. மூச்சை விடும்போது காற்றுக் குழாய் வழி சுருங்கி இருப்பதால் தாராளமாய் மூச்சுவிட முடியாமல் தடை ஏற்படுகிறது. அப்போது மூச்சுத் திணறல் ஏற்படுகிறது. சில காற்றுக் குழாய்களில் காற்றுப் புக முடியாமலும் போய் விடும். சில காற்றுப் பைகளில் காற்று தங்கியும் விடுவதுண்டு.

எனவே, நுரை ஈரலுக்குப் போதுமான காற்று கிடைக்காததினால் ஆஸ்துமா நோயாளி மூச்சுத் திணறத் துன்பப் படுவதோடல்லாமல் அதனால் மற்றும் பல கெடுதல்களும் உடலுக்குச் சம்பவிக்கின்றன. உடலெங்கும் சென்று உழைத்து வரும் நல்ல இரத்தம் கெட்ட இரத்தமாக மாறிச் சுத்தமாகவும், மறுபடி வேண்டிய பிராண வாயுவைப் பெறவும் நுரைஈரலுக்கு வருகிறது. ஆனால் ஆஸ்துமாக்காரர்களால் அப்படி வரும் கெட்ட இரத்தத்தைச் சரியானபடி சுத்தமாக்கவோ மறுபடி போதிய அளவு பிராண வாயுவை அளிக்கவோ முடிவதில்லை. இரத்தம் சுத்தமாகப் பிராண வாயு வேண்டும். அதற்கு நல்ல மூச்சு வாங்கிப் பிராண வாயுவால் நுரைஈரலை நிரப்ப வேண்டும். அதுதான் ஆஸ்துமாக்காரர்களால் முடியாததாயிற்றே! ஏதோ முடிந்த மட்டும் சிறிது பிராண வாயுவைக் கஷ்டப் பட்டுச் சுவாசித்து உள்ளே அனுப்புகிறார்கள். அதனால் ஏதோ சிறிது ரத்தம் சுத்தமாகிச் சிறிது பிராண வாயுவைப் பெற்று இரத்தம் இருதயத்துக்குப் போகிறது. இருதயம் அந்த அரைகுறையாகச் சுத்தமான இரத்தத்தை உடல் பூராவும் அடித்துப் பாய்ச்சுகிறது. இவ்வாறு பல தடவை பல மணி நேரம் நடந்தால் என்ன ஆகும்! முதலில் இருதயம் என்ன ஆகும்! சிறு நீரைப் பிரிக்கும் குண்டிக்காய்களின் கதி என்ன! சுத்த இரத்தத்திலேயே உயிர் வாழ வேண்டியிருக்கிற மற்றும் ஏனைய அவயவங்களின் கதி எப்படி! இதை நினைத்துப் பார்த்தாலே மனம் பதறுகிறது. இந்த அவயவங்களெல்லாம் சீர் கெட வேறு என்ன வேண்டும்! ஆஸ்துமாக்காரர்களைச் சற்று நன்றாய்ச் சோதித்தால் நன்கு தெரியும். நல்ல இரத்தம் கிடைக்காமல் முகம் வெளுத்திருக்கும் உடலும் வெளுத்து விடும். நரம்புகளுக்குச் சக்தியிருக்காது. சோர்வு கொள்ளும். இருதய வலி உண்டாகும். சிறு நீரைப் பிரிக்கும் குண்டிக் காய்களும் சில நாட்களில் சோர்வு கொள்ளும். உடம்பில் அரிப்பு ஏற்படும். எக்ஸிமா என்னும் புண்ணும் ஏற்படும். சீக்கிரம் ஆறாது. நல்ல இரத்தம் இருந்தால்தானே அவை மறையும்!

பிராண வாயு சரிவரக் கிடைக்காததினால் இரத்தம் சுத்தம் அடையாமல் இத்தனையும், உண்டாகிறது என்றால் இரத்தத்திலிருந்து பிரிக்கப் பட்ட கரியமல வாயுவும் சரிவர வெளியில் செல்ல முடியாமல், காற்றுக் குழாயின் சந்து குறுகலாய்த் தடை வேறு ஏற்பட்டால் ஆஸ்துமாவின் ஜீவன் என்ன பாடுபடும்! இதற்குத்தான் ஆஸ்துமா என்றால் அதன் நோயை அநுபவித்தவர்கள் "ஐயோ, ஆஸ்துமா வந்து விடப் போகிறதே!" என்று அஞ்சுகிறார்கள்.

சிலர் சில மணி நேரம் இம்மாதிரி கஷ்டப் படுவார்கள். சிலர் சில நாள் கஷ்டப்படுவார்கள். சிலர் இரவும் பகலும் பல கஷ்டப் படுவார்கள். இது மிக முற்றிய நிலை. இந்தச் சமயத்தில் ஆகாரம் செல்லாது. ஆகாரத்தின் மேல் அவர்களுக்கு இச்சை தோன்றாது. தூக்கம் வராது.

இதைத் தவிர ஆஸ்துமாக்காரர்களுக்கு இருமலும் இருக்கும். இந்த இருமல் நுரை ஈரலில் போதிய பிராண வாயு புகாததினாலும், கரியமல வாயு வெளிப் படாததினாலும் மற்றும் அவர்களுக்குப் பிடிக்காத வஸ்துவின் வாசனையினாலும் காற்றுக் குழாய்ச் சுவர்கள் உறுஞ்சுச் சளியைக் கக்கும். அச்சளி சிலருக்குக் கெட்டியாகவும் கட்டியிருக்கும். இச் சளியை அகற்றவும் போதிய பிராண வாயுவை உட்கொள்ளவும் இயற்கை இருமலை அளித்திருக்கிறது. இருமுபவர்களைக் கவனித்தால் தெரியும். முதலில் பிராண வாயுவை வாய் மூலமாக இழுத்த பின் இருமுவார்கள். பிராண வாயு உட்செல்லச் செல்ல சளி உடைந்து இருமலைக் கொண்டு வெளியேற முயற்சிக்கின்றன. எனவே இருமுவது நல்லதுதான். இருக்கும் சளி கரைந்து வரும். ஆனால் எத்தனை நேரம் இருமுவது! சிலருக்கு இருமி இருமி ஆயாசம் வந்து விடும். சிலருக்கு மயக்கமும் உண்டாகும். சிலர் என்னதான் இருமினாலும் வறட்டு இருமல்தான் இருக்குமே தவிர சளி ஒரு துளியும் வராது. சிலர் இருமுவது காது கொண்டு கேட்கச் சகிக்காது. மத்தளப் பாறை மேல் அடித்தாற் போல் கேட்கும். இதைக் கேட்கும் நமக்கே இம்மாதிரி இருந்தால், அப்படி இருமுபவர்களுக்கு எப்படி இருக்கும்! தேவர்களும் பூலோக இன்பங்களை அநுபவிக்க-மானிடர்களாய்ப் பிறக்க ஆசைப் படுவார்களாம். ஆனால் மானிடராய்ப் பிறந்து இன்பங்களை அநுபவிக்கக் கொடுத்து வைக்கா விட்டாலும், துன்பங்கள் இல்லாமல் வாழ்ந்தால் போதும் என்று தோன்றுகிறது. அத்துன்பங்களில் மிகக் கொடியது இந்த ஆஸ்துமா எனும் மாபெரும் நோய். (தொடரும்)

தில்லித் தபால்

படே குலாம் அலிகான் பாட்டு சம்பந்தமாய்க் கொஞ்சம் நாளைக்கு முன் "கல்கி"யில் வெளியான கடிதம் பலபேருக்கு உத்ஸாகமும் சிலருக்குக் கொஞ்சம் கோபமும் உண்டாக்கிற்று. அந்த சிலர், சென்ற வாரம் திருவாவடுதுறை ராஜரத்தினம் அவர்களுக்குப் புது டில்லிக்காரர்கள் அளித்த மரியாதையைப் பற்றிக் கேள்விப்பட்டார்களானால், மேற்படி கடிதத்தின் அவசியத்தை நன்கு உணர்வார்கள்.

கல்வி இலாகா துவங்கியிருக்கும் சங்கீத நாடக அகாடமியின் சார்பாக ஏற்பாடாகியிருந்த வருடாந்திர வைபவம் செங்கோட்டையில் சென்ற வாரம் நடந்தது. ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளையவர்களின் நாதஸ்வரக் கச்சேரி அதில் ஒரு நிகழ்ச்சி. மிதவாதத்துக்குப் பேர்போன, 'ஸ்டேட்ஸ்மன்' பத்திரிகை இந் நிகழ்ச்சியைப் பற்றி மிதமாக என்ன சொல்லிற்றென்பதைத் தயவுசெய்து கேளுங்கள் :—

"Sri Rajarathnam Pillai was virtually clapped off the stage; perhaps this is the law of the Jungle referred to by Dr. Keskar."

பத்திரிகைத் தமிழ் நடையில் "கைதட்டிக் கீழே இறக்கி விட்டார்கள்" என்று சொல்லலாம்.

கேஸ்கர் அவர்கள் கர்னாடக சங்கீதத்தை வானளாவப் புகழ்ந்து பேசியது இங்கே சில பத்திரிகைகளுக்குப் பிடிக்கவில்லை. அவரைக் கிண்டல் செய்து தலையங்கங்கள் எழுதின. நம் நாட்டுக்கு வரும் வட இந்திய வித்வான்களைப் பொன்னாடை போர்த்துகிறோம். ஆனால் நமது வித்வான்களை இங்கு பன்னாடையாய்ப் பாவிக்கிறார்கள்.

இதற்கு ஈடு செய்வதுபோல் பத்திரிகை நிருபர்கள் எல்லாம் ஒருங்குகூடி ஸ்ரீ ராஜரத்தினம் அவர்களின் நாதஸ்வரக் கச்சேரி ஒன்று ஏற்பாடு செய்தனர். அன்று அவர் வாசித்த வாசிப்பு தில்லியையே நாத வெள்ளத்தில் மூழ்கடித்து விட்டது. அன்று கனராகமாக அமைந்த தோடி, சுந்தர வடிவம் எடுத்து, நர்த்தனம் செய்து விட்டுப் போய் விட்டது. ராகமாலிகைப் பல்லவிகளில் பல சிறு ராகங்கள் சேடிகள் போலக் கூட வந்து கோஷ்டி நடனம் செய்தன. இரு பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் "இசைச் சிகரம்" என்ற விருதுபொறிக்கப்பட்ட கேடயம் ஒன்றை டாக்டர் கேஸ்கரைக் கொண்டு வழங்கச் செய்தார்கள். ஸ்ரீ ராஜரத்தினம் அவர்களின் அன்றைய நாதஸ்வரக் கச்சேரியும் சிகரக் கச்சேரியாய் அமைந்தது.

அரியக்குடி, பாப்பா, மணி கோஷ்டியார் சுமார் ஐந்து மணி நேரம் நாத அலைகளை வீசினார்கள். அய்யங்காருக்கு வயது 66 ஆகிறது. சாரீர கனம் துளிக்கூடக் குறையவில்லை. ஊரின் சீதோஷ்ணமும், புதிய தண்ணீரும் அய்யங்காரின் சாரீரத்தை ரொம்பவும் சோதித்திருந்தன. ஆனால் அதை மடக்கி அடக்கி ஆண்டு ஜமாய்த்துத் தள்ளி விட்டார். ஒரே கச்சேரியில் மூன்று கன ராகங்களை விஸ்தாரமாகக் கையாண்டு, சம்பிரதாயமாய்ப் பாடினார். காம்போதி, கல்யாணி, தோடி மூன்று கன ராகங்களும் சௌந்தரிய தேவதைகளாக என்முன் இன்னும் காட்சியளிக்கின்றன. ஏழு ஸ்வரங்களில் முக்கியமான இரண்டும் பக்க வாத்தியமாய் அமைந்து விட்டால் கச்சேரி சோபிப்பதற்குக் கேட்க வேண்டுமா! 'பா'வையும் 'மா'வையும் சொல்லுகிறேன். (பாப்பாவும், பாலக்காட்டு மணியும்) மணி இரண்டு தனி ஆவர்த்தம் வாசித்தார். இரண்டும் மணியான ஆவர்த்தங்கள். நாங்கள் ஏதோ புண்ணியம் செய்திருக்கிறோம். இல்லா விட்டால் இரண்டு பெரிய கச்சேரிகள் ஒரே சமயத்தில் கிட்டாது.

சங்கீத சபைக்காரர்களுக்கு ஒரு சிறிய விண்ணப்பம். சபை உருப்பட வேண்டுமென்றால் (பம்பாய், கல்கத்தா முதலிய இடங்கள்போல்) எல்லாரையும் பாரபட்சமில்லாமல் நடத்த வேண்டும். பணம் கொடுத்து ஒருவர் டிக்கட் வாங்கிவிட்டால் அவர் ஒரு சீட்டுக்கு உரியவராகி விடுகிறார். தாமதித்து வரும் பெரிய மனிதர்களுக்கு இடம் தருவதற்காக அவரை எழுந்திருக்கச் சொல்வது ஜனநாயகத்துக்கு முரண்பாடு. இந்தப் புதுதில்லி 'ஸ்னாபரி'க்கு ஒரு முழுக்குப் போட்டு விட்டு நல்ல முறையில் பொதுக் காரியங்களைக் கவனிக்க வேண்டும்.

பெரிய மனிதருக்கு அசைந்து கொடுக்காத அந்த நபரைப் பாராட்டுகிறேன். போதாக்குறைக்கு நல்ல சங்கதிகள் போட்டுக் கொண்டிருக்கும்போது தான் "படே"க்கள் வருகிறார்கள். நிர்வாகக் கும்பலில் ஒரே பரபரப்பு. சபையில் சலசலப்பு. எரிச்சல் பற்றிக் கொண்டு வருகிறது. அந்த "படே" பாதிக் கச்சேரியில் எழுந்து போகிறார். மறுபடியும் நிர்வாகக் கும்பல் பின் தொடரல்;—உட்கார்ந்திருப்பவர்கள் தலையையெல்லாம் மிதித்துக்கொண்டு. அதே சலசலப்பு அதே எரிச்சல் வரும் அநுபவம். இவர்களை எல்லாம் இந்தப் பெரிய மனிதப் பிரமையிலிருந்து கடவுள் காப்பாற்றட்டும்! — ஒரு நிருபர்.





சென்னை தியாகராய நகரிலுள்ள ஸ்ரீ சாரதா வித்யாலய பெண்கள் உயர் நிலைப் பள்ளியின் புதுக் கட்டிடத்தை அண்ணாமலை சர்வகலாசாலை உப அத்யக்ஷகர் டாக்டர் ஸி. பி. ராமசாமி அய்யர் ஏப்ரல்மீ 4உ ஞாயிற்றுக்கிழமை யன்று திறந்து வைத்தார். இப் பள்ளியின் திறமையான நிர்வாகத்துக்கும், மூன்று லட்ச ரூபாய் பெறுமானமுள்ள இவ்வளவு அழகிய கட்டிடத்தைக் கட்டி முடிக்கும் பொறுப்புக்கும் காரணஸ்தர் இப் பள்ளியின் காரியதரிசி டாக்டர் ராமகிருஷ்ணன் ஆவார். இவருடைய அரும் சேவையைப் பாராட்டி, பள்ளியின் ஆசிரியைமார்கள் வழங்கிய டாக்டர் ராமகிருஷ்ணன் உருவப் படத்தைச் சென்னை சர்வகலாசாலை உப அத்யக்ஷகர் டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியார் திறந்து வைத்து அவர் இனிய பண்புகளையும், செயல் ஆற்றும் திறமையையும் வியந்து பேசினார். ஸ்ரீ சாரதா வித்யாலயப் புதுக் கட்டிடத்தையும், அதன் திறப்பு விழாக் காட்சிகள் சிலவற்றையும் இப் பக்கத்தில் காணலாம்.



போட்டோ: எம். டி. கணேஷ்-



தேன்மொழியாள்

11

மாணிக்கம், சுந்தரி, குடியானவர் மூவரும் ஒரு கணம் மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள். தூரத்தில் கிராமத்துக் குழந்தைகள் குதித்து விளையாடும் சத்தம் கேட்டது. கையில் இருந்த கடிதத்தைப் பார்த்து ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தாள் சுந்தரி. கொஞ்சம் கொஞ்சமாக அக்கிராமம் முழுவதும் அந்திமாலை பரவி வந்தது. அது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. செந்நிறமான சூரிய கிரணங்கள் கிராமத்துத் தெருக்களில் சாய்வாக விழுந்து கொண்டிருந்தன. பறவைகளின் குரல்கள் மெதுவாக அடங்கி ஒடுங்கின. கிராமத்தை இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. தெருக்கோடியில் பசுக்கள் "அம்மா" என்று கத்தும் சத்தம் கேட்டது.

"அது என்ன கடிதம்!" என்று சற்று ஆவலுடன் கேட்டான் மாணிக்கம்.

"இனியன் எழுதியிருக்கிறார். அவர் கல்லூரிப் படிப்பை விட்டு விட முடிவு செய்து விட்டாராம். வாழ்க்கைக்கு உபயோகமில்லாத படிப்பைப் படித்துக் கொண்டு அருமையான இளமையை வீணாக்குவதைவிட கிராமத்தில் தங்கி விவசாயத்தில் ஈடுபடப் போகிறாராம். என்னையும் உன்னையும் சித்தமல்லிக் கிராமத்துக்கு வரச் சொல்லியிருக்கிறார். அத்துடன் இன்னொரு விஷயத்தையும் எழுதியிருக்கிறார். தன்னிடம் காதல் கொண்டுள்ள ஒரு ஏழைப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாராம். அந்தப் பெண்ணை நான் நேரில் பார்க்க வேண்டுமாம்" என்றாள் சுந்தரி.

மாணிக்கத்தின் கண் முன்பு இனியன் மேற்கொண்ட சீர்திருத்தப் பாதை புலனாயிற்று. அவன் ஆரம்பித்திருக்கும் புரட்சிகரமான செயல்கள் அந்த இருளிலும் பிரகாசமாகச் சுடர் விட்டு மின்னுவது போல அவன் உணர்ந்தான்.

"சென்னைக்குப் போனவுடன் சித்தமல்லிக்குப் புறப்பட வேண்டியதுதான்" என்றான் மாணிக்கம்.

"ஆமாம்" என்று சொல்லுவதுபோல் தலையை மெதுவாக அசைத்தாள் சுந்தரி.

அவர்கள் பேசிக்கொண்டிருந்ததைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த குடியானவர் "யார் அந்த இனியன்!" என்று கேட்டார்.

"அவர் மிகப் பெரிய பண்ணையார் குடும்பத்தைச் சேர்ந்தவர். வறுமையாலும், அநீதியாலும் நசுக்கப்படும் ஜனங்களுக்காகப் பாடுபடுவர். சாதியின் பெயரால் செய்யும் சதிகளை எதிர்த்துப் போராடும் வீரர். தமக்கென்று யாதொரு லாபமும் தேடாமல் மக்களின் நல்வாழ்வுக்காக, கிராம மக்களின் உயர்வுக்காகப் பாடுபடும் உத்தமர். அருமையான குணம் படைத்த வாலிபர். மிக அழகாக இருப்பார். அவர் மனம் விட்டுச் சிரிப்பதைப் பார்த்தாலே போதும். கவலையெல்லாம் தீரும். அவர்தான் எங்களைக்கூட இந்தத் திருப்பணி செய்வதற்கு மாற்றியவர்" என்றாள்.

இனியனைப் பற்றிப் பேசும்போது சுந்தரிக்குப் பெருமை தாங்க முடியவில்லை. மகாவீரர் ஒருவரைச் சிருஷ்டி செய்து அந்த வீரரைத் தன் சொற்களால் வர்ணிக்க வேண்டும் என்று தோன்றிற்று. அவர் கிராமத்தில் எப்படியெல்லாம் மக்களுக்குப் பாடுபடுவார் என்ற நேர்த்தியான காட்சி ஒன்றைச் சித்திரிக்க வேண்டும் என்று அவள் உள்ளத்தில் எண்ணம் உதித்தது. ஆகவேதான் இனியனைப் பற்றி எண்ணிய விஷயங்களை ஒன்றாகச் சேர்த்துச் சொல்ல வேண்டும் என்ற ஆசையில் சொன்னாள்.

"இனியனைப் போல் எத்தனை எத்தனையோ வாலிபர்கள் தோன்றியிருக்கிறார்கள். இன்னும் அநேகர் தோன்றப் போகிறார்கள். அவர்கள் எல்லாரும் சுதந்திரம் பெற்ற நமது நாட்டில் சோஷலிஸம் வளரப் பாடுபடுவார்கள். ஜனங்களுக்குள் சமதர்மம் நிலவுவதற்காகவும் சத்தியத்துக்காகவும் தங்கள் வாழ்நாள் முழுவதும் போராடிக் கொண்டே இருப்பார்கள்."

இவ்வாறு தன் மனத்தில் தோன்றியதை எல்லாம் சுந்தரி சொல்லிக் கொண்டே இருந்தாள்.

இதைக் கேட்ட அந்தக் கிராமத்துக் குடியானவர் மகிழ்ந்து போனார்.

சுந்தரி பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்திருந்தும் இப்படி கிராம மக்கள் மத்தியில் வேலை செய்ய வந்து விட்டதைச் சொல்லிப் பாராட்டினார். இனியனின் திறமையை எண்ணி வியந்தார். அவன் சேவையைப் புகழ்ந்து பேசினார். அவர் பேச்சு மடை திறந்தாற்போல் பெருகி வந்தது. சொற்கள் தெளிவாகத் தொனித்தன. அவருடைய துடிப்பும், தெளிவான பேச்சும் மாணிக்கத்துக்கும் சுந்தரிக்கும் உவப்பை அளித்தன.

சுந்தரி அந்தக் குடியானவரைப் பார்த்துப் பதில் சொன்னாள். தான் பெரிய பணக்காரி அல்லவென்றும் ஏழையாகத்தான் பிறந்தேன் என்றும், அதிலும் இக்கிராமத்தில் உங்கள் மத்தியிலேதான் பிறந்தேன் என்றும் தெரிவித்தாள்.

குடியானவர் மீண்டும் ஒரு முறை சுந்தரியையும் மாணிக்கத்தையும் அன்போடு கூர்ந்து பார்த்துவிட்டு இன்பமாகச் சிரித்தார்.



மாணிக்கம் குடியானவரின் நல்ல மனசைப் பாராட்டிப் பேசினான். கிராமத்தில் இருக்கும் மனிதர்களில் அவரைப் போன்ற மனிதரைப் பார்த்ததில்லை என்று வியந்தான். தான் பல நூல்களில் படித்துத் தெரிந்து கொள்ள முடியாத விஷயங்களை யெல்லாம் அவருடன் பழகிய சில நாட்களில் தெரிந்து கொண்டதாகச் சொன்னான்.

குடியானவர் திருப்தி நிறைந்த மனத்துடன் அவர்களைப் பார்த்தார். "நீங்கள் இருவரும் கொஞ்ச நாட்களில் இந்தக் கிராமத்தையே புதுக் கிராமமாக மாற்றி அமைத்து விட்டீர்கள். ஊர் மாத்திரம் அல்ல; இங்குள்ள மனிதர்கள் கூட மாறி விட்டார்கள்" என்றார்.

"அப்படிச் சொல்லாதீர்கள். நீங்கள் தான் இதை மாற்றி இருக்கிறீர்கள். உங்களுடைய செயலால்தான் இந்தக் கிராமமே மாறியது. எங்களையே இச்சேவையில் ஈடுபட நீங்கள்தானே மாற்றி யிருக்கிறீர்கள்!" என்றாள் சுந்தரி.

"ஆமாம்!" என்பது போலப் பலமாகத் தலையை ஆட்டினான் மாணிக்கம்.

குடியானவருக்கு ஒரே உற்சாகமாக இருந்தது. அவர் முகம் மலர்ந்திருந்தது. அவர் உணர்ச்சியு டன் பல விஷயங்களைப்பற்றிப் பேச ஆரம்பித்தார்.

"அது இருக்கட்டும். இந்த உலகத்தைப் பார்த்தீர்களா!" என்றார்.

"உலகத்துக்கு என்ன!" என்றான் மாணிக்கம்.

"உலகத்தைப் புரிந்து கொள்ளவே முடிய வில்லை. நல்லவர்கள் எத்தனையோ பேர் இருக்கத் தான் செய்கிறார்கள் அவர்கள் நல்ல காரியங் களுக்கு உதவி செய்வதில்லை. பொதுவாக நம் மிடம் பணம் இருந்தால் அதை வீணான வழியில் கரைப்பதற்குக் கூட்டம் கூடுவது போல், பணக் காரர்களையும் அவர்கள் பணத்தையும் நல்ல வழி யில் செலவு செய்வதற்கு அவர்களைச் சுற்றி யாரும் நெருங்குவதில்லை. முப்பது வருஷத்துக்கு மேலாக நான் மக்களோடு பழகி இருக்கிறேன். எனக்குத் தெரியும், தருமம் செய்பவர்களைப் பற்றி எல்லாம். அவர்கள் ஏழைகளுக்கு இரக்கப்பட்டுத் தருமம் செய்வதில்லை. தருமம் செய்தால் மேலே சொர்க்க வாசல் திறந்து இருக்கும் என்று எண்ணிக் கொடுக் கிறார்கள். இன்னும் சிலர் அதனால் கிடைக்கும் புகழைக் கொண்டு மேலும் பணம் திரட்டுவதற் காகக் கொடுக்கிறார்கள். வயிறார உண்பவர்களும், பட்டினி கிடப்பவர்களும் ஒருவரை ஒருவர் நேசிக்க முடியாது. அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளக்கூட முடியாது. பணம் படைத் தவன் பணமில்லாத ஏழையை ஏதோ தூசிக்குச் சமான மாகத்தான் நினைக்கிறான்" என்றார்

எரிச்சல், கோபம் இரண்டும் சேர்ந்து குடியான வருக்கு ஆவேசமே வந்து விட்டது. அவர்





பெரிய உதடுகள் துடித்தன. முகத்தில் இருந்த சுருக்கங்கள் புடைத்துக் கொண்டு நின்றன.

மாணிக்கம் அவர் சொன்னதை யெல்லாம் ஆவலோடு கேட்டான். அவர் வாழ்க்கையில் பல கோணங்களில் அடிபட்டவர். தாம் அனுபவித்ததை உணர்ச்சியோடு சொல்கிறார். நாளைக் கெல்லாம் இவரைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கவா போகிறது என்று நினைத்து அவர் சொல்லும் விஷயங்களைக் கவனித்து கேட்டான்.

"நம் நாட்டில் ஏழைகள் அதிகமாக இருப்பதற்குக் காரணமே சோம்பல் குணம் படைத்த பண்ணை முதலாளிகள் தான். பாதிப்பேருக்கு நிலத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது. நிலத்தை வாங்கிப் போட்டு விட்டுப் பட்டணத்தில் வசிக்கிறார்கள். நிலத்தைப் பற்றி நான் சொல்கிறேன். நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். நிலத்தில் எப்பொழுதும் விளையும். அதற்காகத்தானே அது மனிதனுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது; கெட்டுப் போனது நிலமே இல்லை; மனிதர்கள் தான். அவர்களுடைய சோம்பேறித்தனம் தான். உழைக்கும் கை நல்லதாக இருந்தால் கல்லில் கூட விளையும். கல்லைப் பிளந்து உழுது பயிரிடும் மக்களைப் பார்த்திருக்கிறேன். பாருங்கள் கொஞ்சமாக நிலம் வைத்திருக்கிறவர் நிலத்தை விட அதிகமாக நிலம் வைத்திருப்பவர் நிலத்தில் விளைச்சல் குறைச்சலாக இருக்கிறது! இது யாருக்கு நஷ்டம்! அதிக நிலம் படைத்த பண்ணையாருக்கா! இல்லை; நமக்குத்தான். இதை யெல்லாம் யார் நினைத்துப் பார்க்கிறார்கள்!" என்று கேட்டார் குடியானவர்.

"ஆமாம் நீங்கள் சொல்லுவ தெல்லாம் உண்மைதான்" என்றனர் மாணிக்கமும் சுந்தரியும். "நீங்கள் ஒருத்தர் காட்டிய சிரத்தையில் ஆயிரத்தில் ஒரு பங்கு இந்த ஊரிலேயே பணம் படைத்த பெரிய பண்ணையார்கள் காண்பித்திருந்தால் இந்த ஊரை முற்றும் எவ்வளவோ சிறந்த முறையில் மாற்றி யிருக்கலாமே! அவர்கள் எங்கே ஊரைக் கவனிக்கிறார்கள்! தங்கள் போலி கௌரவமும், தங்களுக்குக் கிராமத்தில் உள்ளவர்கள் கீழ்ப் படிந்து கிடக்கவேண்டும் என்பதுதானே அவர்கள் குறிக்கோளாக இருக்கிறது" என்றான் மாணிக்கம்.

"நன்றாகச் சொன்னீர்கள். கிராமத்தில் கொஞ்ச நாள் இருப்பதற்குள்ளே கிராமத்தைப் பற்றித் தெரிந்து கொண்டீர்களே!" என்றார் குடியானவர்.

அப்பொழுது அங்கு வந்த பாட்டி "சாப்பிடுவதற்கு நாழியாகி விட்டது. சாப்பிட்டுவிட்டுப் பேசலாமே" என்றாள்.

"இதோ வந்து விட்டோம் பாட்டி" என்று எழுந்தாள் சுந்தரி.

மூவரும் அங்கிருந்து கிளம்பினர். போகும் போது கூடத்தில் ஓரமாக இருந்த ஒரு இடத்தைக் காண்பித்து "நான் சிறு குழந்தையாக இருக்கும் போது 'இங்கு தான் உட்கார்ந்து சாப்பிடுவேன்' என்று பிடிவாதம் பிடிப்பேன். என் தாயார் அதற்குச் சம்மதிக்க மாட்டாள். என் தகப்பனார் என்னை இந்த இடத்திலேயே சாப்பிடும்படி செய்வார். அதற்குத் தடை செய்த என் அம்மாவை அதற்காகக் கோபித்துக் கொள்வார்" என்றாள்.

"பழைய சுதந்திர வாழ்வு இனி கிடைக்குமா!" என்றான் மாணிக்கம்.

"குழந்தைப் பருவம் இனிமேல் எப்படித் திரும்பி வரும்!" என்றார் குடியானவர்.

சுந்தரி மெதுவாகச் சிரித்தாள்.

மாணிக்கம் அவள் சிரித்ததைப் பார்த்தான். அப்போது மனத்துக்குள் நினைத்தான்:

"ஆகா! சுந்தரிதான் எவ்வளவு சுதந்திரமானவள். அவள் குணம் எவ்வளவு உயர்ந்தது. சுந்தரி

சிரிப்பதை இன்றெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாமே. முன்பு அவள் அழகு என்னை அவளுக்கு அடிமைப் படுத்தி விட்டது. இன்று அவள் உயர்ந்த குணம் என்னை அவளுக்கு அடிமைப் படுத்தி விட்டது!' இப்படி நினைத்துக் கொண்டே அவன் தன் தலையை நிமிர்த்தி அவளைப் பார்த்தான். அவள் இதை யெல்லாம் கவனிக்காமல் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள். சுந்தரியின் முகம் அப்பொழுது மிக அழகாக விளங்கியது. அவள் தன் இளமைப் பருவத்தை எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தாள் என்பது அவள் முகத்தில் தவழ்ந்து விளையாடிய குறும்புப் புன்னகையிலிருந்து நன்றாகத் தெரிந்து கொள்ள முடிந்தது.

பிறகு மௌனமாகச் சமையல் அறைக்குச் சென்றார்கள். அங்கு மூன்று பேரும் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிட்டார்கள்.

சாப்பிட உட்கார்ந்தது முதல் மாணிக்கம் வாயை மூடவே இல்லை. பேசிக்கொண்டே இருந்தான். சுந்தரியின் அபார மேதையையும் அவளுடைய தைரியத்தையும் அவள் தன் தந்தையைத் தன் காரியத்துக்கு ஏற்றபடி சிறு குழந்தையாக இருந்த போதிலிருந்தே திருப்பி வைத்திருந்த திறமையையும் பற்றிச் சொல்லிச் சொல்லிப் புகழ்ந்து கொண்டிருந்தான்.

சாப்பாட்டுக்குப் பின்னால் குடியானவர் சுந்தரியிடமும் மாணிக்கத்திடமும் மிகுந்த அன்புடன் வணங்கி விடை பெற்றுக் கொண்டார். "காலையில் நாலு மணிக்கெல்லாம் வண்டியுடன் வந்து விடுகிறேன். பொழுது விடிவதற்குள்ளாகவே புறப்பட்டு விடுவோம்" என்றார் குடியானவர்.

"அப்படியே செய்வோம். நாங்களும் நாலு மணிக்கே எழுந்திருந்து கிளம்புவதற்குத் தயாராக இருக்கிறோம்" என்றாள் சுந்தரி.

குடியானவர் அவர்களிட மிருந்து மீண்டும் விடைபெற்றுக்கொண்டு சென்று விட்டார்.

** ** **

கிராமத்துப் புதுச்சாலையில் அவர்கள் மூவரும் உட்கார்ந்திருந்த வில் வண்டி 'ஜல் ஜல்' என்ற சலங்கைச் சத்தத்துடன் போய்க் கொண்டிருந்தது. அவர்கள் புதிதாகச் செப்பனிட்ட புதிய சாலையைப் பார்த்துப் பெருமைப்பட்ட வண்ணம் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தனர்.

வண்டியில் அவர்கள் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டே சென்றார்கள்.

சுந்தரி தன் மனத்தில் எல்லாருக்கும் நன்மை பயக்கக் கூடிய சிந்தனைகள் பல விரைந்து எழுவதை உணர்ந்தாள். அவைகளைச் சொற்களால் சேர்த்துச் சொல்ல அவளால் முடியவில்லை. அதனால் அவள் உள்ளுக்குள்ளேயே குமுறினாள். பல வித எண்ணங்கள் அவளை அமுக்கிக் கொண்டிருந்ததை அவள் உணர்ந்தாள். இனியனைப் பற்றிப் பிரமாதமாக எண்ணிப் பார்த்தாள். தன் அருகில் இருக்கும் மாணிக்கத்தைப் பற்றிச் சிந்தித்தாள். அவள் இதுவரை அன்போடு நேசித்தவர்கள் அவர்கள் இருவரும்தான். அவள் அறிந்த வீரமான காரியங்கள் அனைத்தும் அவர்கள் இருவரிடமும் பொருந்தி யிருப்பதாக எண்ணினாள். அந்த எண்ணத்தால் அவள் உச்சி குளிர்ந்தது, உள்ளம் குளிர்ந்தது. அவள் ஆனந்தத்தில் திளைத்தாள்.

"இதெல்லாம் எவ்வளவு அருமையாக இருக்கிறது. கண்ணால் பார்க்கும்போதே ஆனந்தமாக இருக்கிறது. காலையிலேயே மக்கள் தங்கள் தொழிலுக்காக மண் வெட்டியையும், ஏர் கலப்பையும் சுமந்துகொண்டு எவ்வளவு ஆவலுடன் செல்லுகின்றனர். அதேபோல அவர்கள் அறியாமையைப் போக்குவதற்குப் பாடுபட நாம் போகிறோம்" என்றார் குடியானவர்.

"உண்மைதான்" என்றான் மாணிக்கம்.

இனியனையும் இதர பல விஷயங்களையும் பற்றி அவர்கள் பேசிக்கொண்டே சென்றார்கள். கிராமத்துச் சின்ன சாலையைக் கடந்து பெரிய சாலையை அவர்கள் வந்தடைந்ததும் சூரியன் அவர்களை எதிர்கொள்வதற்காக வந்து விட்டான். உடனே சூரியன் கண்ணுக்குப் புலப்படா விட்டாலும் அவனுடைய செங்கிரணங்கள் வான மண்டலத்தில் பரவி விட்டன. பக்கங்களில் படர்ந்திருந்த பசுமையான புற்களில் பதுங்கி நின்ற பனித் துளிகள் நவரத்தினங்களைப் போல் பல வர்ணங்களில் மின்னின. பட்சி ஜாலங்கள் எழுந்து தங்கள் இன்னிசையால் ஆனந்தத்தை வாரி இறைத்துக்கொண்டிருந்தன. காகங்கள் கரைந்த வண்ணம் சிறகடித்துப் பறந்தன. சூரிய வெளிச்சத்தில் தொலை தூரம் வரை பாதை தெளிவாகத் தெரிந்தது!

** ** **

சுந்தரி தன்னுடைய அறையில் படுக்கையில் படுத்தபடி ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். அவளுக்குப் புத்தகத்தின் மீதே கவனம் செல்லவில்லை. அவள் மனத்தில் மாணிக்கத்தின் அழகிய உருவம் தோன்றிக் கொண்டே இருந்தது. அவனைப் பற்றிய எண்ணங்கள் சுழன்று சுழன்று வந்து கொண்டிருந்தன.




கொஞ்ச நாட்களுக்கு முன் அவள் பார்த்துப் பழகிய மாணிக்கம் இல்லை அவன். இப்பொழுது அவள் உள்ளத்தில் இடம் பெற்று விட்டான். அவன் மிகச் சிறந்த குணமுடையவன் என்பதில் சந்தேகமில்லை. இப்பொழுதெல்லாம் சதா அவனைக் காண்பதற்காகவே அவள் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தாள். அவர்கள் மத்தியில் குறுக்கிடுவதற்கு யாரும் இல்லை.

மாணிக்கம் முன்பெல்லாம் ஓயாது புகை பிடிப்பான். இப்பொழுது சுந்தரிக்காக அதையும் விட்டு விட்டான். இருந்தாலும் எப்போதோ நினைவு வரும்போது, மனத்தில் எல்லையற்ற குதூகலம் ஏற்படும்போது மட்டும் சிகரெட் குடிப்பான். கையில் புகையும் சிகரெட்டுடன் உல்லாசமாகப் பாடிக் கொண்டே அவன் தன்னை நெருங்கி வருவதாகச் சுந்தரி நினைத்தாள். அந்தக் காட்சியை அப்படியே கற்பனை செய்து அனுபவித்துக் கொண்டே படித்துக்கொண்டிருந்தாள்.

தூரத்தில் எங்கிருந்தோ இனிய கானம் காற்றிலே மிதந்து வந்தது. யாரோ இனிமையாகப் பாட ஆரம்பித்தார்கள். முதலில் ஒரு குரல் மட்டும் கேட்டது. பிறகு இரண்டு மூன்று நான்கு என்று ஒன்றன்பின் ஒன்றாகப் பல குரல்கள் சேர்ந்து கேட்டன. திடீரென்று அதே பாட்டு கோஷ்டிகானமாகக் கேட்டது.

வரப் போகும் நல்ல காரியத்துக்கு வாழ்த்துக் கூறுவதுபோல அந்தக் கோஷ்டிகானம் கேட்டது.

** ** **

இனியனும் அவன் தந்தையும் அவர்கள் வீட்டுக்குள் எதிரும் புதிருமாக உட்கார்ந்து கொண்டிருந்தனர். தன் தந்தையைச் சந்திக்கும்போது மந்தமாக இருக்கக்கூடாது என்பதற்காகவும் தன் மீது தந்தைக்கு வீணாகக் கோபம் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவும் இனியன் மிகவும் ஜாக்கிரதையாக இருந்தான். தேன்மொழி விஷயமாகத் தந்தை தன்மீது கோபமாக இருப்பதால் எங்கே அதைப் பற்றிப் பேச்சு வருமோ என்று பயந்து கொண்டிருந்தான்.

"உன்னுடைய பிடிவாதத்தால் உன் பாகத்தைப் பிரித்துக் கொடுத்து உன்னை வீட்டை விட்டுத் தனியாக வைத்துவிடப் போகிறார் உன்னுடைய அப்பா. ஜாக்கிரதை!" என்று அவனிடம் தந்தைக்கு வேண்டிய ஒருவர் சொன்னது அப்பொழுது அவன் நினைவுக்கு வந்தது.

அந்த மனிதன் சொன்ன அர்த்தமற்ற வார்த்தைகள் நினைவுக்கு வந்ததும், தன் தந்தைமீது மனசுக்குள் கோபம் பொங்கி எரிந்தது. இதையெல்லாவற்றையும் விடத் தன் தந்தை காண்பிக்கும் சாதி வித்தியாசத்தின் மீது அவனுக்கு அதிகக் கோபம் வந்தது. உயர்ந்த சாதி என்று பேசிக்கொள்ளும் இவர்கள் என்ன ஒழுங்கு! மனிதர்களுக்குள் ஏற்றத் தாழ்வு என்ன வேண்டிக் கிடக்கிறது! தேன்மொழியின் உயர்ந்த குணத்தையும், அவள் தன்மீது காட்டும் அன்பையும் உணராமல் சாதியின் பெயரால் அவளைத் தள்ளி வைக்கச் சொல்லுவதை நினைக்கும்போது அவனுக்குத் தாங்கமுடியாத வேதனை உண்டாயிற்று.

எனவே அவன் தன் தந்தையிடம் போகும்போது, தன் அருமைத் தந்தை தன்னுடைய எதிர்கால இன்ப வாழ்வில் மலைபோல குறுக்கே நிற்கிறார் என்றும், அந்த மலைமீது ஏறி அப்புறம் செல்வதோ, அல்லது அதைச் சுற்றி வளைத்து வருவதோ இயலாத காரியம் என்றும் நினைத்தான். என்றாலும் அவன் மனத்தில் தந்தையைப் பற்றி இதுவரையில் இருந்து வந்த பயம் கொஞ்சம் குறைந்தே இருந்தது! எனவே அவன் தன் தந்தைக்கு எதிராக உட்கார்ந்து அவரிடம் இந்த விஷயமாக வாதாடும் அளவுக்குத் துணிவாற்றலோடு உட்கார்ந்திருந்தான்.

அவர்கள் இருவரும் நீண்ட நேரமாக உட்கார்ந்திருந்தாலும் ஒருவருக்கொருவர் வாயைத் திறக்கவே இல்லை. அப்படியே பேசினாலும் ஏதோ வேண்டாத விஷயத்தைப் பற்றிப் பேசினார்கள். வீட்டுக் கூடத்துக்கு மத்தியில் இருவரும் ஒருவருக்கொருவர் எதிராக உட்கார்ந்திருந்தனர். இருவர் மனத்திலும் கோபம் அதிகரித்துக் கொண்டே இருந்தது. இந்தக் கோபம் சீக்கிரமே பொங்கி எழுந்து ஏதோ விபரீதத்தை உண்டு பண்ணப் போகிறது என்பது இருவருக்குமே தெரியும்.

கூடத்துக் கொடியில் கிடந்த ஈர வேஷ்டி காற்றில் லேசாக ஆடி படபடத்தது. சுவரில் இருந்த இரண்டு பெரிய பல்லிகள் 'கீச்சு கீச்சு' என்று கத்திக் கொண்டிருந்தன. ஆனால் இந்தச் சத்தங்கள் எல்லாம் எதையோ கெஞ்சிக் கேட்பது போல மிகத் தாழ்ந்து ஒலித்தன.

"நீ இன்னும் உன் மனத்தை மாற்றிக்கொள்ளவில்லையா!" என்றார் தந்தை.

"எதைப் பற்றிக் கேட்கிறீர்கள்!"

"உன்னுடைய திருமணத்தைப் பற்றித்தான்" என்று சற்றுக் கடுமையாகக் கேட்டார் தந்தை.

இனியன் பளிச்சென்று பதில் சொன்னான்:

"இல்லை! மாற்றிக் கொள்ளவில்லை!"

"நீ இன்னும் மாற்றிக் கொள்ளவில்லையா!" என்று முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டே பேச ஆரம்பித்தார் தந்தை. "நான் என்ன செய்யப் போகிறேன் என்பதை முடிவு செய்து விட்டேன். என் சொல்படி நீ நடக்க இஷ்டப்படாவிட்டாலும், நீ சுதந்திரமாக இருக்கலாம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்துவைத்து விட்டேன். உனக்குச் சேரவேண்டிய நிலங்களைப் பிரித்து விட்டேன். இனி நீ உன் இஷ்டப்படி இருக்கலாம்" என்றார் தந்தை. அங்கு வெள்ளி டம்ளரில் இருந்த தண்ணீரைக் கோபத்தோடு எடுத்து ஒரே மடக்கில் குடித்தார். டம்ளரைப் பலமாகக் கீழ வைத்து அழுத்தினார். டம்ளர் கோணல் மாணலாக வளைந்து நசுங்கியது.

இனியன் குறுநகை புரிந்தான். வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை.

"உன் தந்தை உன்னிடம் பேசுவதைக் கண்டு சிரிக்கவா செய்கிறாய்! ஜாக்கிரதையாக இரு. உனக்குச் சேரவேண்டிய நிலங்களைப் பிரித்துக் கொடுத்து விட்டதால் நீ இஷ்டம் போலத் திரியலாம். இருந்தாலும்......" என்று வார்த்தையை முடிக்காமல் நிறுத்தினார் தந்தை. அவர் கோப முகத்தில் அனல் தெறித்தது.

தந்தையின் கண்டிப்பு இனியனின் கோபத்தைக் கிளறி விட்டது. என்றாலும் அதை அடக்கிக்கொண்டான். தந்தையை இன்னும் கோபம் மூளும்படிச் செய்யக்கூடாது என்பதற்காக எதுவும் வாய்விட்டுச் சொல்லாமல் கோபத்தை உள்ளே அடக்கிப் பார்த்தான். சொல்லப்போனால், உண்மையில் அவன் தன் தந்தையின் கண்களில் தோன்றும் கொடூரமான பயங்கரப் பார்வையைக் கண்டு பயந்தே போனான்.

"உன்னைப் பெற்ற தகப்பன் சொல்லுகிறேன், நீ அந்தக் கீழ்ச் சாதிப் பெண்ணை மணம் புரிந்து கொள்ளக் கூடாது என்று. நீ என்னைப் பார்த்துச் சிரிக்கிறாயா!" என்று உறுமினார் தந்தை. "என்ன இப்பொழுது கடைசியாகக் கேட்கிறேன். நீ அந்த சாதி கெட்ட பெண்ணை மறந்துவிடப் போகிறாயா, இல்லையா!"

வழக்கமாக 2-நிமிஷம் பிரஷால் தேய்த்தால்

கால்கேட் டூத் பவுடர்

மூன்று நன்மைகளையும் அளிக்கிறது!

✓ வாயில் நறுமணம்!
✓ ஒளிவீசும் பற்கள்!
✓ சொத்தை குறையும்!



வாய்க்குப் பாதுகாப்பும், சுத்தமான ஒளிப் பற்களும் பெற, பல் டாக்டர் அங்கீகரிக்கும் இந்த முறையில் தினசரி கால்கேட் டூத்பவுடரை உபயோகியுங்கள் :

- சாப்பிட்டவுடன் கால்கேட் டூத்பவுடரால் ப்ற்களை 2 நிமிஷம் பிரஷ்கொண்டு தேய்க்கவும்.
- பல்லின் நுனி, முன்புறம், பின்புறம் எல்லாவற்றையும் தேய்க்கவும்.
- எப்போதும் ஈற்றிலிருந்து பல்நுனி நோக்கி தேய்க்கவும்.

பெரிய சைஸ் வாங்கி பணத்தை மிச்சப்படுத்துக

கைகண்ட முறையை இன்றே கையாளுங்கள்!

TPC/14

பல் டாக்டர் அங்கீகரித்த சிறந்த பலன்தரும் முறை!

"நான் அவனை மறக்க மாட்டேன். அவன் சாதி கெட்டவன் இல்லை" என்று தலையை ஆட்டிக் கொண்டு உறுதியாகச் சொன்னான் இனியன்.

"நீ அவனை மறக்க மாட்டாயா!" என்று கர்ஜித்தார் தந்தை. தன் கைகளைத் தரையில் ஊன்றிக் கொண்டு எழுந்திருந்தார். "நீ யாரோடு பேசிக்கொண்டிருக்கிறாய் என்பதை மறந்து விட்டாயா? பண்ணையாரின் குடும்ப கௌரவம் எத்தகையது தெரியுமா? அதை ஒரே நொடியில் அழித்துவிடப் பார்க்கிறாயே!" என்றார்.

அவர் உதடுகள் நடுங்கின. முகம் கோரமாகக் கோணியது. அவர் கழுத்து நரம்புகள் எல்லாம் தடித்துப் புடைத்து நின்றன.

"நான் ஒன்றும் நமது குடும்பக் கௌரவத்தைக் குலைக்க முற்படவில்லை" என்று தணிந்த குரலில் தன் தந்தையைப் பார்க்காமலே சொன்னான்.

"மூடு வாயை. என் முன் நிற்காமல் தொலைந்து போ!" என்று முழங்கினார் தந்தை.

இனியனுக்கு என்ன பதில் சொல்லுவது என்று புரியவில்லை. தனக்கு ஏற்பட்டுள்ள நிலையை ஒரு கணம் எண்ணிப் பார்த்தான். மறுகணம் பேசாமல் அங்கிருந்து கிளம்பினான்.

சலனமிழந்து மங்கிப் போன கண்களால் இனியன் வாய் பேசாமல் போவதைப் பார்த்தார் தந்தை. ஏற்கனவே அவன் கம்பீரமாகத் தோன்றினான். அதோ அவன் தெரு வாசலைக் கடந்து போகிறான். போயே போய் விட்டான். ஒரு கணம் கழிந்து கூடத்தில் இனியன் இருந்த இடத்தில் மீண்டும் அவன் சுருள்சுருளான மயிர்கள் நிறைந்த தலை, விசாலமான தோள், நீண்ட கைகள், வாட்டசாட்டமான உடல் முழுவதுமே தோன்றிக் கம்பீரமாகக் காட்சி அளித்தான் இனியன்.

தந்தை வெகு நேரம் வரை இனியன் சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்தார். இடுப்பு வலிக்கும் வரையில் நின்று கொண்டிருந்தார். பிறகு அவர் நிமிர்ந்து நின்றார். தம் ஒவ்வொரு அவயவத்திலும் வலி எடுப்பதை உணர்ந்து தள்ளாடினார். அவர் காதில் ஏதோ இரைந்தது. இதயம் வெகு வேகமாக அடித்துக் கொண்டது. முதுகு தாங்க முடியாமல் வலித்தது.

"என்ன இருந்தாலும் அவன் என் மகன். நான் அவன் இஷ்டத்துக்கு உட்பட்டு நடந்தால் தான் என்ன! அவன் சந்தோஷமாக இருக்க வேண்டியதற்கு வழி செய்வது தானே என்னுடைய கடமை" என்று மெதுவாகச் சொல்லிக் கொண்டே தொப்பென்று உட்கார்ந்தார்.

அவருக்கு முன்னால் உள்ள ஒவ்வொரு பொருள்களும் அவரை விட்டுப் பிரிந்து செல்லுவதைப் போல உணர்ந்தார். தன் மகன் சொன்ன உறுதியான வார்த்தைகளே அவர் மனத்தில் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

பண்ணையார் சுற்று முற்றும் பார்த்தார். நீண்ட பெருமூச்சு விட்டார். நிமிர்ந்து நிற்கும் அவர் தலை கவிழ்ந்து கிடந்தது. மங்கிய சிந்தனைகள் அவர் சோர்ந்த மனத்தில் உருவாயின.


ஒரு தவறான வழக்கத்துக்காக, யாரோ செய்து விட்ட உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்ற பிரிவினைக்காக, பண்ணையார் தம் அருமை மகனை, இருபது வருஷங்களுக்கு மேலாக, அன்போடு வளர்த்து வந்த புத்திரனை, தன்னிடம் பாசமாக இருந்துவந்த புதல்வனைப் புறக்கணித்து விட்டார். போலி கௌரவத்தை, மௌடீகத்தனமான சாதித் திமிரை விட்டுக் கொடுக்க அவர் மனம் துணியவில்லை. இருந்தாலும் மகனின் மன உறுதி அவனது குற்றமற்ற அன்பு அவர் இதயத்தில் புகுந்து துளைக்கத் தொடங்கி விட்டது.

பண்ணையார் தலையைக் குனிந்து கொண்டு உட்கார்ந்திருந்தார். அவர் கண் பார்வையை மறைத்து, கண்களில் பொங்கிநிற்கும் கண்ணீரை இமைகள் மூடி மூடி வெளியே பிழிந்து தள்ளின.

** ** **

இனியன் தன் தந்தையை விட்டுப் பிரிந்து வந்ததும் தன் தந்தையார் சொன்ன சொற்களையெல்லாம் நினைத்துப் பார்த்தான். அவைகள் தீயைப் போல் அவனைச் சுட்டன. அவன் மூளையைப் புண்படுத்தின. அவன் இதயத்தைச் சவுக்கால் அடித்து வதைத்தன. அவன் தன் தந்தையிடம் காட்டிய உயர்ந்த அன்பை அந்தச் சொற்கள் பாழ்படுத்தின. அவனையே அவரிடம் இருந்து துரத்துவது போலக் காணப்பட்டன. தந்தையை விட்டு இனியனைப் பிரிப்பது போலவும், இது வரை அவன் இருதயத்தில் வளர்ந்து முதிர்ந்த நல்ல எண்ணங்கள் எல்லாவற்றையும்

ரொம்ப வந்தனம்!



அந்தச் சொற்கள் வெட்டி வீழ்த்தியது போலிருந்தன. ஏதோ கொடூரமான சக்தி அவனைத் துன்புறுத்துவது போலவும் தோள்களையும் நெஞ்சையும் பிடித்து நசுக்குவது போலவும் அவன் நெடிய உருவத்தை நசுக்கிப் பிழிவது போலவும் வேதனைப் பட்டான்.

பின்னர் இதயத்தைத் திடப் படுத்திக் கொண்டு அலை மோதிக் கொண்டிருந்த தன் உள்ளத்தை வயிரமாக்கிக் கொண்டான். அந்த முயற்சியில் அவன் உச்சி முதல் உள்ளங் கால் வரையில் உடல் முழுவதுமே குலுங்கி விட்டது. அந்த உன்னத முயற்சியால் அப்போது தன்னிடம் இருந்த அற்பமான சிந்தனைகளை அழித்து விட்டான்.

உடனே குழப்பம் நீங்கி, அவனுக்கு ஒரு தெம்பு உண்டாகி விட்டது. 'தேன்மொழியை விட்டு விடுவதா! யார் என்ன சொன்னாலும் சரி. தேன் மொழிதான் என் மனைவி. அவள் இல்லாமல் நானில்லை' என்று பொங்கி வந்த இதயத்துடனே அவன் தனக்குள்ளாகவே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டான்.

பல நிமிடங்கள் அவன் திகைத்துப் போய் நின்று விட்டதால், சிதறிப்போன பல சிந்தனைகள் முறையாக ஒன்று சேர்ந்து விட்டன. அவன் இதயத் துடிப்பு மீண்டும் அமைதியாகி விட்டது.

தனக்குப் புதிதாகக் கிடைத்துள்ள நிலங்களைப் பற்றி நினைத்தான். அதில் என்ன என்ன செய்ய வேண்டும் என்று ஒரு திட்டம் போட்டான். அவன் சிந்தனை வேகமாகச் செயல் பட்டது. அவன் கிராமத்து மக்களின் அவல நிலையை ஒரு கணம் எண்ணிப் பார்த்தான்.

'வறுமை, பசி, நோய்,—ஏழை விவசாயி மக்கள் நாள் எல்லாம் உழைத்து ஓடாய்ப் போனதில் கிடைக்கும் பரிசு. இதனால்தான் மக்கள் திருடவும் ஒழுக்கம் கெடவும் ஏற்படுகிறது. பணக்காரர்களைப்பார்த்து அவர்கள் பொறுமைப்படுகிறார்கள். அவர்கள் பருத்துக் கொழுத்து அமைதியாக இருக்கும் ஆனந்தத்தைக் கண்டு சிரிக்கிறார்கள். ஏழைகளின் உழைப்பைக் கொண்டு சுகபோக உல்லாச வாழ்க்கை வாழுவதைக் கண்டால் அவர்களின் மனம் வேதனைப் படாதா! அவர்கள் மனத்தைக் கெடுப்பதற்கு—கெடுப்பதற்கா! இல்லை! அறியாமையைப் போக்குவதற்கு எத்தனை பேர் இப்பொழுது அவர்களுக்காக உழைக்கிறார்கள்! உண்மையை உணர்ந்து கொண்ட ஏழை மக்கள் ஏன் கிளர்ச்சி செய்ய மாட்டார்கள்! அப்படிக் கிளர்ச்சி செய்யும் மக்கள் பிறகு ஒழுங்காக இருப்பார்களா என்பது வேறு விஷயம். ஏழை மக்கள் பட்டினியாலும் பசியாலும் மூடராக இருக்கிறார்கள். பணம் படைத்தவர்கள் பணத் திமிரால் அறிவிழந்து நிற்கிறார்கள். இந்த இரண்டுக்கும் நாம் இடம் கொடுக்கக் கூடாது' என்று எண்ணினான் இனியன்.

இனியனின் மனசு இளம் மனசு அல்லவா! அதனால் அந்த உள்ளம் எப்பொழுதும் உண்மைக்கு அருகிலேயே சுற்றிக் கொண்டிருக்கிறது. அவன் மேலும் நினைத்தான்.

'இதுவரையில் தன் நிலங்களில் பாடுபட்டு வந்த உழவர்களுக்கு நன்மை செய்ய எண்ணினான். அவர்கள் இதுவரை விளைந்த நெல்லில் அளந்து வந்ததுபோல் அடுத்த ஆண்டு அளக்க வேண்டியதில்லை. நிலத்தில் நன்றாகப் பாடுபட வேண்டியது. சென்ற வருடத்தைவிட எவ்வளவு அதிகமாக நெல்லைக் கண்டு முதல் செய்கிறார்களோ அந்த அதிக நெல்லை அவர்களுக்கே இனாமாகக் கொடுத்துவிட வேண்டியது. அத்துடன் அவர்களுக்கு வழக்கமாகச் சேரும் நெல்லையும் கொடுக்க வேண்டியது என்ற ஒரு புதுமுறையைப் புகுத்த எண்ணினான். இதனால் அவர்கள் வயலிலும் நன்றாகப் பாடுபடுவார்கள். பாடுபட்டதற்குப் பலனும் அடைவார்கள். நாட்டில் உணவுப் பஞ்சமும் குறையும்' என்று நினைத்தான்.

அடுத்த கணம் அவனுக்குத் தேன்மொழியின் நினைவு வந்தது. அந்த உயிர் துடிக்கும் பொற்பாவையைப் பார்க்க விரைந்தான்.

தேன்மொழி வழக்கமாக இருக்கும் இடத்தில் தான் உட்கார்ந்திருந்தாள். பருவத்தின் தலைவாசலில் காத்து நிற்கும் கன்னிப் பெண்ணாக, பூத்துக் குலுங்கும் புத்தம் புது மலராக, வசந்தத்தில் கொஞ்சிக் குலவும் வண்ணக் கிளியைப் போல் அவள் காட்சி அளித்தாள். இனியனின் கண்கள் அவளைப் பார்த்தன. அவன் கண் பார்வையில் அவள் அழகின் அலைகள் ஒயிலோடு மிதந்து கொண்டிருந்தன.

"தேன்மொழி!" என்று கொஞ்சலாக அழைத்துக் கொண்டு அவளை நெருங்கி வந்தான் இனியன். வழக்கத்தை விட உற்சாகமாகப் பேசினான்.

"தேன்மொழி! உன் உடல் வனப்பைக் கண்டு நான் உன்னை நேசிக்கவில்லை. உன் உள்ளத்து அன்பில் மயங்கி நான் உன் அடிமையானேன். தாமரைக் குளத்தில் தளதளவென்று பூத்துக் குலுங்கும் பொன் தாமரையில் கூட உன்னைப் போன்ற ஒரு தாமரை மலர் கிடைக்காது. உலகத்தில் வேறெங்கும் உன்னைப்போன்ற அழகு உருவத்தை, அன்பின் சிகரத்தைக் காண முடியாது. இதையெல்லாம் என் பெற்றோர்கள் உணரவில்லை. அதனால் பாதகமில்லை!" என்றான்.

இனியனின் கொஞ்சும் மொழியில் கடைக் கண் வீச்சில் தேன்மொழி தன்னை மறந்தாள். வசந்த காலத்துத் தென்றலில் அசையும் தாமரை மலர் போல மெதுவாக அசைந்து இனியனிடம் நெருங்கினாள். தன் முத்துப் பற்களைக் காட்டி ஒரு மோகனப் புன்னகை செய்து நாணிக் கோணிக் கொண்டு தலைகுனிந்து நின்றாள்.

இனியன் அவள் காதுக்கு அருகில் சென்று எதையோ இரகசியமாகச் சொன்னான். துள்ளிக் குதித்துக் கொண்டு உற்சாகமாகச் சொன்னான்.

ஆனால் இதைக் கேட்டுத் தேன்மொழி சிரிக்கவில்லை. புன்முறுவல் பூக்கவில்லை. திடீரென்று பயங்கரமாக விழித்தாள். "ஆகா, என்ன காரியம் நடந்து விட்டது! ஐயோ பயங்கரமாக இருக்கிறதே. என்னால் தாங்க முடியவில்லையே. எல்லாம் போய் விட்டது. நான் எண்ணியதெல்லாம் வீணாகிவிட்டது" என்று அலறினாள். இனியனை விட்டு நகர்ந்து தூரத்தில் போய் நின்றாள். பூமியைக் குனிந்து பார்த்தாள். இனியனை நிமிர்ந்து பார்த்தாள். பெருமூச்சு விட்டாள். சோகமே உருவமாக அவள் அப்பொழுது நின்றாள். அவள் கொண்டு வந்து செப்புக் குடம்போல அவள் உள்ளமும் காலியாகி விட்டதை உணர்ந்தாள். வெகு அருகில் சேர்ந்து உட்கார்ந்து பேசிப் பழகிய இனியன் எங்கோ தலைக்கு மேலே எட்டாத உயரத்தில் போய்விட்டதாக வேதனைப் பட்டாள். சித்தமல்லிக் கிராமம் மக்கள் அற்ற பாழ் வெளியாகிவிட்டது போல் துயரப்பட்டாள்.

இனியன் தன் கையைப் பிசைந்து கொண்டு தேன் மொழியை வியப்போடு பார்த்தான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏதோ தன் தலையில் மோதி நொறுக்கியது போலத் துடித்தான்.

இனியன் அவள் காதில் என்ன ரகசியத்தைச் சொன்னான்! அதைக் கேட்டு அவள் ஏன் அப்படி வேதனைப் படுகிறாள்!...... (தொடரும்)

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki Press,
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras 10.

வீட்டு உணவும் விஷமாகலாம்!



"என் குழந்தைகளின் நோய்க்கு காரணம் நானே என்று டாக்டர் சொன்னபோது நான் துணுக்குற்றேன்.

சென்ற ஆறு மாதத்திற்குள் என் குழந்தைகள் இருமுறை வயிற்று நோயால் அவதிப்பட்டார்கள். போனமாதம் என் கணவர் வேறு சீக்காய்ப் படுத்தார். என்ன கஷ்டம்! வீட்டுச் செலவை சமாளிப்பதே சிரமமாயிருக்கும் பொழுது டாக்டருக்கு வேறு கொடுக்க வேண்டுமென்றால் என்ன செய்வது?

ஒருவர் மாற்றி ஒருவர் சீக்காய் படுத்தது என் மனோ நிம்மதியைக் குலைத்தது. நானே டாக்டரிடம் சென்றேன்.

டாக்டர்: நீங்கள் சமைப்பதில் கோளாறு ஒன்றுமில்லையே?

நான்: ஏன், எப்பொழுதும்போல்தான் சமைக்கிறேன்.

டாக்டர்: ஆமாம், நீங்கள் தாவரக்கொழுப்பை எப்படி வாங்குகிறீர்கள்?

நான்: சில்லறையாகத்தான் வாங்குகிறேன்.

டாக்டர்: அப்படிச் சொல்லுங்கள். சில்லறையாக விற்கப்படும் கொழுப்பு கலப்புப் பொருள்கள், அழுக்கான கைகள், ஈக்கள் இவைகளால் அசுத்தப் படுத்தப்பட்டு பலவகைக் கிருமிகள் வசிப்பதாயிருக்கலாம். அதுவே உங்கள் வீட்டில் வியாதிக்குக் காரணமாயிருக்கும்.

சில்லறையாக கொழுப்பு வாங்கினால் பணம் மிச்சப்படும் என்று நினைத்தேன். ஆனால் அதனால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைப் பார்க்கும்பொழுது அது ஒரு லாபமே இல்லை.

இப்பொழுது நான் காற்றுப்புகாத சீல் செய்த டின்னில் கிடைக்கும் டால்டா வனஸ்பதியையே வாங்குகிறேன். டால்டா வனஸ்பதி உணவிற்கு சிறந்த ருசியை அளிக்கிறது என்பதற்கு வேறென்ன அத்தாட்சி வேண்டும். என் வீட்டில் ஒருவரோடொருவர் போட்டிபோட்டுக்கொண்டு திரும்பத்திரும்ப கேட்டு சாப்பிடும் தமாஷே போதாதா?"

டால்டா வனஸ்பதி வாங்கினால் புத்தப் புதிய, சுத்தமான ஒரு சிறந்த ரக தாவரக் கொழுப்பு உங்களுக்கு கிடைக்கிறது. எப்பொழுதும் டால்டா வனஸ்பதி கிடைக்கும் பொழுது, கொழுப்புகளை சில்லறையாக வாங்கி ஏன் அவதிப்பட வேண்டும். இப்பொழுது டால்டா வனஸ்பதியில் விடமின் 'ஏ', 'டி' சேர்ந்திருக்கிறது. எல்லோரும் வாங்கக் கூடிய விலையில் 10, 5, 2, 1 பவுண்டு டின்களில் கிடைக்கிறது.



மர அடையாளமுள்ள டின்னைப் பார்த்து வாங்குங்கள்.

உங்கள் குழந்தைகளின் ஆரோக்கியத்தை
அபிவிருத்தி செய்வதெப்படி?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எழுதுங்கள்:

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

ஆரோக்கியமாயிருக்க

டால்டா வனஸ்பதியில் சமையுங்கள்

சிறந்த சமையல் — குறைந்த செலவு

HVM. 212-50 TM

Regd. No. M. 4392

Registered as a newspaper in Ceylon